www.tamilarangam.net

Registered in Srilanka

பல்முனைப் பேட்டி

அமைச்சர் ரணில் விக்ரமசிங்க

விலை: ரூபா 12.50

# அருவி

இதழ் - 9

இலங்கையில் வெளியாகும் ஜனரஞ்சக மாத இதழ்

1993 பங்குனி

## ஒற்றை ஆட்சியா?

## சமஷ்டி ஆட்சியா?

## பிரிவினையா?

## இந்திய மாதிரியா?



Aruvi - A Popular Tamil Magazine From Srilanka

www.tamilarangam.net


# PERFORMANCE PRINT

**We Specialize in**

**Desktop Publishing**
**Computer Typesetting in English, Singala & Tamil**
**Paper Plate Making**
**Offset and Letterpress Printing**

***Fast, Effcient, Friendly Service Assured***

***Contact:***

**65,College Street,**
**Kotahena,**
**Colombo 13.**
**Tel:434290**



BAVA BAVA

## ஏற்றுமதியாளர்கள்

ஜாம், கோடியல்
கறித்தூள், அரிசி
அரிசி மா, ஊறுகாய்
கராம்பு, ஏலம்
கறுவா

BAVA BAVA

## வெளிநாட்டு வியாபாரிகள் தொடர்பு கொள்ளவும்


BAVA BAVA

**BAVA TRADING (PVT) LTD.**
**202/7 W.A.Silva Mawatha,**
**Colombo-6,**
**Sri Lanka**
**Tel: 586364**
**Fax : 94-1-580721**

BAVA BAVA


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேர் காணல்
இனப் பிரச்சினை தொடர்பாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இலங்கை அரசாங்கத்தின் நிலைப் பாட்டை விளக்குகிறார்........................6



கனடா
உலகின் சமாதானப் பிரியனாக உலவி வரும் கனடாவில் நடந்த சர்வஜன வாக்கெடுப்பில் ஒரு எதிர்பாராத மக்கள் தீர்ப்பு.......................................... 12



"அக்னி"ப் பரீட்சை
ஏவுகணைத் தயாரிப்பில் இந்தியா முகம் கொடுத்து வரும் சர்வதேச நெருக்கடி கள்................................................... 22



சிறுகதை
கலைந்துபோனகனவுஇராஜ்ஜியம். நியமென நம்பிய இலட்சியங்கள் கனவாக மாறிவிட்ட போது..........24

இதைக்கொஞ்சம் கேளுங்கள்.........2

சிறுசெய்திகள்..............................3

கட்டுரை
இலங்கையில் ஒரு அரசியல் சுயம்வரம்...................................4

நேர்காணல்
தீர்வுக்கான பாதையில் சென்றுகொண்டிருக்கிறோம்...... 6

சர்வதேச விவகாரம்
ஒரு நொருங்கிய கண்ணாடி............12

அறிமுகம்
இலங்கைச் சஞ்சிகைகள்............... 17

சிறுகதை
அர்ப்பணங்கள்..............................18

அயல்நாடு
ஆயுதப் போட்டியில் "அக்னி"ப் பரீட்சை.................................................22

தகவல்கள்.....................................23

சிறுகதை
கலைந்து போன கனவு இராஜ்ஜியம்..................................24

கட்டுரை
சவாலும் சம்பிரதாயமும்....................29

உலகம்
புதிய சட்டம்..................................31

கவிதாப் பிரவாகம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிளாலிப்பாதையில் கொலையுண்டு ஒதுங்கின சடலங்கள். அவையாவும் பொதுமக்கள். ஏதோஒரு காரணத்துக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பை நோக்கி வந்தவர்கள். யாழ்ப்பாணமும் கொழும்பும் ஒரே இலங்கை நாட்டின் இரு பகுதிகள். ஆனால் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு வருவது, ஏதோ ஒரு நாட்டில் இருந்து இன்னோர் நாட்டிற்கு எல்லை தாண்டுவதைப் போல குற்றமாகக் கணிக்கப்பட்டு, அக்குற்றத்துக்கு கடலில் வைத்தே கேள்வியற்று சுட்டுக்கொல்வது தண்டனையும் ஆக்கப்பட்டு அதன்சாட்சியங்கள் சடலங்களாகக் கரையேறின. இச் சடலங்களின் மேல் அழுத்தி எழுதி கோடு கிழித்துக் காட்டப்பட்ட செய்தி **"இப் பாதை உங்களுக்கு தடைசெய்யப்பட்டுள்ளது"** என்பதே.

ஆம், யாழ்குடாநாட்டை விட்டு மக்கள் வெளியே போய்வர இருந்த ஒரேபாதையும் இப்போது தடை செய்யப்பட்டு விட்டது. ஏற்கனவே ஆனையிறவு நெடும்பாதை மூடப்பட்டு விட்டது. கொம்படிப்பாதையும் தடுக்கப்பட்டு விட்டது. பூனகரிப்பாதையும் மறுக்கப்பட்டு விட்டது. இத் தடைகளுக்குப் பின்னால் அரசாங்கத்துக்கும் ஏதும் நியாயங் கள் இருக்கலாம். புலிகளுக்கும் ஏதும் நியாயங்கள் இருக்கலாம். இவற்றுக்கிடையே மக்கள் பயணம் செய்யவேண்டிய அவசியங்களின் நியாயங்கள் செல்லாததாகிப் போகலாம். ஆனால் இந்தப் பயணங்கள் ஏதோ நாடுசுற்றிப்பார்க்க புறப்பட்ட உல்லாசப் பயணங்கள் அல்ல. ஏதோ ஒரு நிர்ப்பந்தம். வாழ்க்கையின் அத்தியவசியத்தேவை இந்தப் பயணங்களை தவிர்க்கமுடியாயதாக்குகிறது. அது வெளிநாட்டில் வசிக்கும்மகன் பெற்றோரின் செலவுக்கு அனுப்பிய பணத்தைப் பெற்றுக்கொள்ளவோ, அல்லது ஒரு திருமணம், மரணச்சடங்கு, ஒரு வெளிநாட்டுப் பயணம் காரணமாகவோ இருக்கலாம். அல்லது அரசாங்க அலுவல் காரணமாகவும் இருக்கலாம்.



ஆனால் மக்கள் தம் நாட்டிற்குள் பயணம் செய்வது அவர்களது அடிப்படை உரிமை என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். அத்தோடு இப்போக்குவரத்து தடுக்கப்பட்டால் யாழ்ப்பாணத்தில் பொருட்களின் தட்டுப்பாடு அதிகரிக்கும். விலைகள் ஏறும். மக்கள் மேலும் திண்டாடநேரிடும். மக்கள் மீது கரிசனை கொண்டவர்களாகக் கூறும் எவரும் இப் பிரச்சினையில் மக்களின் பக்கத்தில் உள்ள பிரச்சினையைப் புரிந்து கொள்வர். ஆனால் நம் துர்அதிஸ்டம். முன்னர் ஒரே நாளில் கொழும்பு வந்து திரும்பக்கூடியதாக இருந்த இப் பயணம் இன்று பெருந்தொகைப் பணச்செலவுடன் வான், டக்டர், படகு, சைக்கிள் என்று மாறி மாறி பயணம் செய்து இரண்டு பகுதிச் சோதனைகளுக் கூடாகவும் தேறி இரண்டு நாட்களுக்கு மேல் எடுத்துத் உலைக்கிறது. இருந்தும் இப் பயணப் பாதையை ஒழுங்கமைப்பதில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்தும் எதுவித நல்ல முடிவும் ஏற்படவில்லை. முன்னர் ஆனையிறவைத் திறப்பது தொடர்பாக ஒருசேதி அடிபட்டது. அரசாங்கம் திறந்து விடத்தயார் என்றால் தாமும் திறந்துவிடத்தயார் என்று புலிகள் அறிவித்திருந்தது மகிழ்ச்சிகரமான செய்தியாக வெளிவந்தது. இதை தொடர்ந்து அரசாங்கம் தானும் அப் பாதையை திறந்துவிடத்தயார் என்று அறிவித்தது. அப்படியானால் ஒருவாறாக இனி இந்தச் சிரமம் தீர்ந்தது என்று எண்ணி இருந்த போது விடுதலைப்புலிகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக – இராணுவம் இப்பாதையைப்பயன் படுத்தி உள்ளே வந்துவிடும் என்பதற்காக – அதை மறுத்து விட்டது. ஆனாலும் பதிலாக பூனகரிப் பாதையை திறக்கலாம் என்று தெரிவித்தது. இதேவேளை பூனகரி இராணுவ முகாமை வாபஸ்பெற வேண்டும் என்று நிபந்தனையும் விதித்தது. இப்பாதையைத் திறக்க அரசாங்கம் சம்மதித்த போதும் புலிகளின் நிபந்தனையை ஏற்க அரசாங்கம் தயாராக இல்லை. அதனால் அந்த எதிர்பார்ப்பும் ஏமாற்றமாகப் போய்விட்டது. தொடர்ந்தும் எப்படியோ பயணம் செய்தாக வேண்டிய மக்கள் இக்கிளாலிக் கடற்பாதையை பயன்படுத்தி வந்தார்கள். முன்னர் இதைக் கண்டும் காணாமல் விட்டிருந்த அரசாங்கம், பின்னர் புலிகள் தமது இராணுவ நடமாட்டத்திற்கு பயன் படுத்துவதாகக் குற்றம் சாட்டி அப்பாதையைத் தடை செய்வதாக அறிவித்தது. எப்படியோ நடந்தாக வேண்டிய போக்குவரத்து வேறு வழியின்றி அப்பாதையூடாகவே நடந்தது. அப்போது நடந்தது தான் இந்த துர்ப்பாக்கியமான படுகொலைச் சம்பவம்.

இதைத் தொடர்ந்து மக்கள் சிக்குண்டுள்ள அபாயத்தை அறிந்து ஐ. நா சபையின் யூ.என்.எச்.சி.ஆர் யாழ்ப்பாணம் சென்று பேச்சுவார்த்தை நடத்தியது. ஆனால் பூனகரி இராணுவ நிலையை அகற்ற வேண்டும் என்று விடுதலைப் புலிகளும், அகற்ற முடியாது என்று அரசாங்கமும் உறுதியாக நின்றதால் இப்பேச்சு வார்த்தைகள் தோல்வி கண்டது.

யுத்தம் நடக்கும் போது இருதரப்பும் பொது இணக்கத்துடன் சில வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகும். இங்கும் இவ்வாறு சில விட யங்களில் பொது இணக்கத்துடன் வழிவகைகள் காணப் பட்டுமுள்ளது. உதாரணத்துக்கு யாழ் மருத்துவமனைச் சுற்று வட்டாரத்தை யுத்த தவிர்ப்புப் பிரதேசமாக பிரகடனப் படுத்தியமை, செஞ்சிலுவைச் சங்கச் செயற்பாட்டிற்கு வழிவகை செய்தமை போன்ற வற்றைக் குறிப்பிடலாம். இவ்வகையில் இப்போக்குவரத்துப் பிரச்சினையும் முக்கிய பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்பட்டு மக்கள் எந்தவித அபாயமுமின்றி பயணம் செய்யக் கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்தாகவேண்டும். இந்த நிட்சயமற்ற பயணங்களை நீண்டநாட்கள் தொடர முடியாது. அரசாங் கமும் விடுதலைப் புலிகளும் இதில் ஒரு தீர்வை ஏற்படுத்தாத வரை இவ்வாறான மரணங்களுக்கு காரணம் மக்களின் தலைவிதி என்றுவிட்டு பொறுப்பேதும் அற்றவர்களாகிவிட முடியாது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






அமைதிக்கும் வாழ்வுக்குமான இலங்கை – தென்னிந்திய சர்வ சமய பாத யாத்திரை இந்து மாகடலை தாண்டாமலேயே நின்றுவிடப் போகின்றது. 1993 – மாசி – 25 ம் நாள் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்துவ சமயத்தினருக்கு புனிதமான, இலங்கை சிறீபாத மலைஉச்சியில் தொடங்கி, மகாத்மா காந்தி அடிகளின் வழியில், விநோபாவே நடத்திய பூமி தான இயக்கத் துவக்க நாளான சித்திரை 18 ம் நாள் சென்னையை சென்றடைவதாக இருந்தது. ஆனால் இந்தியாவில் நடக்கவேண்டிய மிகுதிப் பாதயாத்திரையில், இலங்கையர்கள் கலந்து கொள்ள இந்திய அதிகாரிகள் தடைவிதித்துள்ளனர். இலங்கையர்கள் தவிர்ந்த ஏனைய வெளிநாட்டவர்கள் கலந்துகொள்ள இந்திய அதிகாரிகள் மறுப்பேதும் தெரிவிக்கவில்லை.

இதனால், இப் பாத யாத்திரை இந்துமகா சமுத்திரத்தை தாண்டாமலேயே முடிவடையும் என பாதயாத்திரைக் குழு அறிவித்துள்ளது. "நிப்பான்சன் மியோ தோஜி" இனர் இப் பாத யாத்திரையை ஒழுங்கு செய்துள்ளனர். இவர்களது அமைப்பைச் சேர்ந்த ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் 1984 இல் யாழ்நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார். இதுவரை யாருமே இக்கொலைக்கு உரிமை கோரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

யூகோசிலாவிய உள்நாட்டுப் போரில் சேர்பிய இராணுவத்தினர் பொஸ்னியாவில் தாக்குதல் நடத்திய போது திட்டமிட்டு கிராமம் கிராமமாக கற்பழித்த தகவல் இப்பொழுது உலகிற்குத் தெரிய வந்துள்ளது. செர்பிய இராணுவம் சுமார் 50,000 பெண்களை பெரும்பாலும் முஸ்லீம் பெண்களைக் கற்பழித்திருக்கிறது. "இனத்தூய்மை அழிப்பு இயக்கம்" என்னும் பெயரில் பெரும்பான்மையான பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். கற்பழிப்பில் ஈடுபட்ட ஒரு செர்பியப் பொலிஸ்காரன் சொன்னானாம், "நான் வருந்துகின்றேன். இதுவும் ஒரு போர். இங்கே சட்டம் ஒழுங்கு கிடையாது. எனவே நீங்கள் மறுக்க முடியாது."

கற்பழித்த வேற்று இனத்தவரின் மூலம் குழந்தைகள் பிறந்தால் அந்த இனத்தின் தூய்மை அழிக்கப்படும் என்று கருதுகிறார்கள். செர்பியத் தாக்குதலின் போது பொஸ்னிய நகரங்களில் உள்ள ஆண்களில் பட்டம் பெற்றவர்கள், வியாபாரம் செய்பவர்கள், ஜனநாயக நடவடிக்கைக் கட்சிகளில் உறுப்பினராக இருந்தவர்களைக் கண்டு பிடித்து கொலை செய்தார்கள். மற்ற ஆண்களை சிறை முகாம்களுக்கு கொண்டு சென்றார்கள். கிழக்கு பொஸ்னியாவில் உள்ள மில்ஜீவினா போன்ற பல கிராமங்கள் கற்பழிப்பு முகாம்களாக மாற்றப்பட்டன. இனத் தூய்மையின் அடுத்த கட்டமாக கற்பழிக்கப்பட்ட பெண்களை நான்கு மாதங்கல் வரை தனியாகச் சிறைக்கு அனுப்பி வைத்து, அதற்குப் பின் கருச்சிதைவு செய்துகொள்ள வாய்ப்பு இல்லை என்ற நிலையில் வெளியே விட்டிருக்கிறார்கள். தங்கள் வயிற்றுக் குழந்தையை பெற்றுக் கொன்று விடுவதா, அல்லது வளர்க்க மனம் இடம் கொடுக்குமா என்ற தடுமாற்றத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் இருக்கிறார்கள். இவர்களில் பலருக்குப் பிறக்கும் குழந்தைகளை தத்து எடுத்துக் கொள்ள ரோமன் கத்தோலிக்க நாடான குரோசியா (இதுவும் யூகோசிலாவியாவில் இருந்து பிரிந்தது.) விருப்பம் தெரிவிக்கலாம். விருப்பமற்ற தாய்க்குப் பிறக்கும் குழந்தைகளின் கதி என்னவாகும்?

ஹிட்லருக்கு எதிராக நடத்தப்பட்ட நியூரம்பேர்க் பகிரங்க விசாரணையைப் போல் ஒரு விசாரணையை நடத்த ஐ. நா ஏற்பாடு செய்து வருகின்றது. செர்பிய ஜனாதிபதி, மற்றும் செர்பியத் தலைவர்கள் மீது குற்றப்பத்திரிகை சுமத்தப்பட்டுள்ளது. ஆனால் 70 வீத செர்பிய இராணுவம் பொஸ்னியாவில் தான் உள்ளது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### சமஷ்டியா? ஒற்றையாட்சியா? இந்திய மாதிரியா?

# இலங்கையில் ஒரு அரசியல் சுயம்வரம்

அண்மைக்காலத்தில் இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் விடயத்தில் சமஷ்டி ஆட்சி பற்றிய பேச்சு மிகப் பரபலமாக அடிபட்டு பின்னர் இப்போது ஓய்ந்து போயுள்ளதை யாவரும் அறிவர். ஆனால் அந்த சமஷ்டியென்ற தீர்வை ஆதரித்து நின்றவர்கள் அது எப்படியான தீர்வாக இருக்குமென்ற எந்த விளக்கத்தையும் இதுவரை தரவில்லை.

சமஷ்டி ஆட்சியென்பது இதுதான் என்று நிர்மாணிக்கப்பட்ட வடிவம் ஒன்று உண்மையில் எங்குமே இல்லை.அது ஒவ்வோர் நாட்டிலும் அவ்வவ் நாடுகளின் சமூக, பொருளாதார, சரித்திரப் பின்னணிகளுக்கமைய வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நாட்டிற்கு நாடு வெவ்வேறுபட்ட தன்மைகளை இவ்வாட்சிமுறை கொண்டிருந்த போதிலும் சமஷ்டி என்ற ஒரு கருத்துருவத்தை எய்துவதற்கு இவற்றிற்கிடையே பொதுமைப்பாடான சில அம்சங்கள், குறைந்தபட்ச அடிப்படைகளாக அமைவது அவசியமாகிறது. இந்த அடிப்படையான அம்சங்களை நிர்ணயித்துக் கொண்டபின் இதன் வழிகாட்டலின் கீழ் அந்தந்த நாடுகளின் தனித்துவமான பிரச்சனைகளுக்கேற்ப அவற்றிற்குரிய சமஷ்டி ஆட்சியமைப்பு தீர்மானிக்கப்படுகிறது.

**சமஷ்டிக்கான அடிப்படைகள்**

இவ் அடிப்படையம்சங்களில் முதலாவது அரசியலமைப்புச்சட்டம். அதாவது சமஷ்டி ஆட்சிமுறை அரசியலமைப்புச் சட்டத்திலேயே வரைவு செய்யப்படல் வேண்டும். வேறெந்த வகையாலுமல்ல. அதாவது அரசியலமைப்புச் சட்டத்திற்கான திருத்தங்களாலோ, அல்லது வெறும் பாராளுமன்றத் தீர்மானங்களாலோ அல்ல.

அடுத்த அம்சம். இரண்டு இறைமைகள் என்ற கருத்து ஒப்புக்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.அதாவது இரண்டு இறைமையுள்ள ஆட்சிப் பிரிவுகளாக மத்தியஅரசு (Centre), சமஷ்டி ஆட்சி அலகு (State) (-அதாவது மாநில அரசோ, மாகாண அரசோ, மாவட்ட அரசோ ஏதாவதொரு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆட்சி அலகு) என்ற இருஆட்சி அலகுகள் ஒரு நாட்டில் இயங்குவது ஏற்றுக்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும். இங்கு இவை இரண்டுக்குமான இறைமையும், அதிகாரங்களும் அரசியலமைப்புச் சட்டத்தினால் நேரடியாக வளங்கப் படுவதாய் இருக்கும். மாறாக மத்தியஅரசால் (பாராளுமன்றத்தால் அல்லது ஜனாதிபதியால்)சமஷ்டி அலகிற்கு வளங்கப் படுவதாய் இருக்காது.

அடுத்ததாக சமஷ்டி ஆட்சிஅலகிற்கு (State) வளங்கப்பட்ட அதிகாரங்களை அவ் ஆட்சியலகின் அனுமதியின்றி மத்திய அரசால் மீளப்பெற முடியாது.

சமஷ்டியின் மற்றய அம்சம் சுதந்திரமான நீதிமன்றம் (Indipendent Jufisary). நீதிமன்றம் மத்திய அரசால் செல்வாக்குச் செலுத்தப்படக் கூடியதாக இருக்கக் கூடாது. அரசியலமைப்புச் சட்டத்தின் ஏதாவது சரத்தின் கருத்து விளக்கம் பற்றிய சந்தேகங்களில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானதாக அமையும்.

இந்த வகையில் சமஷ்டி ஆட்சி முறையைத் தமது ஆட்சி முறையாக ஏற்றுக் கொண்ட பலநாடுகள் உலகில் உள்ளன. இவற்றில் சோசலிச நாடுகளும் உள்ளன முதலாளித்துவ, ஜனநாயக நாடுகளும் உள்ளன. உதாரணமாக அமெரிக்கா,கனடா, சுவிட்சலாந்து, முன்னாள் சோவியத் யூனியன், யூகோஸ்லாவாக்கியா போன்ற நாடுகளைக் கூறலாம். இந்நாடுகளில் நிலவும் சமஷ்டி ஆட்சிகள் தத்தமக்கு ஏற்ற வகையில் வெவ்வேறு சிறப்பம்சங்களையும் கொண்டுள்ளன. அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் குடிமகன் ஒருவனுக்கு அமெரிக்க மத்திய அரசு மட்டுமன்றி அவன் வசிக்கும் சமஷ்டி ஆட்சிப் பிரதேசமும் (State) கூட தனியான பிரஜாவுரிமை வழங்க அதிகாரமுள்ளது: இவ்வாறு ஒரு அமெரிக்கன் இரண்டு பிரஜாவுரிமைகளைப் பெறுகிறான். மேலும் அமெரிக்காவிலும், முன்னைய சோவியத் யூனியன், யூகோஸ்லாவாக்கியா போன்ற நாடுகளிலும் சமஷ்டி ஆட்சிப் பிரதேசங்கள் தமக்கான சொந்த அரசியலமைப்புச் சட்டத்தையே வரைய உரிமை வழங்கப் பட்டுள்ளது.

இவ்வாறு உலகில் சமஷ்டி ஆட்சி ஒரு வெற்றிகரமான முன்னுதாரணமாக நிலை கொண்டு பல ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் எமது நாடான இலங்கையில் சமஷ்டி பற்றிய மிகுந்த அச்சம் ஆட்சியாளர்களிடையேயும் பெரும்பான்மை இனத்தவர் மத்தியிலும் நிலவுகிறது.

இனப்பிரச்சனைக்கான தீர்வு பற்றிய பாராளுமன்றத் தெரிவக்குழுக் கூட்டங்களில் அண்மைக் காலத்தில் முன்வைக்கப் பட்ட சமஷ்டி ஆட்சிக்கான சிபாரிசுகூட முதலில் ஏதோஓர் அக்கறையை வெளிப்படுத்தி வரவேற்கப் பட்டதுபோல் இருந்த போதிலும் பின்னர் தெரியாத்தனமாக, சுடுசட்டியைத் தூக்கிவிட்டதுபோல், திரும்ப மெதுவாக கீழே வைக்கப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாக இந்தியாவின் மாதிரியான உரிமைகளை வழங்கலாம் என்ற அபிப்பிராயங்கள் வெளிப்படுத்தப் பட்டன.

இந்தியா ஒரு சமஷ்டி ஆட்சியைக் கொண்ட நாடா என்பதில் இன்னும் அங்கு சர்ச்சைப் பாடுகள் இருந்துகொண்டே இருக்கின்றன. இந்தியாவின் அலசியலமைப்புச் சட்டம் இந்தியாவை ஒரு சமஷ்டி ஆட்சி நாடாகச் சொல்லவில்லை. அதேவேளை இலங்கையைப்போல் ஒற்றையாட்சி நாடாகவும் சொல்லவில்லை. அதன் 1ம் சரதின்படி அது தன்னை மாநிலங்களின் ஒன்றியம் (Union of states) என்று வரையறுத்துக் கொள்கிறது. எனினும் சமஷ்டி நாடொன்றைப் போன்ற பல அம்சங்களை அது கொண்டுமிருக்கிறது. இந்தியாவின் மாநில ஆட்சிமுறை அரசியலமைப்புச் சட்டத்தாலேயே வரையறை செய்யப்பட்டுள்ளது.மேலும் மாநிலங்களுக்கான அதிகாரங்கள் அரசியலமைப்புச் சட்டத்தாலேயே வழங்கப் பட்டுள்ளது (மத்திய அரசாலல்ல).அத்துடன் சுதந்திரமான நீதிமன்றம் உத்தரவாதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யப்பட்டுமுள்ளது. ஆனால் இறைமையைப் பொறுத்தமட்டில் மாநில அரசுகளின் இறைமை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. மாநில அரசுகள் செயல்படக்கூடிய துறைகள் எவையென ஒரு பட்டியலும், மத்திய அரசு செயல்படக்கூடிய துறைகள் எவையென இன்னொரு பட்டியலும் அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இதே போன்ற ஆட்சித் துறைகள் பற்றிய வகைப்பாடு இலங்கையில் மாகாணசபை அரசுகள் அமைக்கப்பட்ட போதும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அது மாகாண சபைகளுக்கு வழங்கியுள்ள துறைகளும் அதிகாரங்களும் இந்தியாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. அதிலும் சில துறைகளில் மாகாண அரசுக்கு செயற்படக்கூடிய கணிசமான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது போல் பார்வைக்குக் காட்டப்பட்டாலும் பின்னிணைப்புகள் மூலம் அவ்வதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளது. உதாரணத்துக்கு காணிபற்றிய விடயம், மாகாணத்துக்கு உரிய பட்டியலில் போடப்பட்டு மாகாண அரசிற்குட்டப்பட்ட விடயம் போல் காட்டப்பட்டாலும் பின்னர் அதன் பின்னிணைப்பு மூலம் காணி பற்றிய முழு அதிகாரமும் ஜனாதிபதியின் கைகளில் உள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முன் கதவால் கொடுத்த அதிகாரங்களை பின் கதவால் திருடிக்கொள்ளப்பட்டுள்ளது.

இப்போது சமஸ்டி பற்றிய கேள்வி ஒருபுறம் இருக்கட்டும். சமஷ்டி பற்றிய பெரும்பான்மைக் கட்சிகள் ஆரவாரத்துடன் சில நாட்கள் பேசிவிட்டு இறுதியில் சமஷ்டியல்ல, இந்தியா போன்ற அதிகாரங்களை வழங்கத்தயாராக உள்ளோம் என்று கூறினார்கள் அல்லவா, அதைக் கூட சாத்தியப்படுத்துவது இவர்களால் ஆகக்கூடிய காரியமா என்று பார்ப்போம்.

இலங்கைஅரசின், அரசியல் யாப்பின் சரத்து இரண்டு ( Article 2 ) கூறுகிறது இலங்கைக் குடியரசு ஒரு ஒற்றையாட்சி நாடு என்று. அதேவேளை இந்தியா யாப்பின் சரத்து 1 அதை மாநிலங்களின் ஒன்றியமாக வரையறை செய்கிறது. இந்தியா தன்னைஒரு மதசார்பற்ற இறைமையுள்ள சோசலிச ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனப்படுத்த இலங்கையோ (சரத்து 9 ல்) பௌத்தம் என்ற தனியொரு அத்தியாயத்தையே (அத்தியாம் 2) திறந்து இலங்கைக் குடியரசானது பௌத்தத்திற்கு அதிஉன்னத ஸ்தானத்தை வழங்க வேண்டுமென்றும், அரசின் முக்கியமான பணி பௌத்த சாசனத்தைப் பாதுகாத்து வளர்ப்பதாகுமென்றும் கூறுகிறது. இந்தியாவில் தெளிவாக வரையறுக்கப் பட்ட அதிகாரப் பரவலாக்கல் அலகாக மாநிலங்கள் உள்ளன. இம் மாநிலங்கள் மொழியடிப்படையில் மொழிவாரி மாநிலங்களாக வகுக்கப் பட்டுள்ளன. இலங்கையின் அரசியல் யாப்பு சரத்து 5ன் படி, இலங்கையின் நிலப்பகுதி 25 நிர்வாக மாவட்டங்களைக் கொண்டிருக்கு மென்று கூறுவதன் மூலம் அதன் நிர்வாக அலகு மாவட்டங்களாகவே உள்ளது.

**இந்தியாவைப் போல் அதிகாரங்கள் வழங்கத் தயார் என்றால், முதலில் இலங்கை தனது ஒற்றை ஆட்சிமுறையை மாற்றிக் கொள்ள தயாரா? பௌத்தமத நாடாக அன்றி மதசார்பற்ற நாடாகப் பிரகடனப் படுத்தத் தயாரா? அதிகாரப் பரவலாக்கல் அலகாக மொழிவாரி மாநிலங்களாக வரையறை செய்யத் தயாரா?**

அத்துடன் அது வெறும் நிர்வாக அடிப்படையிலேயேயன்றி மொழியடிப்படையிலேயோ, இனத்துவ அடிப்படையிலேயோ வரையறுக்கப் படவில்லை.

இந்தியாவைப்போல் அதிகாரங்களை வழங்கத் தயார் என்று கூறுவதானால் முதலில் இலங்கை தனது ஒற்றையாட்சிமுறையை மாற்றிக் கொள்ளத் தயாரா? பௌத்த மத நாடாக அன்றி மதசார்பற்ற நாடாகப் பிரகடனப் படுத்தத் தயாரா? அதிகாரப் பரவலாக்கல் அலகாக மொழிவாரி மாநிலங்களை வரையறை செய்யத் தயாரா? என்பன முதலில் முன்னிற்கும் கேள்விகளாகும்.

இதைவிட வழங்கப்பட்ட அல்லது வழங்குவதற்காக பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் ஆராயப்பட்ட அதிகாரங்களைப் பொறுத்தவரைகூட இந்தியாவில் அவை வழங்கப் பட்டிருக்கும் அளவுடன் ஒப்பிட, முடியாததாக உள்ளது. இந்தியாவில் விவசாயம் நிலச்சீர்திருத்தம் போன்ற துறைகள் முற்றுமுழுதாக மாநில அரசுகளுக்கான துறைகளின் பட்டியலில் அடங்குகின்றன. இங்கு இலங்கையில், காணி முன்னர் குறிப்பிடப்பட்டது போல் ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக உள்ளது. இதேபோல் பாதுகாப்புத் துறையில் இந்தியாவில் தேசியப் பொலிஸ், மாநிலப் பொலிஸ் என்று இரண்டு பிரிவுகள் இயங்கி மாநிலங்களின் பாதுகாப்பை மாநிலப் பொலிசே பார்த்துக் கொள்வதாய் உள்ளது. அவசிமேற்படும் போதுதான் தேசியப் பொலிஸ் நடவடிக்கைகளில் இறங்க நேரிடும். அங்கு மாநிலப்பொலிஸ் ஐ.ஜீ.பி யின் கீழ் இயங்குவதாயும், ஐ.ஜீ.பி மாநில முதலமைச்சருக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவராகவும் இருப்பார். ஆனால் இலங்கையில் மத்திய அரசின்கீழ் செயற்படும் ஐ.ஜீ.பி ற்கு கட்டுப்பட்ட, அதேவேளை மாகாண முதலமைச்சருக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்ட டி.ஐ.ஜி களின் தலைமையில் மாகாணங்களின் பொலீஸ் இயங்கும். இந்த வகையில் இங்கு பொலீஸின் நிர்வாகம் கூடுதலாக மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே நிறுவப் பட்டுள்ளது. மேலும் மாகாணப் பொலிஸ் கமிஷன் ஒன்று அமைக்கப்படுமென்றும் கூறப்பட்டது. ஆனால் அப்படியான கமிஷன் இதுவரை அமைக்கப்படவேயில்லை.

இப்படியான நிலையில் இந்தியாவினைப் போன்ற வகையில் அதிகாரங்களை வழங்கத் தயாராக உள்ளோமென்று கடைசியாக நிகழ்ந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அமைச்சர் ஹமீத் தெரிவித்த நம்பிக்கை வாக்கியம்கூட ஒரு உண்மையான கருத்தாழத்துடன், அத வது மேலே நாம் பார்த்த இத்தனை மாற்றங்களையும் செய்யத் தயார் என்ற திண்ணத்துடன் கூறப்பட்டதா, அல்லது சமஷ்டியைத் தரமுடியாதென்ற காரணத்திற்காக பதிலுக்குக் கூறப்பட்ட வெறும் சமாதான வார்த்தைகளா என்ற கேள்வி எப்படியும் தோன்றத்தானே செய்யும்......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீர்வுக்கான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம்

**- அமைச்சர்- ரணில் விக்கிரமசிங்க**

இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரும், கம்பகா தொகுதி பா.உறுப்பினரும், கைத்தொழில் விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அருவிப் பத்திரிகைக் களித்த விசேட பேட்டியில் இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமான இலங்கை அரசின்சார்பில் அதன்நிலைப்பாட்டைதெளிவு படுத்தி விளக்கமளித்தார். அவரது பேட்டி முழுமையாக இங்கு இடம் பெறுகின்றது.

**அருவி: இன்று நாட்டின் மிகப் பிரச்சினையாக இன்ப்பிரச்சினை உரிவாகி இருக்கிற நிலையில், தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் குடியேற்ற, வேலை வாய்ப்பு, கல்வி, பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளை இனம் கண்டு தீர்ப்பதற்கு அரசாங்கம் இதுவரை என்ன செய்துள்ளது?**

ரணில்: பெரும்பாலான விடயங்கள் இனம் காணப்பட்டு தீர்ப்பதற்கான நடவடி க்கைகள் எடுக்கப்பட்டுள்ள தாக நான் கருதுகின்றேன். உதாரணமாக வேலை வாய்ப்புப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், அரசாங்க வேலைவாய்ப்புகள் அனைத்தும் இப்போது இன விகிதார அடிப் படையில், தேவையான கல்வித் தகைமைகளுடனும் மற்றய குறைந்த பட்சத் தகைமைகளுடனும், பரீட்சைக் கூடாகவே வழங்கப்படுகினறன. எனவே இதில் இன, மத, குழு, தனிநபர் ரீதியான சலுகைகளோ பாகுபாடுகளோ காட்டப்படுவதில்லை.

குடியேற்றப் பிரச்சினையை பொறுத்தவரையில் அரசாங்கம் இப்போது எந்தக் குடியேற்றங்களையும் செய்வதில்லை. அத்துடன் நாம் கூறியுள்ளோம், 13ம் திருத்தச்சட்டத்தில் என்ன கூறப்பட்டுள்ளதோ அதற்குப் புறம்பான எந்தப் புதிய குடியேற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று. உண்மையில் நீண்டகாலமாக நாம் வடக்குக் கிழக்கில் குடியேற்றங்களை மேற்கொள்ளாதிருக்கிற போதிலும் கூட இது தான் நாம் சட்டரீதியாக பின் பற்ற வேண்டிய கொள்கை. ஆதலால் இப்பிரச்சினை இனிஇல்லை. எனவே, அங்கு குடியேற்ற வேண்டிய தேவையும் இல்லை. மேலும் மகாவலித் திட்டத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு பெருமளவு காணிகள் ஒதுக்கப்பட்டிருந்தும் கூட இப்பொழுது நடைபெறும் வன் முறைகள் காரணமாக அமுல்படுத்த முடியாதவாறு உள்ளது. மொழிப் பிரச்சினையிலும் கூட தமிழ் மொழியையும் ஒரு தேசிய மொழியாக்கி உள்ளொம். தேசிய மொழி ஆணைக்குழு ஒன்றும் இதன் அமுலாக்கத்தை உறுதிசெய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத் திணைக்களங்களில் இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறாக பெரும்பாலான பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவை முழுமையாகத் தீர்க்கப்படா விட்டாலும் நிட்சயமாகத் தீர்வுக்கான பாதையில் சென்று கொண்டிருக்கின்றோம். இப்பொழுது எஞ்சியுள்ள முக்கிய பிரச்சினையாகத் தெரிவது வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைப்பதா, இல்லையா என்பதே.

**அருவி: அப்படியானால் தமிழ்மக்களின் பாதுகாப்புப் பிரச்சினையை பொறுத்தவரையில்....?**

ரணில்: பாதுகாப்புப் பிரச்சினக்குக் கூட வட - கிழக்கு மாகாணங்களுக்கு பிரதிப்பொலிஸ் அதிபரின் கீழ் செயற்படும் மாகாணப் பொலிஸ் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளோம். எனினும் இப்பொழுது வடகிழக்கில் உள்ள யுத்த நிலைமை காரணமாக இதனை அமுல்படுத்த முடியாத நிலையில் உள்ளது. என்றாலும் இது 13ம் திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனை அமுல்படுத்துவது மட்டுமே இப்பொழுது உள்ள கேள்வியாகும். இரண்டாவது பிரச்சினை, இப்பிரதேசங்களில் பொலிஸ், இராணுவத்திற்கு ஆள் திரட்டுவது. அங்கு எல்.ரீ.ரீ.ஈ இன் அச்சுறுத்தல் காரணமாக மக்கள் இவற்றில் சேர்வதற்கு அஞ்சுகின்றனர்.

**அருவி: குடியேற்றத்திட்டங்களைப் பொறுத்தவரையில் வெலியோயா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடியேற்றத்திட்டமானது அரசாங்கத்தினால் திட்டமிட்டமுறையில் மேற்கொள்ளப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழும்பியுள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இதனை அவர்கள் வடக்கினையும் கிழக்கினையும் பிரிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒன்றாகக் கருதுகின்றார்கள்.

ரணில்: வெலிஓயாவில் குடியேற்றம் 1987இற்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டது. 1987இற்குப் பின்னர் எந்த விதக் குடியேற்றமும் இங்கு இடம் பெறவில்லை. அத்துடன் அங்கு பெரும் தொகையான சிங்கள மக்கள் வசித்தும் வருகிறார்கள். வெலியோயா, ஹொறவப்பொத்தான பிரதேசத்தின் ஒரு தொடர்ச்சியாகக் கருதப்படுகின்றது. வெலியோயாப் பிரச்சினை சர்வகட்சி மகாநாட்டிலும், தெரிவுக் குழுவிலும் கூட ஆராயப்பட்டிருந்தது. எப்படி இருந்தபொழுதிலும் இக் குடியேற்றத்திட்டம் வெலியோயா வைத் தாண்டி விஸ்தரிக்கப்படக் கூடாதென்ற பொதுவான கருத்து அங்கு காணப்பட்டது.1987இல் 13ம் திருத்தச் சட்டத்தின் நிலம் சம்பந்தப்பட்ட சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்களாகவே இவற்றைக் கருதவேண்டும். அத்துடன் 1980 க்கும் 1987 க்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டம் வெலியோயா திட்டம் மட்டுமே.

அருவி: ஆனால் திருகோணமலையிலும், இவ்வாறு தமிழ்மக்களுக்கு சொந்தமாக இருந்த காணிகள் சிங்கள மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டுகள் உள்ளனவே?

ரணில்: நான் நினைக்கிறேன், திருகோணமலையில் உள்ள குற்றச்சாட்டுகள் போன்று, ஏதாவது ஒரு இனத்துக்குச் சொந்தமான காணிகள் வேறொரு இனத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டது என்பதாக அல்லாமல் புதுக்காணிகளே இதற்கு உள்ளாகியுள்ளன. அதுகூட அம்மாவட்டத்திற்கு உள்ளே வசிக்கும் மக்களாலேயே. வெளிமாவட்டத்திலிருந்து வந்தவர்களால் அல்ல. அத்துடன் யுத்தத்தின் விளைவாக முஸ்லீம் பிரதேசங்களை நோக்கி முஸ்லீம்கள்வருவதனையும், தமிழ் மக்கள், தமிழ்பிரதேசங்களை நோக்கி நகர்வதையும், அத்துடன் மக்கள் இவ்வாறாக தற்காலிகமாக தம் இருப்பிடத்தை ஒழுங்கமைத்துக் கொண்டதையும் நாம் காணக் கூடியதாகவும் உள்ளது. யுத்தம் நடந்துகொண்டிருக்கும்பொழுது நிகழ்கின்ற இவைபோன்ற சில விடயங்கள் தற்காலிகமானவையே. இதனால் ஜனாதிபதியவர்கள் கூறியதைப் போல் வன்முறைகள் நிறுத்தப்பட்டு, எல்லா மக்களையும் அவர்கள் முன்னர் வாழ்ந்துவந்த இடங்களிலேயே மீளக் குடியமர்த்திக் கொண்டு, அதிலிருந்து விடயங்களை ஆரம்பிக்க வேண்டும்.



"

குடியேற்றப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் அரசாங்கம் இப்பொழுது எந்தக் குடியேற்றங்களையும் செய்வதில்லை.

"

-ரணில் விக்கிரமசிங்க-

அருவி: ஏன் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு ஐ.தே.க தனது முன்மொழிவுகள் எதனையும் முன்வைக்க வில்லை? எனத் தமிழ்மக்கள் ஆச்சரியப்படுகிறார்கள். அது சி. சு. கட்சி தனக்கு அனுகூலமாக இதனைப் பயன் படுத்த வழிகோலிவிடும் என்ற அச்சத்தினாலா? சி.சு.கட்சி கூட தன் முன்மொழிவுகளை முன்வைக்கவில்லை. ஏன், ஐ.தே.க வுக்கு அஞ்சியா?

ரணில்: இல்லை. எம்மைப் பொறுத்தவரையில் வடக்குக் கிழக்கிற்கு சாத்தியப்படக்கூடிய அனைத்து முன்மொழிவுகளும் சமர்ப்பிக்கப்பட்டு விட்டன. நீங்கள் பண்டாரநாயக்கா- செல்வா ஒப்பந்தத்தில் இருந்து ஆரம்பித்து, டட்லி- செல்வா உடன்படிக்கை, ஜே.ஆர் ஜெயவர்த்தனா - தமிழர் விடுதலைக்கூட்டணி அங்கத்தவர்களுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள், 13ம் திருத்தச் சட்டம், தொடர்ந்து சர்வகட்சி மகாநாட்டிற்கு வழங்கப்பட்ட முன்மொழிவுகள் போன்றவற்றைப் பார்க்கலாம். மேலும் மேலும் முன்மொழிவுகளை வழங்குவதல்ல இங்கு கேள்வி. பண்டா- செல்வா ஒப்பந்தத்தில் ஆரம்பித்து நடைமுறைப்படுத்த சாத்தியமானவை எனக் கருதப்பட்டு பின்னர் செயற்படுத்தப்படாமல் போனவை இதுவரையிலும் உள்ளன. இதே வேளை ஒவ்வொரு தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை கூட ஒரு பொது நிலையை எய்துவதற்கு அவர்கள் ஒன்று கூடவேண்டியுள்ளார்கள். எம்மைப் பொறுத்தவரையில் உள்ளவற்றில் இருந்து ஒரு பொது இணக்கத்தை ஏற்படுத்துவதேதேவை. ஆனால் நாம் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை உள்ளடக்கிய மாகாண சபை சட்டத்துடன் கூடிய 13ம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக உள்ளோம். எனினும் ஒரு தேசிய இணக்கப்பாடு ஏற்படுமிடத்து இதனை மாற்றவும் தயாராக உள்ளோம். ஆகவே இது பொது இணக்கமொன்றை உருவாக்கும் கேள்வியே. எனவே இங்கு சேர்ப்பதற்கு புதிதாக ஒன்றுமில்லை. பாராளுமன்றத் தெரிவுக்குழு கருத்து வேறுபாடுகளை குறைக்க முயற்சித்து வருகின்றது, அத்துடன் தமிழர்களும் முஸ்லீம்களும் தம்மிடையே ஒரு பொது இணக்கத்தை ஏற்படுத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னும் கலந்தாலோசனைகள் நடத்த வேண்டியுள்ளது. வெறுமனே ஐ.தே.க.வும், சி.சு.கட்சியும் உடன் படுதல்மட்டும் போதாது. தமிழ் கட்சிகளையும் உள்ளடக்கி உடன்பாடு காணப்படுதல் வேண்டும். ஆகவே இது எல்லாத் தரப்பினரையும் ஒரு பொது உடன்பாடு எய்தும் முகமாக ஒரு பொதுத்தளத்திற்கு ஒற்றுசேர்க்கும் செயற்பாடாகும்.

**அருவி: சிறினிவாசனின் ஆலோசனை களை தீர்வுக்கு ஒரு அடிப்படையாக ஏற்றுக்கொள்ளலாம் என அரசாங்கம் அறிவித்திருந்ததே. அது உத்தியோக பூர்வமானது தானா?**

ரணில்: சிறீனிவாசனின் ஆலோசனைகள் அவருடைய ஆலோசனைகள் மட்டுமே. நாங்கள் கூறினோம், பொது இணக்கமாக எழுகின்ற எதனையும் நாம் ஆதரிப்போம் என்று.

**அருவி: அமைச்சர் ஹமீற் அவர்கள் சிறீனிவாசனின் ஆலோசனைகள் ஏற்புடையனவாக உள்ளதாகக் கூறியுள்ளாரே. இது உத்தியோக பூர்வமான நிலைப்பாடு இல்லையா?**

ரணில்: ஐ.தே.க இன் செயற்குழுவின் தீர்மானமே அதன் உத்தியோகபூர்வ நிலையாகும். அது பொது இணக்கத்தை ஏற்படுத்துவதற்குத் துணையாகச் செயற்பட்டு அவ்விணக்கத்தை ஆதரிக்கும்படி அதிகாரம் அழித்துள்ளது. மேலும் திரு.ஹமீட், வேறொரு (முஸ்லீம் கட்சிகளின்) கூட்டத்தில் முஸ்லீம் கூழுக்களின் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். நாங்கள் (தெரிவுக் குழு) கூட்டங்களில் தீவிரமான பங்கினைச் செலுத்தி வருகின்றோம்.

**அருவி: வடக்குக் கிழக்கு இணைப்பைப் பொறுத்த வரை அதனை நிராகரிக்க குறிப்பிடக் கூடிய காரணங்கள் ஏதும் அரசாங்கத்துக்கு உள்ளதா?**

ரணில்: இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் மாகாணசபைச் சட்டத்தில் கூறப் பட்டுள்ள படி எந்த மாகாணமும் தாம் இணைந்திருப்பதா என்று தீர்மானிக்க உரிமை கொண்டவை. அந்த நிலைப்பாட்டையே நாம் எடுத்துள்ளோம். எனினும் நாம் முன்னர் குறிப்பிட்டது போல, பொது இணக்கப்பாடாக எழுகின்ற எந்த இணக்கப்பாட்டையும் நாம் ஆதரிக்கத் தயார். நாம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் எமது பகுதியினை அமுல் படுத்தி முடித்துவிட்டோம்.

**அருவி: இரு மாகாணங்கள் இணைய விரும்பினால்..... ?**

ரணில்: சட்டம், எந்த இரு மாகாணங்களும் இணைந்து கொள்ள இடம் அளிக்கின்றது. வடக்கும் கிழக்கும், அல்லது மேல்மாகாணமும் தென்மாகாணமும், எவையென்றாலும்....

**அருவி: தெரிவுக்குழு சமஷ்டியாட்சியை ஏற்றுக் கொள்ளுமாயின் அதனை அமுல்படுத்தும் பலம் அரசாங்கத் திடம் உள்ளதா? ஏனெனில் அரசாங்கத்திற்கு இதற்குத் தேவையான 2/3 பெரும்பான்மை பாராளுமன்றத்தில் இல்லையே?**

ரணில்: ஆரம்பம் முதலே நாம் சொல்லியிருந்தோம், அரசியலமைப்புச் சட்டத்தின் எந்த ஒரு திருத்தத்திற்கும் எதிர்க்கட்சியின் ஆதரவு அவசியம் என்று. ஏனெனில் அரசாங்கத்திற்கு 2/3 பெரும்பான்மை இல்லை. அடுத்தகட்டமாக இதற்கு பெரும்பான்மையான மக்களின் அங்கீகாரம் தேவை. அரசியலமைப்புச் சட்டத்தின் சில சரத்துக்கள் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப் படாமல் மாற்றப்பட முடியாதவை.

**அருவி: தெரிவுக்குழு சமஷ்டி ஆட்சியை ஏற்றுக் கொண்டால் அரசாங்கத்தால் சர்வஜனவாக்கெடுப்பின் மூலம் மக்களின் அங்கீகாரத்தை அதற்கு ஈட்டிக்கொள்ள முடியுமா?**

ரணில்: தெரிவுக்குழு சமஷ்டி ஆட்சியை இன்னும் சிபார்சு செய்யவில்லை, எனவே அனுமானத்தில் எதனையும் கூற முடியாது. எல்லா சாத்தியப்பாடுகளும் ஆலோசிக்கப்படுகின்றன. ஆனால் சமஷ்டி என்று தீர்மானிக்கப்பட்டால் அது சர்வஜனவாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டும்.

**அருவி: தமிழ் கட்சிகளுக்கு இதில் உள்ள அச்சம் என்னவென்றால் இணைப்பைக் கைவிட்டால் சமஸ்டி தரலாம் என்று முதலில் கூறிவிட்டு, பின்னர் சமஷ்டிக்கான சர்வஜன வாக்கெடுப்பில் அது தோல்வி கண்டால் மக்கள் நிராகரித்துவிட்டார்கள் நாம் என்ன செய்வது எனக் கைவிரிப் பார்கள். அப்பொழுது எமக்கு சமஷ்டியும் இருக்காது. இணைப்பும் இருக்காது. முடிவில் நாம் ஏமாற்றப்பட்டு விடுவோம் என்பதே.**

ரணில்: தெரிவுக்குழு எதனைச் சிபார்சு செய்யப் போகின்றது என்பது எனக்குத் தெரியாது. இது முதலாவது. இரண்டாவது என்ன வென்றால் ஒரு அனுமானத்தில் எமது மக்கள் இப்படியான ஒரு சர்வஜனவாக் கெடுப்பில் எவ்வாறு எதிரொலிப் பார்கள் என்பதனைச் சொல்வது மிகமிகக் கடினம். எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளும் ஒன்றினை சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடும். சிலவேளை நிராகரிக்கவும் செய்யலாம். கனடாவில் அரசியல் யாப்பு மாற்றத்தினை எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருந்தும் சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் எதிராகத் தீர்ப்பளித்தார்கள். வேறு இடங்களில் மறுதலையாகவும் நடந்துள்ளது. தெரிவுக்குழு இதனைப் பற்றி எதனையும் சிபார்சு செய்யக்கூட இல்லாத நிலையில் அனுமானத்தில் எதனையும் கூறுவது கடினம். ஆயினும் அவ்வாறு சில கட்சிகள் கவலைப்படுவது தெரிகிறதுதான்.

**அருவி: இலங்கை - இந்திய ஒப்பந்தம் இன்னும் செல்லுபடியானதென்று கருதுகின்றீர்களா? அல்லது இல்லையா?**

ரணில்: எம்மைப் பொறுத்தமட்டில், ஒப்பந்தத்தின் எமது தரப்புக் கடப் பாடுகள் அனைத்தையும் நாம் அமுல் படுத்தி விட்டோம். ஒரு முறை அமுல்படுத்திவிட்டால் மீண்டும் அமுல்படுத்துவதென்ற கேள்விக்கு இடமே இல்லை.

**அருவி: இந்த ஒப்பந்தம் தொடர்பாக பாராளுமன்றத்தில் கருத்து முரண் பாடுகள் உள்ளனவா?**

ரணில்: தெரிவுக்குழு, உடன்படிக்கைக்குப் பின்னர் எழுந்துள்ள - வடகிழக்கில் வன்முறைகளால் ஏற்பட்டுள்ள - சூழ்நிலைபற்றி ஆராய்கிறது. அங்கு உடன் படிக்கையைப் பற்றிய முரண் பாடுகள் ஏற்பட முடியாது. அது உடன்படிக்கைக்கு பிற்பட்ட நிலை யாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அருவி: மூன்றாவது சக்தியொன்று இப் பிரச்சினையில் தலையிட வாய்ப்பு உண்டா?**

ரணில்: இது வரைக்கும் மூன்றாவது சக்தி இதில் இல்லை. இலங்கையைச் சேர்ந்த பல குழுக்களே இதில் சம்பந்தப்பட்டுள்ளன.

**அருவி: எதிர் காலத்தில் மூன்றாவது சக்தி ஒன்று தலையிடக்கூடிய அபாயம் உருவாகலாமா?**

ரணில்: தற்போதைய நிலையில் வதுபோல் காணப்படவில்லை. ஏனெனில் அங்கு வன்முறைகளும், சண்டைகளும் நடந்தவண்ணம் உள்ளன. ஆனால் மறுபுறத்தில் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கையில் இருக்கிறோம். உண்மையில் ஒரு வளர்முக நாடொன்று தாங்கிக்கொள்ள முடியாத சுமையாகும். எப்படியாயினும் நாம் அவற்றை சுமந்து தான் ஆகவேண்டும். இந்நிலையிலும் பொருளாதாரச் செயல்பாடுகள் நடைபெறமுடியும். ஆனால் இன்னும்

**அருவி: பேச்சுவார்த்தைக்காக அரசாங்கம் சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அதாவது ஆயுதங்களைக் கைவிடுதல், புலிகளின் தலைவர் பிரபாகரன் நேரடியாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளல், எல்லாத் தமிழ்க் கட்சிகளும் இதில் பங்குபற்றுதல் போன்றன. வி. புலிகளினால் இந் நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப் படுமாற்போல் தெரியவில்லை. இது விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவதற்குத் தடையாக**

வெலிஓயாவில் குடியேற்றம் 1987இற்கு முன் மேற்கொள்ளப்பட்ட தொன்று. அது ஹொறவப்பொத்தான பிரதேசத்தின் தொடர்ச்சியாக கருதப்படுகின்றது. எப்படி இருந்த பொழுதிலும் இக் குடியேற்றத் திட்டம் வெலிஓயாவைத் தாண்டி விஸ்தரிக்கப்படக் கூடாதென்ற பொதுவான கருத்து காணப்படுகிறது.



மூன்றாவது சக்தி ஒன்று தலையிடவில்லை. இங்கு விடுதலைப் புலிகளுடன் வேறு சிலர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக நான் நினைக்கிறேன். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மூன்றாவது சக்தியொன்று இல்லை.

**அருவி: இந்த யுத்தத்தைப் பொறுத்தவரையில் பாதுகாப்புச் செலவீனங்களும், அழிவுகளும் மிகுந்த அளவில் அதிகரித்துள்ளன. இந்நிலையில் எவ்வளவு காலம் நீங்கள் தொடர முடியும்?**

ரணில்: இது ஒரு சுமைதான். இதன் முடிவினை விரைவில் காண்பதற்கு விரும்புகின்றோம். ஆனால் துர்ரதிஸ்டவசமாக விரைவில் முடிவடை துரிதமாக நடைபெற வேண்டும்.

**அருவி: விடுதலைப்புலிகள் தாம் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அறிவித்துள்ளார்கள். இதில் அரசாங்கத்தின் பதிலை எதிர் பார்த்திருப்பதாக அறிவித்துள்ளார்கள். இது தொடர்பாக அரசாங்கம் எதாவது நிலைப்பாட்டை எடுத்துள்ளதா?**

ரணில்: இந்த விடயமெல்லாம் தெரிவுக் குழுவில் ஆராயப்பட்டு வருகின்றது. பேச்சுவார்த்தைக்கு எல்லாக் கட்சிகளும் சில நிபந்தனைகளை விதித்துள்ளன. ஆனால் விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையையும், யுத்தநிறுத்தத்தையும் கோருகின்றார்கள். இப்போதைய நிலை இதுதான்.

**இருக்கமாட்டாதா?**

ரணில்: இது அரசாங்கத்தின் கருத்து மட்டுமல்ல, மற்றய அனைத்துக் கட்சிகளினதும் கருத்து. மற்றய கட்சிகள் அனைத்தும் ஒன்றுபடாவிட்டால்,பாராளுமன்றத்தில் நிறைவேற்றக் கூடிய ஒரு தீர்வை எய்துவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முடியாது. ஏனெனில் பாராளுமன்றத்தில் எந்த ஒரு யாப்புத் திருத்தத்தையும் செய்யக்கூடிய 2/3 பெரும்பான்மைப் பலம் எம்மிடம் இல்லை. ஆகவே இது எல்லாக் கட்சிகளதும் சம்மதத்துடன் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன் இது இரண்டு அடிப்படைகளில் அணுகப்படல் வேண்டும். ஒன்று, அரசாங்கமும், விடுதலைப்புலிகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னர் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த போது விடுதலைப் புலிகள் யுத்தத்தை ஆரம்பித்து விட்டனர். எனவே இரண்டாவது பேச்சுவார்த்தையில் அதன் நேர்மை பற்றிய சந்தேகம் ஒன்று இருக்கக்கூடாது. அப்போது, ஜனாதிபதியே விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவுடன் கலந்து கொண்டபோதும், கடைசியாக திரு. ஹமீட் அங்கு சென்றபோதினில் திரு. பிரபாகரனைச் சந்தித்ததைத் தவிர வேறு எவருமே அவரைச் சந்திக்க முடியவில்லை. இவை பேச்சுவார்த்தைக்கு இடைஞ்சலாக இருக்கின்றதே யல்லாமல் உதவியாக இல்லை. முதலாவது அடிப்படையானது, எல்லாக் கட்சிகளும் பேச்சுவார்த்தையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் இன்னொரு உடைவிற்கு இட்டுச் செல்லாத வகையில் நேர்மையானதாக இருக்க வேண்டும். அதற்காகவே இந்த நிபந்தனை. ஆயுதங்களைக் கைவிடுவதான பிரகடனம் – உண்மையாகவே உடனடியாக கைவிடுதலையல்ல, பிரகடனம் செய்வதையே இது குறிக்கின்றது. அத்துடன் திரு. பிரபாகரன் பேச்சுவார்த்தைகளில் நேரடியாக கலந்து கொள்ள வேண்டும். இரண்டாவது அடிப்படையானது எல்லாத் தமிழ்க் கட்சிகளும் பேச்சுவார்த்தையில் பங்கு பற்ற வேண்டும். இது தான் தற்போதைய நிலையில் பிரதான கேள்வியாக உள்ளது. அதாவது, வி. புலிகளுக்கும் ஏனைய தமிழ்கட்சிகளுக்கும் இடையே உள்ள உறவு. வடக்குக் கிழக்கைப் பார்க்குமிடத்து அனைத்துத் தமிழ் மக்களின் ஆதரவினையும் வி. புலிகள் மட்டும் தான் பெற்றுள்ளார்கள் என நான் கூறமாட்டேன். மற்றய கட்சிகளுக்கும் ஆதரவு உள்ளது. சில இடங்களில் புலிகளுக்கு அதிகமான ஆதரவும், சில இடங்களில் மற்றைய கட்சிகளுக்கு அதிகமான ஆதரவும் உள்ளது. அத்துடன் அங்கு முஸ்லீம்களும் உள்ளனர். ஐ. தே. கட்சிக்கும் சில தமிழ் மக்களிடையே ஆதரவு உண்டு. அங்கு தேர்தல் ஒன்று நடைபெற்றால் ஐ. தே. கட்சியோ, சுதந்திரக் கட்சியோ பெரும்பான்மையை ஈட்டப்போவதில்லை. முதலாவது, வடக்கு, கிழக்கு, அல்லது வட- கிழக்கு சபையானது – அது எதுவாக இருந்தாலும் நிட்சயமாக விடுதலைப்புலிகளுக்கும், ஏனைய தமிழ் முஸ்லீம் கட்சிகளுக்குமிடையேயான போட்டியாகவே இருக்கும். ஐ. தே. க விற்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையேயான நேரடிப் போட்டியாக இது இருக்காது. ஜனநாயக் கட்சிகளைப் பொறுத்த வரை அவையனைத்தும் தேர்தலில் பங்கு கொள்ளக் கூடிய வாய்ப்பு கட்டாயம் இருந்தாக வேண்டும். கடந்த தடவை, முதலில் அரசாங்கம், வி. புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, பின்னர், மற்றய கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போது அதனைப் புலிகள் விரும்பவில்லை.



**"ஜிகாத்தைப் பொறுத்தவரையில் முஸ்லீம்கள் பெருமளவில் தாக்கப்படுவதன் விளைவாகத் தோன்றிய ஒன்று"**

**அருவி: இவ்வாறாயின் விடுதலைப் புலிகளுடன் தனியாகவும், மற்றைய தமிழ்கட்சிகளுடன் தனியாகவும் பேச முடியாதா?**

ரணில்: எப்படி முடியும்? வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் தங்களது ஏகப் பிரதிநிதியாக புலிகளை ஏற்றுக் கொள்ளவேண்டியதில்லை. தமிழ் மக்களை அவ்வாறு ஏற்கும் படி வற்புறுத்த முடியாது. இது ஜனநாயக விரோதமே அன்றி வேறொன்றுமல்ல.

**அருவி: சமாதானத்தைக் கருத்திற் கொண்டு உங்கள் நிபந்தனைகளில் வளைந்து கொடுக்க முடியாதா?**

ரணில்: அதுதான் எமது ஆரம்ப அணுகுமுறையாக இருந்தது. ஆனால் அது பலனளிக்கவில்லை. உடைந்து விட்டது. அத்துடன் நாமும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ் மக்களைப் பிரதிநித்துவப்படுத்த ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் உரிமை கோருவது அடிப்படை ஜனநாயக கோட்பாடாகும். மற்றய தமிழ் கட்சிகளை நீக்கும் படி விடுதலைப்புலிகள் கோரமுடியாது. ஒருவரின் பலத்தை தேர்தல் மூலமே தீர்மானிக் வேண்டும். மக்கள் ஆதரிப்பதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அது, விடுதலைப்புலியாக இருக்கலாம் அல்லது வேறு தமிழ்க் கட்சியாக இருக்கலாம். அல்லது வேறு ஏதாவதாகவும் இருக்கலாம். மற்றும் படி ஜனநாயகமாகாது. இப்பொழுது இதனைப் பார்க்கும் பொழுது, இது தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையேயுள்ள சண்டையாகவோ அல்லது தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் ஆகியோருக்கிடையேயான சண்டையாகவோ, அரசாங்கத்துக்கும், வடகிழக்கில் உள்ள மக்களுக்கிடையேயான சண்டையாகவோ அல்லாமல் வடகிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களிடையே ஏற்பட்டுள்ள சண்டையாகவே தெரிகின்றது. எனவே இதில் வளைந்து கொடுக்கும் நிலைப்பாடொன்றை எடுப்பது வெறுமனே தமிழ்பேசும் மக்களின் நலன்களைத் தான் பாதிக்கும்.

**அருவி: விரைவில் இப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமென ஜனாதிபதி அவர்கள் கூறிவருகின்றார். தீர்வை ஈட்டுவதற்கான அடிப்படைகள் ஏதாவற்றைக் காணக் கூடியதாக உள்ளதா?**

ரணில்: அது எமது நம்பிக்கை. எப்படியாயினும் வடக்குக் கிழக்கிற்கான எந்த தீர்வும் ஒரு ஜனநாயக அடிப்படையில் அமைய வேண்டும்.

**அருவி: முஸ்லீம் பிரச்சினையைப்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பொறுத்த வரையில், தனி முஸ்லீம் மாகாணத்திற்கான கோரிக்கை, இரா ணுவத்தில் தனி முஸ்லீம் படைப் பிரிவுக்கான கொரிக்கை, முஸ்லீம் அடிப்படை வாதத்தின் வளர்ச்சிப் போக்கு போன்றவற்றை எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

ரணில்: தனி முஸ்லீம் மாகாணத்தைப் பற்றி தீர்மானிக்க வேண்டியது தெரிவுக்குழுவிற்கு உரிய விடயம். முஸ்லீம் படைப்பிரிவைப் பொறுத்த வரையில், இதனை அரசாங்கம் ஒப்புக்கொள்ள முடியாதென்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளது. மேலும் மேலும் முஸ்லீம்கள் படையில் சேர்வதனை விரும்புகின்றோம். தனி முஸ்லீம் படைப்பிரிவு, முஸ்லீம் மத அனுஸ்டானங்களை கடைப்பிடிக்க முடியாதென்ற அச்சத்தைக் காரணமாக கொண்டது. இது பன்றி இறைச்சி பரிமாறப் படுவது போன்ற, முஸ்லீம் அனுஸ்டானங்களுக்கு மாறான விடயங்கள் தொடர்பானது. ஆனால் இராணுவத்தளபதியும், கூட்டுப்படைத் தலைமையகமும் பன்றி இறைச்சி பரிமாறப்படாத படைப் பிரிவுகளும் உண்டு என சுட்டிக் காட்டி உள்ளார்கள். அவற்றில் அவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியும். மேலும் ஜிகாத்தைப் பொறுத்த வரையில், முஸ்லீம்கள் பெருமளவில் தாக்கப்படுவதன் விளைவாகத் தோன்றிய ஒன்றாகும்.

**அருவி: ஜிகாத் போன்ற தன்னெழுச்சியான குழுக்கழுக்கு ஊக்கம் வழங்காமல் முஸ்லீம் மக்களுக்கான ஒரு முறையான பாதுகாப்பை அரசாங்கம் ஏன் வழங்க முடியாது?**

ரணில்: நாங்கள் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க விரும்புகின்றோம். ஆனால், நாங்கள் ஒரு கொந்தளிப்பான நிலைமையிலேயே அவ்விடங்களில் வாழ்ந்து வருகின்றோம். முஸ்லீம்கள் அடிக்கடி தாக்கப்படுவதனால் அங்கு முஸ்லீம், தமிழ் மக்களிடையே முரண்பாடுகள் வளர்ந்து வருகின்றன. அந்த நிலையை நாங்கள் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும். எனினும் நிலையான பாதுகாப்பு என்பது நாட்டில் சமாதானம் திரும்புவதிலேயே தங்கியுள்ளது. அதன் பின்னர் மக்கள் ஒன்றுபட்டு வாழ முடியும். இன்று இலங்கையின் தென்பகுதியில் சிங்களமக்களும், தமிழ் மக்களும் இணைந்து வாழவில்லையா?

**அருவி: கொழும்பில் அடிக்கடி தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவதால் இங்கு ஏற்பட்டுள்ள பாதுகாப் பற்ற சூழ்நிலையும், அசௌகரியங்களும் ஒரு பிரச்சினையாக விளங்குகின்றது. இவற்றின் விளைவான சில ஒழுங்கீனங்கள்,- சில சந்தர்ப்பங்களில் பணம் அறவிடப்படுதல் - வடகிழக்கு யுத்தநிலையில் இருந்து தப்பி வாழ்வதற்கு இங்கு வந்த மக்களுக்கு இங்கும் இவை அச்சுறுத்தலாகவும்தொல்லையாகவும் விளங்குகின்றன. சம்பவங்கள் ஏதாவது நடைபெற்ற பின் எழுந்தமானமாக தமிழ் இளைஞர்களைக் கைது செய்து இவ்வாறான நிலைமைகளுக்கு உட்படுத்துவதற்குப் பதிலாக ஒரு திட்டமிட்ட பாதுகாப்பு ஒழுங்கை ஏற்படுத்த முடியாதா?**

ரணில்: ஒழுங்கீனங்கள் உயர்பொலிஸ் அதிகாரிகளிடமோ, பாதுகாப்பு அமைச்சிடமோ தெரிவிக்கப்பட்டால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும். ஆனால் ஒரு பாதுகாப்புத் திட்டம் ஏற்கனவே உள்ளது. எனினும் சோதனைகளை நாம் தொடர்ந்தும் நடத்தியே ஆகவேண்டும். இங்கு பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பது சிங்களவர்கள் மாத்திரமல்ல, தமிழர்களும் தான். கொழும்பு கண்டி போன்ற பெரிய நகரங்களில் மக்கள் தொடர்ந்துவந்தும் போய்க்கொண்டும் இருப்பார்கள். எனவே சோதனைகள் மறுசோதனைகள் யாவும் நடந்தபடியே இருக்க வேண்டும். இதுவும் பாதுகாப் புத்திட்டத்தின் ஒரு பகுதியே.இது தவிர்க்கமுடியாதது. 1988,1989 களில் கூட ஜே.வி.பி.பிரச்சினையில் இவ்வாறு மக்கள் கைதுகளுக்கும் சோதனைகளுக்கும் உள்ளாகியிருந்தார்கள். இப்போது உண்மையில் என்ன நிகழுகின்றது என்றால் கைதான நபர்கள் பற்றித் தெளிவு படுத்திக் கொள்வதற்கு சற்று அதிகமான காலம் பிடிக்கிறது. வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள நிலைமை அங்கு அவர்கள் பற்றிய தகவல்கள் அறிந்து கொள்வதனை தாமதப்படுத்துவதாய் உள்ளன.

அருவியில்
விளம்பரம்
செய்யுங்கள்.

தொடர்புகளுக்கு

அருவி,
த.பெ. இல 1354,
கொழும்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## (கனடா) கியூபெக் பிரச்சினைத் தீர்வுக்கான சர்வஜனவாக்கெடுப்பு

# ஒரு நொருங்கிய கண்ணாடி



கனடாவின் அரசியல் வரலாற்றில் 1992 ம் ஆண்டு ஐப்பசி 26ம்திகதி முக்கிய நாட்களில் ஒன்றாகி விட்டது. அன்று தான், கனடாவிற்கு நீண்டகாலத் தலையிடியாக இருந்து வந்த கியூபெக் பிரச்சினைக்கு தீர்வொன்றினைக் காணுவதைப் பிரதானமாகக் கொண்டு தற்போதுள்ள அரசியல் யாப்பை சீர் திருத்துவதற்கு மக்கள் அங்கீகாரத்தைக் கோரி நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு தோல்வியில் முடிந்தது. இந்தச் சீர்திருத்தத்தை வரைவதென்பது சுலப மானதாக இருக்கவில்லை. இரண்டு வருடங்கள் வரை பெரும்பிரயத்தனங் கள் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தோல்வியானது கனடிய மக்கள் தம்மைத் தாமே ஒரு நொருங்கிய கண்ணாடியில் பார்ப்பது போன்ற பிரமையை ஏற்ப டுத்தியுள்ளது. இது உலக அரங்கில் வியப்புடன் எழுப்பியுள்ள கேள்வி.- உலக அரங்கில் சமாதானப்பிரியனாக கனடா காட்டி வந்த நற்தோற்றத்துக்குப் பின்னால், அம்மக்களுக்கு இத்தகைய வக்கிர மான குணாம்சம் உள்ளார்ந்த ரீதியாக நீறுபூத்த நெருப்பாக இருந்து வந்துள்ளதா என்பதே, முக்கிய பிரச்சினையாக இருந்து வந்த கியூபெக் பிரச்சினைக்கான தீர்வைநோக்கிய பாதையில் இந்த சர்வ ஜனவாக்கெடுப்பு பல தடைக்கற்களை ஏற்படுத்திச் சென்றுள்ளது. அத்துடன் அரசியல் யாப்புக்கு ஒளிபாச்ச முற்பட்டு இருட்டுக்குள் தள்ளிவிட்ட நிலையும் ஏற்பட்டுள்ளது.

கனடிய அரசியல்யாப்பில் சீர்திருத் தங்களைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் இரண்டு வருடங்களுக்கு முன்னரே ஆரம்பமாகின. இந்தச் சீர்தி ருத்தம் சமஷ்டி, மாகாண, மண்டல ஆட்சிப்பிரிவு அரசாங்கங்களினதும் கனடாவின் பூர்வீக மக்களின் பிரதிநிதி களினதும் பூரணபங்களிப்புடனே மேற் கொள்ளப்பட்டது. "கனடாவின் எதிர் காலத்தை ஒன்று பட்டுச் சீராக்குதல்" என்ற பெயரிடப்பட்ட இந்தச் சீர்திருத்தம் ஆரம்பத்தில் சமஷ்டிப்பாராளுமன்றத் தில் 24 புரட்டாதி 1991 இல் முன் வைக் கப்பட்டது. இது பின்னர் பொதுச்சபை செனற் ஆகியவற்றின் கூட்டுக் குழுவிடம் கொடுக்கப்பட்டது. இக் குழு கனடாவின் பரவலான இடங்களுக்கும் சென்று இந்தச் சீர்திருத்தம் பற்றிய கருத்துக் களைப் பெற்றுக் கொண்டது. இக் குழு 3000 ஆலோசனைகளை ஆவண வடி வில் பெற்றுக் கொண்டதுடன் 700 தனிப்பட்டவர்களின் கருத்துக்களிற்கும் செவிமடுத்தது. இதே நேரத்தில் எல்லா மகாணங்களிலும், மண்டல ஆட்சிப் பிரிவுகளிலும் யாப்புச்சீர்திருத்தம் சம்பந் தமான அபிப்பிராயங்களை பெற்றுக் கொள்வதற்கான கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. பூர்வீக மக்களின் கருத்துக்கள், தேசிய பிராந்திய பூர்வீக மக்களின் நிறுவனங்களிற்கூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்டன. இவற்றினை ஆராய்வதற்கான நிபுணர்கள், நிறுவ னங்கள், பொதுமக்கள் கலந்துகொண்ட ஆறு தேசிய மகாநாடுகள் தொலைக் காட்சியில் காண்பிக்கப்பட்டன. இவை



இது கனடாவிற்கு உடன்படுவது. ஜனநாயகத்திற்கு உடன்படுவது. சரித்திரத்திற்கு உடன்படுவது: பிரச்சாரத்தின் போது கனடியப்பிரதமர் மல்ரோனி

தவிர கனடா முழுவதும் பல கூட்டங்கள் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், ஆலோசனைக் கூட்டங்கள் இடம் பெற் றன. இது விடயமான மாகாண முதல்வர் களின் பல கூட்டங்களிற்கு கனடியப் பிரதமர் தலைமை வகித்தார். கியூபெக் முதல்வரின் முழுமுதான பங்களிப்பும் இந்த யாப்புச் சீர்திருத்தத்திற்கு கிடைத்தது. 1992 ஆவணி 28 ம் திகதி கனடாவின் சார்லட்ட டவுன் நகரில் யாப்புச் சீர்திருத்தத்தின் இறுதி வடிவம் தயாரானது. எனவே இது சார்லட்ட டவுன் ஒப்பந்தம் என அழைக்கப்பட்டது. இந்தச் சீர்திருத்தத்தில் ஒற்றுமையும், வேற்றுமையும், அரசியல் நிறுவனங்கள், பங்களிப்பும் பொறுப்புகளும், பூர்வீக மக்கள், மாற்றம் செய்யும் முறை ஆகியவை உள்ளடக்கப்பட்டிருந்தன.

யாப்புச் சீர்திருத்தங்களை கனடியர்கள் அங்கீகரிக்கின்றார்களா என்பதற்கு "ஆம்" "இல்லை" என வாக்களிக்க 1992 ஐப்பசி 26 ம் திகதி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான திகதி நிட்சயிக்கப்பட்டு சிறிது காலம் வரை மக்கள் இதில் ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை. ஆனால் வாக்கெடுப்பு நடத்தும் திகதி நெருங்க நெருங்க இதன் மீதான ஆர்வம் களைகட்டத் தொடங்கியது. கனடிய மக்கள் முடிவுகளை மேற்கொள்ளுவதில், தங்களுக்குள்ள குடியியல் உரிமைகளை மிகக் கடுமையாகப் பிரயோகித்தார்கள். ஒப்பந்தம் விடயமான விவரங்களை அறிவதிலிருந்து இவற்றில் கேள்விகள் எழுப்புவது வரை இது நீண்டிருந்தது. கனடியர்களின் கவுன்சில் தலைவி மாட் பார்லோ கூறுகின்றார், "ஒரு கூட்டம் விண்வெளிப்பிரயாணிகளும், கொக்கி விளையாட்டு வீரர்களும் கனடாவை நேசிக்கும்படி எங்களுக்கு கூறவேண் டியதில்லை. எங்களுக்கு இந்த ஒப் பந்தத்தின் சட்ட ஆவணங்களே தேவை." கனடாவின் அனைத்து மாகாணங்களின் முதல்வர்களும் மண்டல ஆட்சித்தலை வர்களும் இந்தச் சீர்திருத்தத்திற்கு சார்பாக பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் கனடாவின் மூன்று பிரதான கட்சிகளைச்சார்ந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவர்களாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. கியூபெக்கின் முதல்வரும் ஒப்பந்தத்தை ஆதரித்துப் பிரச்சாரத்தை மேற்கொண்டார். பிரச்சார நடவடிக் கையின் பொழுது கனடியப்பிரதமர் மல்ரோனி "இது கனடாவிற்கு உடன் படுவது, ஜனநாயகத்திற்கு உடன்படுவது, சரிதிரத்திற்கு உடன்படுவது" என்று கூறினார். பெரும்பாலான முதல்வர்கள் இது கனடாவிற்கு புதுஉத்வேகத்தைக் கொண்டுவரும் என்று பிரச்சாரம் செய்தார்கள். சுகாதார மந்திரி பிநோல்ட் போசார்ட் "ஆம், வெற்றி பெற்றால், நான் கனடியனாக கூடுதலாக உணர்வேன். இது கியூபெக்கனாக குறைவாக உணர்வதாக இருக்க மாட்டாது." என்று கூறினார்.

ஒப்பந்தத்திற்கெதிராகவும் தீவிரப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்தத்திற்கு எதிராக கனடாவின் சீர்திருத்தக்கட்சி, கியூபெக் கட்சி என்பன தீவிரமாகச் செயற்பட்டன. முன்னாள்



இம்முறை நாங்கள் நமக்கு என்ன வேண்டாம் எனக் கூறியுள்ளோம். அடுத்த தடவை நமக்கு என்ன வேண்டும் எனக் கூறுவோம்: கியூபெக்குஸ் கட்சியின் தலைவர்- ஜக் சியூஸ்பரிஸ்யு

கனடியப்பிரதமர் ட்ரூடோவும் இந்த ஒப்பந்தத்திற்கெதிராக கடுமையான பிரச்சாரங்களை மேற்கொண்டார். இவர் கியூபெக்கின் தேசியவாதிகளையும் இவர்களுக்கு ஆதரவு வழங்கும் ஆங்கிலேயக் கனடியர்களையும் கண்டித்தார். இந்த ஒப்பந்தம் ஒரு குளறுபடியென்றும் இது ஒட்டுமொத்தமான "இல்லை" க்கு தகுதியானதென்றும் கூறியிருந்தார்.

இந்த வாக்கெடுப்பில் 75% தினர் வாக்களித்திருந்தனர். அரசியல்வாதிகள் என்றும் எதிர் பார்த்திராத வகையில், விரும்பாத ஒன்றிணைந்த சக்தியாக, வாக்காளர்கள் மாறினார்கள். 54.25%

# கனடிய அரசின் நிர்வாக அமைப்புமுறை

கனடா ஒரு சமஷ்டி அரசினைக்கொண்ட நாடாகும். இது 1867 இல் பிரிதிதானிய வடஅமரிக்கச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. இச் சட்டம் பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும் இது கனடாவிற்குள் முழுதான சுய அரசாங்கத்தினை ஏற்படுத்த அனுமதியளித்தது. இப்பொழுது கனடா ஒரு சுதந்திர இறைமையுள்ள அரசினைக் கொண்டுள்ளது. கனடாவின் அரசியல் யாப்பானது மத்தியப்படுத்தப்பட்ட சமஷ்டியினைக் கொண்டுள்ளதுடன் இது மத்திய அரசாங்கத்தினையே முதன்மைப் படுத்துகின்றது. ஆயினும் மாகாணங்கள் உள்ளூர் சம்பந்தப்பட்டவை எனக் கருதும் விடயங்கள் அவற்றுடன் விடப்பட்டுள்ளன. கனடிய அரசியல் யாப்பின் மூலமான பிரித்தானிய வடஅமரிக்கச் சட்டமானது பிரித்தானிய பாராளுமன்ற அமைப்பினை ஒத்ததாக இருந்தாலும் கனடா தனது தேவைகளின் நிமித்தம் இதில் மாற்றங்களையும் செய்துள்ளது.

கனடாவின் அரசியலமைப்பு பாராளுமன்ற முறையைக் கொண்டுள்ளதுடன், இது அமைச்சரவையினால் இயக்கப்படும். கனடாவின் தலைநகர் ஒட்டவாவில் அமைந்துள்ள பாராளுமன்றம் முடியாட்சியின் பிரதிநிதியையும், மகாதேசாதிபதியையும், பொதுச்சபையையும் செனற்றையும் கொண்டுள்ளது. கனடாவின் நிறைவேற்று அதிகாரம் பிரித்தானிய மகாராணிக்கு உட்பட்டதாகும். சட்டப்படி இவரது அதிகாரம் அதி கூடியதாக இருப்பினும் கனடாவின் பொதுச்சபையில் உள்ள மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவையின் ஆலோசனையின் படியே மகாராணி தனது அதிகாரங்களைச் செயற்படுத்துகின்றார். பெரும்பாலான விடயங்களில் மகாராணியை மகாதேசாதிபதியே பிரதிநித்துவம் செய்கின்றார். மகாதேசாதிபதி இப்பொழுதெல்லாம் கனடியராகவே இருந்து வருகின்றார். கனடாவின் அமைச்சரவையின் ஆலோசனையின் படி, மகாதேசாதிபதியை மகாராணி 5 தொடக்கம் 7 வருடங்கள் வரை நியமிப்பார். ஒவ்வொரு 5 வருடங்களுக் கொருமுறை கனடியப் பொதுத் தேர்தல் இடம் பெறும். பிரதமரே அமைச்சரவையைத் தெரிவு செய்வார். அமைச்சரவை செனட்டின் அங்கத்தவர்களை நியமிக்கும். இது அரசாங்கத்தின் மேல் சபை என அழைக்கப்படுகிறது. செனட்டானது 104 அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும். இவர்கள் வெவ்வேறு எண்ணிக்கையில் மாகாணங்களை நியமனப்படுத்துவதுடன் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பர்.

பொதுச்சபைக்கு அமைச்சரவை பொறுப்பானதாக இருக்கும். இது 264 அங்கத்தவர்களைக் கொண்டிருப்பதுடன் இவர்கள் மக்களால் ஒவ்வொரு மாகாணங்களிலும் உள்ள சனத்தொகையின் விகிதாசாரப்படி தெரிவு செய்யப்படுவார்கள். அனைத்து அரசியல் சாசனங்களுக்கும் இப் பொதுச்சபை பொறுப்பானதாக இருக்கும். கனடிய யாப்பானது அரசியல் கட்சிகள் இல்லாமல் நடைமுறைப்படுத்தப்பட முடியாத ஒன்றாகும். அரசியல் கட்சிகள் ஒரு நிலையான ஆட்சி அமைவதற்கு உறுதுணையாய் இருக்கின்றன. அத்துடன் அந்த அரசாங்கத்தை திட்டமிட்ட முறையில் விமர்சிக்கின்றன.

ஒவ்வொரு மாகாணமும் மத்திய அரசினைப் போன்றே மாகாண அரசினைக் கொண்டிருக்கும். ஆனால் மாகாண அரசில் மேல் சபை இருக்கமாட்டாது. மாகாண அரசின் கீழ் மாநகர அரசுகள் இயங்குகின்றன. மாநக்ர அரசுகள் பொலிஸ் சேவை, தீயணைப்புச சேவை, வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்றவற்றிற்குப் பொறுப்பாக இருக்கின்றன. □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## கியூபெக்
# ஒரு சுருக்கமான வரலாறு

பிரஞ்சு மொழி பேசுபவர்களைப் பெரும்பான்மையாகவும் கனடாவின் சனத்தொகையில் 27 % தினையும் கொண்ட கியூபெக், கனடாவின் மற்ற 9 மாகாணங்கள் மண்டல ஆட்சிப் பிரிவுகள் ஆகியவற்றுடன் ஒப்பிடப்படும்பொழுது பரப்பளவில் இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றது. 1534ம் ஆண்டு தொடக்கம் பிரான்ஸ் நாட்டில் இருந்து கனிப்பொருள் தேடும் நோக்குடன் சென் லோறன்ஸ் ஆற்றின் ஊடாக இங்கு வந்து குடியேறியவர்களின் பரம்பரை யினரே இன்றுள்ள கியூபெக் மக்களாவர். 1629 இல் ஆங்கிலேயர்களால் கியூபெக் கைப்பற்றப் பட்டதைத் தொடர்ந்து இங்கு குடியேறியிருந்த பிரெஞ்சு மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளானார்கள். அவர்கள் அன்று நடத்திய போராட்ட காலகட்டமே பின் வந்த தலைமுறையினரால் வீரமான காலமாகக் கருதப்படுகிறது. இதுவே கியூபெக் மக்களின் வீரர்களையும் முன்னோடிகளையும் உருவாக்கும் ஆரம்பப் புள்ளியுமாகியது. 1763 இல் உருவாகிய பாரிஸ்ஒப்பந்தத்தின் கீழ் கியூபெக் பிரதேசம் பிரித்தானியாவின் கீழ் வந்தது. கியூபெக் பிரதேசத்தில் அடிக்கடி இடம் பெற்று வந்த அமைதியின்மையும், தங்கள் சமூகத்தைக் காப்பாற்றிக்கொள்ள இந்த மக்கள் காட்டி வந்த துணிவும் தீவிரமும் அன்று கனடாவில் இருந்த பிரித்தானிய ஆட்சி யாளர்கள் இவர்களை அங்கீகரிக்கும் நடவடிக்கைகளை எடுக்க வைத்தது. இதற்கிணங்க 1774 இல் கியூபெக் சட்டம் ஏற்படுத்தப்பட்டு இம் மக்களின் சிவில் சட்டங்கள், இவர்களின் ரோமன் கத்தோலிக்க சமய நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டன. 1890 களில் பிரெஞ்சுபேசும் கனடியர்களுக்கும் ஆங்கிலம் பேசும் கனடியர்களுக்கும் இடையிலான உறவில் விரிசல்கள் ஏற்பட ஆரம்பித்தன. பிரெஞ்சுக் கனடியர்கள் அப்போதிருந்தே இராஜங்க நடவடிக்கைகளில் கலந்து கொள்ள தயக்கம் காட்டி வந்தனர். பிரெஞ்சுத் தேசியவாதம் 1890களுக்குப் பின்னர் கியூபெக்கில் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்களினால் வலிமை பெற ஆரம்பித்தது. 1981களில் கியூபெக் மற்ற எல்லா மாகாணங்களிலும் பார்க்க கூடிய கைத்தொழில் மயமாக் கப்பட்ட செல்வந்த மாகாணமாக விளங்கியபோதும், இதன் பெரும்பான்மையான தொழில் நிறுவனங்கள் ஆங்கிலேயக் கனடியர்களுக்கும் அமரிக்கர்களுக்குமே சொந்தமாக இருந்தது. இதனை கியூபெக்மக்கள் ஒருவித ஆக்கிரமிப்பாகவே கருதி வந்துள்ளார்கள். 1966க்குப் பின்னர், அது வரை ஜனநாயக வரையறைக்குள் தமது அரசியல் கோரிக்கைகளை வலியுறுத்தி வந்த கியூபெக் மக்களிடையே தீவிரவாதப்போக்கு வளர ஆரம்பித்தது. இங்கிரு ந்த அரசியல் கட்சிகள் கியூபெக் மக்களின் தீர்விற்காக வெவ்வேறு தீர்வுகளை முன்வைத் தன. லிபரல் கட்சி சமஷ்டியையும், யூனியன் தேசியக் கட்சி மாகாணங்களுக்கான கூடுதல் அதிகாரத்தையும் பாரம்பரிய இடதுசாரிக்கட்சிகள் கியூபெக்கிற்கு விசேட அந்தஸ்து என்பதிலிருந்து பிரிவினையும் சுதந்திரமும் வரையிலான கோரிக்கைகளையும் முன்வைத்தன. 1970இல் முதன் முதலில் பிரிவினையை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்ட கியூபெக் கட்சி 24% மான வாக்குகளைப் பெற்றது. இது பிரிவினை வாதம் கியூபெக் மக்கள் மத்தியில் கருக்கொண்டு விட்டதனைச் சுட்டிக் காட்டியது. இவற்றோடு சில சமூகப் புரட்சியாளர்கள் வேறு சில அரசியல் போராட்ட வடிவங்களை வன்முறைமூலம் செயற்படுத்த முனைந்தார்கள். இதனால் 1963 இல் குண்டுத்தாக்குதல்கள் ஆரம்பித்துத் தொடர்ந்தும் இடம்பெற்றது. 1970 களில் மீண்டும் வன்முறைகள் வெடித்தன. பலர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இராணுவமும் கியூபெக்கிற்குள் வரவழைக்கப்பட்டது. இவைகளினால் கியூபெக்கின் பிரெஞ்சுக் கனடியர்கள் கனடாவின் பொது நீரோட்டத்தில் இருந்து அன்னியப்பட்ட நிலை தோன்றி அது தீர்க்கப்படாமலே வளர்ந்து கொண்டு வந்தது. தமது மொழி, கலாச்சாரம், பிரதேசம், வளம் என்பவை காப்பாற்றப் படவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் பிரெசுக் கனடி யர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஒன்றும் வெற்றி அளிக்கவில்லை. 1980இல் கியூபெக்கில் நடைபெற்ற ஒரு வாக்கெடுப்பில், 60% மானவர்கள் பிரிந்து செல்ல வேண்டாம் என வாக்களித்தனர். கனடிய அரசியல் யாப்பில் கியூபெக் உத்தியோகபூர்வமான இரு மொழிகளைக் கொண்ட மாகாணமாக அங்கீ கரிக்கப்பட்டுள்ளது. 1969இல் கனடிய பாராளுமன்றம் உத்தியோக மொழிச் சட்டத்தினை நிறைவேற்றியதுடன், இதில் ஆங்கிலமும் பிரெஞ்சும் சம அந்தஸ்து கொண்டனவாகவும் இவை யிரண்டும் கனடாவின் பாராளுமன்றம் மற்றும் அனைத்து அரசநிறுவனங்களிற்கும் உத்தியோக மொழியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தினர் இந்த ஒப்பந்தத்தினை நிராகரித்ததன் மூலம் சர்வஜன வாக்கெடுப்பெபு தோற்கடிக் கப்பட்டது. 44.8% தினர் சார்பாக வாக்களித் திருந்தனர். இந்த ஒப்பந்தம் கியூபெக் உட்பட 6 மாகாண ங்களிலும் ஒரு மண்டல் பிரதேசத்திலும் தோற்கடிக் கப்பட்டது. இதில் வாக்கா ளர்கள் இல்லை என வாக்க ளிப்பதற்கு பல்வேறு கார ணங்களையும் கொண்டி ருந்தனர். அதே வேளை இல்லை என வாக்களிப் பதற்கு ஏதாவது ஒரு காரணம் கூடப் போதுமா னதாக இருந்தது.

**மகிழ்ச்சி....... கூடுதலானபாதைத் தடைகள். கூடுதலானமக்கள் கொல்லப்படுதல் மகிழ்ச்சியான தாகும்.கனடா தனது பூர்வீக மக்களை ஒதுக்கி விட்டது.-கனடா பூர்வீக சபையின் தலைவர் ரொன் ஜோன்.**

"சார்லட்ட டவுன் ஒப்பந்தம் ஒரு சரித்திரம். உடனடி யாக அரசியல் யாப்பு விடயம் கையாளப்பட மாட்டாது. இந்த முடிவினை நான் பகிரங்கமாகவே ஏற்றுக்கொண்டு மதிப்ப துடன், கனடியர்களான நாம் இந்த முக்கியமான விட யத்தில் பொறுப்புடன் செயற்பட்டோம் என்பதை யிட்டு பெருமைப

www.tamilarangam.net

படுகின்றேன்." என்று ஒப்பந்தம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் கனடியப்பிரதமர் மல்ரோனி கூறினார். "நான் இந்த முடிவினை ஏற்றுக்கொள்கின்றேன். மக்களின் இத் தீர்ப்பினை பொதுவாழ்வில் உள்ள எவரும் ஏற்றுக் கொள்வார்கள். இப்பொழுது இந்த முடிவினை நோக்கவும் அதிலிருந்து கற்றுக்கொள்ளவும் முன்நோக்கிச்செல்லவும் இதுவே நேரமாகும்." இவ்வாறு உரைத்தார் ஒன்ராறியோ முதல்வர் பொப் ரா.

மற்றய மாகாணங்களில் முடிவுகள் வெளியானவுடன் அரசியல் தலைவர்கள் தொலைக்காட்சியிலும் பத்திரிகை களிலும் பேட்டி காணப்பட்டார்கள். ஆனால் கியூபெக்கின் முதல் வரும், மற்றய தலைவர்களும் மண்டபங்கள் நிரம்பிய ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றினார்கள். "இல்லை, முடிவு கனடாவிற்குள் கியூபெக்கின் எதிர்காலம் நிராகரிக்கப்பட்டதென நான் கருதவில்லை. கனடா விற்குள்ளேயே கியூபெக்கினைக்கட்டி எழுப்புவதே எனது அரசாங்கத்தினது கொள்கையாகும்." என்று கியூபெக் முதல்வர் றொபர்ட் பொரசா கூறினார். ஒப்பந்தத் திற்கெதிராக பிரச்சாரம் செய்த கியூபெக் குய்க்கட்சியின் தலைவர், "இந்த சர்வஜனவாக்கெடுப்பு கியூபெக் மக்ககளாகிய நாம் யார், எங்களுக்கு என்ன வேண்டும் என்பவற்றை அறிந்து கொள்ளும் திசையில் ஒரு படி மேலே செல்வதற்கு வழிவகுத்துள்ளது. இம்முறை நாங்கள் எங்களுக்கு வேண்டாம் எனக் கூறியுள்ளோம். அடுத்த தடவை எங்களுக்கு என்ன வேண்டும் என்ப தைக் கூறுவோம். கியூபெக் தான்சுயமாக அடைய வேண்டிய இடத்திற்கு தீவிரமான அடியினை எடுத்துவைக்கும் சக்தியி னைக் கொண்டுள்ளது. இந்தப் படிப்பினை



இல்லை என்ற முடிவால் கனடாவிற்குள் கியூபெக்கின் எதிர்காலம் நிகாரிக் கப்பட்டதென நான் கருதவில்லை. கனடா விற்குள்ளேயே கியூபெக்கினைக் கட்டியெழுப்புவதே எனது அரசின் கொள்கையாகும்': கியூபெக் முதல்வர் றொபர்ட் பொரசா.

# தோற்கடிக்கப்பட்ட சீர்திருத்தங்கள்

1867 இன் யாப்பில் மாற்றத்திற்காகக் கொனண்டுவரப்பட்ட முன்மொழிவுகளில் பிரதானமானவை.

1 - கனடாவின் பூர்வீக மக்கள் (இவர்கள் பூர்வீக இந்தியர்கள் என அழைக்கப்டுகின்றார்கள்.) இந்த மண்ணை முதன் முதலாக ஆட்சி செய்தவர்கள் என்பதும் அவர்கள் தங்களது மொழி, கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றை வளர்ப்பதற்கு உரிமைகள் கொண்டவர்கள் என்பதும், இவர்களின் சமூகங்களின் ஒருமைப்பாடு உறுதிசெய்யப்படுவதுடன் அவர்களது அரசுகள் கனடாவின் அரசாங்கங்களின் மூன்று அமைப்புகளில் ஒன்றாக அமையும்.

2 - கியூபெக் கனடாவிற்குள் அமைந்துள்ள ஒரு தனித்தன்மை கொண்ட சமூகமாகும். இது பிரெஞ்சு மொழி பேசும் சமூகத்தைப் பெரும்பான்மையாகக் கொண்டதுடன் தனிக்குவமான கலாச்சா ரத்தையும் சிவில்சட்ட பாரம்பரியத்தையும் கொண்டுள்ளது.

3 - கனடியர்களும் அவர்களது அரசுகளும் சிறுபான்மை அரசு மொழிகளை வளர்க்கவும் பேணவும் பொறுப்பானவர்கள்.

4 - பல நாடுகளில் இருந்து வந்து, வேறுபட்ட இன கலாச்சா ரங்களைப் பிரதிபலிக்கும் ஒரு பலமான கனடாவைக் கட்டியெழு ப்புவதற்கு பங்களித்து, தொடர்ந்தும் பங்களித்து வரும் மக்க ளைக் கொண்ட கனடாவில் இன நிற சமத்துவத்தைப் பேணுவ தற்கு கனடியர்கள் பொறுப்பானவர்கள்.

5 - கியூபெக்கின் தனித்துவமான சமூகத்தைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் கியூபெக் அரசினது பங்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6 - மாகாணங்கள் அனைத்தும் சமமானவை என்பதன் அடிப்படையை ஏற்றுக் கொள்வதுடன் அவர்களின் வேறுபட்ட இயல்புகளையும் ஏற்றுக்கொள்வார்கள்.

7 - செனட்டர்கள் மாகாணமக்களினால் அல்லது மாகாண அரசுகளினால் தெரிவுசெய்யப்படவேண்டும்.

8 - 62 செனட்டர்கள் ஆரம்பத்தில் இருப்பதுடன், இதில் ஒவ் வொரு மாகாணத்திலிருந்தும் ஆறுபேர் வீதம் ஒவ்வொருமண்டல ஆட்சிப்பிரதேசத்திலிருந்து தலா ஒவ்வொருவரும் இருப்பர்.

9 - செனட்டில் பூர்வீக மக்களின் பிரதிநித்துவம் யாப்பில் உறுதிசெய்யப்படுவதுடன், இவர்களுக்கு மாகா[illegible] மண்டல ஆட்சிப்பிரிவுகள் ஆகியவற்றுக்கு தனியாக செனட் ஆசனங்கள் வழங்கப்படும்.

10 - அதி உயர் நீதிமன்றத்தில் கியூபெக் பிரதிநிதிகள் கட்டாயம் மூன்றுபேர் இடம்பெறவேண்டும்.

11 - 1996 இல் இடம் பெறவுள்ள குடிசனமதிப்பிற்கிணங்க, பொதுச்சபையில் அதிகுறைந்தது 25% மான ஆசனங்கள் கியூ பெக்கிற்கு வழங்குவது உறுதிசெய்யப்படும்.

கனடாவின் வரலாற்றில் அனைத்து அரசாங்கங்களும், மண்டல ஆட்சிப்பிரிவு தலைவர்களும், பூர்வீகக்குழுக்களும் சீர்திருத்தத்திற்கு ஒன்றிணைந்தது இதுவே முதல்தடவையாக அமைந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த முடிவினை நான் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு மதிப்பதுடன், கனடியர்களாகிய நாம் இந்த முக்கியமான விடயத்தில் எவ்வாறு பொறுப்புடன் செயற்பட்டோம் என்பதையிட்டுப் பெருமைப்படுகின்றேன்.- சர்வஜனவாக்கெடுப்பு தோற்கடிக்கப்பட்டபின் பிரதமர் மல்ரோனி.

எதிர்காலத்திற்காக மறக்கப் படக் கூடாது. இப்பொழுது எவரினதும் பயமுறுத்தல்களும் இன்றி நாங்கள் எமது எதிர் காலத்தினைத் தீர்மா னிக்கலாம்." என்றும் கூறினார்.

வாக்கெடுப்பு முடிவு பூர்வீக மக்களின் தலைவர்களையே பெரிதும் கவலை கொள்ள வைத்தது. இந்த ஒப்பந்தம் அவர்களது எதிர்கால பிரகாசமான சுயஆட்சிக்கு ஒரு ஆரம்பமென அவர்கள் நம்பியிருந்தார்கள். கனடாவின் பூர்வீகசபையின் தலைவர் ரொன்ஜோர்ஜ் ஆத்திரத்துடன் கூறினார் "மகிழ்ச்சி.... கூடுதலான பாதைத்தடைகள்; கூடுத லான மக்கள் கொல்லப்படுதல் மகிழ்ச்சி யானதாகும். கனடாதனது பூர்வீக மக்கனை ஒதுக்கி விட்டது.". பூர்வீக மக்கள் சில காலத்தி ற்கு முன்னர் தமது கோரிக்கைகளை முன்வைத்து வீதித் தடைகளை ஏற்படுத்தி எதிர்ப்பினை வெளிப்படுத்தியதால் வன்முறைக்ள் தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது. ஆச்சரியம் என்னவெனில் பூர்வீக மக்களின் பெரும்பான்மையானவர்கள் ஒப்பந்தத்திற்கெதிராகவே வாக்களித்திருந்தனர்.

ஆங்கிலேயக்கனடியர்கள் கியூபெக் ஒரு தனித்துவமான சமூகம் என்பதனை ஏற்றுக்கொள்ள உள்ளூர விரும்பவில்லை. பூர்வீகமக்களிற்கான சுய அரசாங்கத்தினைப்பற்றி வெளிப்ப டையாக ஒன்றும் இவர்கள் கூறாவிட்டாலும் கூட இதனையிட்டும் ஐயப்பாடுகளைக் கொண்டிருந் தார்கள். பல ஆங்கிலேயக் கனடியர்கள், ஒரு குறிப்பிட்ட சமூகம் பிரத்தியேகத் தன்மைகளைப்பெறுவதை ஏற்றுக்கொள்ள இயலாது எனவே கருதினார்கள். கியூபெக் மக்கள் இந்த ஒப்பந்தம் தங்களது அபிலாசைகளைபோது மான அளவு உள்ளடக்கவில்லை எனக் கருதியேஇதனை நிராகரித்திருந்தார்கள். பூர்வீக மக்கள் இல்லைஎன வாக்களித்ததற்கு இரண்டு பிரதான காரணங்கள் கூறப்பட்டன. ஒன்று அரசாங்கத்தை அவர்கள் நம்பவில்லை. இரண்டாவது பூர்வீக மக்களிற்கு இன்னும் கூடுதலான அம்சங்கள் இடம் பெற வேண்டும்.

கனடாவில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடிகள், வேலையில்லாப் பிரச்சினை, வரிஉயர்வு போன்றவற்றினால் மக்களிற்கு ஏற்பட்டிருந்த பாதிப்புகள் சர்வஜனவாக்கெடுப்பில் நேரடியான பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தன. கனடிய அரசியல் யாப்பு மாற்றங்களிலும் பார்க்க பொருளாதார நலன்களையே முதன்மைப் படுத்து வதாக இந்த வாக்கெடுப்பு அமைந்தது.

கல்வி ரீதியாக, பல்கலைக்கழகப் பட்டதாரிகளே ஒப்பந்தத் திற்கு சார்பாக கூடுதலாக வாக்களித்திருந்தார்கள். வயது ரீதியில் கனடிய இளைஞர்களே ஒப்பந்தத்திற்கெதிராக வாக்களித்திருந்தனர். வருமானஅடிப்படையில் பார்த்தால் குறைந்த வருமானமுள்ளவர்களே கூடுதலாக ஒப்பந்தத்திற்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

ஆம், இல்லை என்று மாத்திரம் தீர்மானிக்கின்ற ஒரு சர்வஜன வாக்கெடுப்பில் பல்வேறு பிரச்சினைகளையும் ஒன்றாக முன்வைத்ததும் இதன் தோல்விக்கு ஒருகாரணமாக அமைந்தது. ஒப்பந்தத்தில் ஒரு அம்சம் பிடிக்காவிட்டால் கூட ஒப்பந்த்தை நிராகரிக்கும் நிலை இதனால் எழுந்தது. ஒவ்வொன்றும் தனித்தனியே மக்களின் அங்கீகாரத்திற்கு விடப்பட்டிருந்தால் அவற்றில் பல அம்சங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவும் கூடும்.

இந்த வாக்கெடுப்பு சில எதிர்காலக் கேள்விகளையும் விட்டுச் சென்றுள்ளது. பிரதமர் மல்ரோனியின் எதிர்காலம் எவ்வாறு அமையப்போகின்றது? கியூபெக்கின் இந்த ஒப்பந்த நிராகரிப்பு என்றாவது ஒருநாள் பிரிந்து செல்வதற்கு அடிப்படையாக அமையுமா? பூர்வீக மக்களிடையே செல்வாக்குப் பெற்று வரும் இளம் தீவிரவாதத் தலைவக்களது செயற்பாடுகள் எவ்வாறு அமையப்போகின்றது. வன்முறைப்போராட்டங்கள் முதன்மைபெறுமா? பிரெஞ்சு, பூர்வீக மக்களது அரசியல் சுதந்திரத்திற்கான விடயங்களில் ஆங்கிலம் பேசும் கனடியர்களுக்கு ஏற்பட்டு வரும் காழ்ப்புணர்ச்சி நீடித்து வளர்ச்சியடைந்தால் அண்மையில் குடியேறி இருப்ப வர்களை குறிப்பாக இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்தில் எவ்வாறான பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்?



ஆம் வெற்றிபெற்றால் நான் கனடியனாக கூடுதலாக உணர்வேன். இது கியூபெக்கனாக குறைவாகஉணர்வதாக இருக்க மாட்டாது.: சுகாதார அமைச்சர்பெனோல்ட் போசார்ட்.

*கட்டுரை: சொர்ணலிங்கம்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இலங்கைச்
# சஞ்சிகைகள்

இது புதிய சஞ்சிகைகளின் காலமா? அப்படித்தான் தோன்றுகின்றது. எமது நாட்டுச் சூழல் காரணமாக சிறிது காலம் தடைப்பட்டுப்போன சிறுபத்திரிகைள் மீண்டும் முளைவிட ஆரம்பித்துள்ளன. "ஆகவே", "நந்தலாலா", "படி" போன்ற புதிய சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. "ஆகவே" சஞ்சிகையின் முதல் பக்கத்தில் கூறுவது போல **"தோன்றி வளர்ந்து சிதைந்து அழிந்து மறுபடியும் மறுபடியும் புதியன தோன்றும்."** ஆம், நம் நாட்டில் சிறுபத்திரிகைகளுக்கும் இது பொருந்தும். இலங்கையில் பத்திரிகைத்துறை கையைச் சுட்டுக்கொள்ளும் முயற்சி. அதிலும் சிறுபத்திரிகைகளைப் பற்றி சொல்லவே வேண்டாம். ஆரோக்கியமான சமூகவளர்ச்சிக்கு சிறுபத்திரிகைகள் இன்றியமையாதவை. கேளிக்கைகளின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கும் சமூகத்தை, முற்றிலும் அழிந்து விடாமல் ஓரளவேனும் சமூகத்தின் உயிரோட்டத்தை இவையும் காக்கின்றன. இப் பகுதியில் அருவி வாசகர்களுக்கு மேற்கூறிய சஞ்சிகைகளை அறிமுகம் செய்து வைக்கின்றோம்.

**சஞ்சிகை**
**நந்தலாலா**
**காலாண்டு கலை இலக்கிய சஞ்சிகை.**
**விலை ரூபா 15.** மலையகத்திலிருந்து நந்தலாலா இதழ் வெளிவந்துள்ளது. இவ்இதழ், இலக்கிய அம்சங்களைக் கூடுதலாக வெளிக்கொணர்ந்தாலும், மலையக மக்களின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றான தனியார் மயமாக்கலுக்கும் முக்கிய இடம் கொடுத்துள்ளனர். இவை தொடர்பான பிரச்சினைகளை தொழிலாளர்களுடைய பேட்டியின் மூலமே வெளிக்கொண்டு வந்திருப்பது சிறப்பம்சம். கட்டுரையின் பின்னிணைப்பு மூலம், தனியார் மயமாக்கலின் விளைவினால், தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பல தகவல்களை பத்திரிகைச் செய்திகள் மூலம் இணைத்திருப்பது சிறப்பானது. பொதுவாகக் கலாண்டுச் சஞ்சிகைகள் பொதுமக்கள் மத்தியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி விடுவதில்லை. தேடிப்படிக்கும் தீவிர வாசகர்களுக்கே காலாண்டுச் சஞ்சிகைகள் சென்றடையும். அவ் வாசகர்களுக்கு நந்தலாலாவின் தரம் போதுமானதாக இல்லை. மலையகத்திலிருந்து வெளிவரும் இச் சஞ்சிகை, மலையக சாதாரண வாசகர்களை, இது எவ்விதம் பாதிக்கும் என்பது கேள்விக்குறியே? நந்தலாலா சிறுபத்திரிகை போலுமல்லாமல், பரந்த வாசகர்களை சென்றடையக்கூடிதாகவும் அல்லாமல் இடைநிலைச் சஞ்சிகையாக இருக்கின்றது. ஒரு சஞ்சிகை தனது வாசகர்களைத் தெரிவுசெய்வதில் கவனமாக இருக்க வேண்டும். இல்லையேல் பத்திரிகையின் நோக்கம் வெற்றி பெறமாட்டாது.


சஞ்சிகையின் தனியார் மயமாக்கல் தொடர்பான பேட்டியில் இருந்து.....
**அவனுங்க (கங்காணி, . கணக்குப்பிள்ளை) கொடுமை பொறுக்க ஏலாது. இப்ப நான் மாடு வளர்க்கிறேன்னு சொல்வேன். - குட்டி போட்டா ரெண்டு போத்த பால் அனுப்பி விடு அப்படி எம்பாங்க. மரக்கறி இருந்தா அதையும் அனுப்பிரனும். வெறகு குச்சி கொணாந்து போடணும். அப்டி ஏலாதுன்னா, வேலைத்தளத்தில பழி வாங்கிடுவானுங்க.**

**ஆகவே**
**(ஆசிரியர்: ஜபார்),**
**படி**
**(ஆசிரியர்குழு:வெ.தவராஜா, கே. லோரன்ஸ், ஜீ. நிர்மலராஜ்)**
இரண்டும் கிழக்குமாகாணத்தில் இருந்து முறையே, திருகோணமலையில் இருந்தும் மட்டக்களப்பில் இருந்தும் வெளிவருகின்றன.இரண்டுமே தத்தமது முதலாவது இத்ழிலேயே, ஓவியக்கலைக்கு முக்கிய இடம் கொடுத்துள்ளன. சிறுபத்திரிகைகள் பெருமளவுக்குத் தொடாத விடயம் இது. இவை போன்ற சஞ்சிகைகள் ஆர்வமுள்ள வாசகர்களால் தேடி விரும்பி வாங்கிப் படிக்கப்படுகின்றன. "ஆகவே" சஞ்சிகை விரும்பிப்படிப்பவர்களுக்கான வெளியீடு என்று தன்னைப் பிரகடனப்படுத்தியுள்ளது. எனவே இச்சஞ்சிகைகளில் தமிழில் வெளிவந்த ஆக்கங்களை மறுபதிப்பு செய்வது தவிர்க்கப்படக்கூடியது. இவையிரண்டிலும் நிறைவான ஒரு வாசிப்பைப் பெற்றுக்கொள்ள பக்கங்களின் வரையறை தடையாக இருக்கின்றது. இது சிறுபத்திரிகைகளுக்கு இருக்கக்கூடிய பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக இருக்கலாம் என நினைக்கிறேன். இங்கு இச் சஞ்சிகளை விமர்சனம் செய்வதல்ல நோக்கம். அறிமுகம் செய்வதே. இச் சஞ்சிகைகள் தமது தளத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்துவதாயின், பத்திரிகைகள் தொடர்ச்சியாக ஒழுங்காக வெளிவரவேண்டும் என்பது முதன்மையானது.




படியில் வெளிவந்த சோலைக்கிளியின் கவிதையொன்றிவிருந்து,

**இன்னும் நாய் போகிறது,**
**அதன் தோளில்**
**இன்னும் காகம் இருக்கிறது.**
**இது உலக சமாதானம் ஏற்படும் சகுனமா!**
**மனித அழிவுகள் நிற்கும்**
**நேரமா!**
**ஒரு கவிஞன்**
**அது நான்தான்,**
**தினமும் கண்ணீர்**
**விடுகிறேன்**
**மனித அழிவுகளுக்காக.**
**இந்த காக்கை நாய் சவாரி**
**திருப்தி தருகிறது.**
**பார்க்க.**



ஆகவே வில் வெளிவந்த உண்ணி என்ற சிறு கதையில் இருந்து...

**"ஒணைரை மாசத்துக்கு முன்னால ஆமிக்காரன் ரவுண்டப்புக்கு வரக்குள்ள விடியக்காலயிலேயே காட்டுக்குள்ள ஓடீற்றன். சுத்திவர வெடிச்சத்தம். செல்லும் விழுந்திது. பகல் முத்தலா சருகை அள்ளி மூடிற்றுப் படுத்திருந்தன். அன்று முத்திலா சாப்பாடும் இல்லை, வீட்ட திரும்பி வரக்குள்ள இருட்டுப் பட்டிற்று. அன்றைக்குத்தான் இச் சருகுண்ணி காதுக்குள்ள பூந்திருக்கும்."**
**"சரி, இப்ப அதை புடுங்கிற்றன்."**
**வடிவே லுவுக்கு இன்னமும் காது வலித்துக் கொண்டிவருந்தது. காதுக்குள் இருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.. உண்ணி கழன்றாலும் வேதனை தீராதோ? வடிவேலுவுக்கு அதற்கு விடை தெரியவில்லை.**




– **கௌதமன்.**–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அர்ப்பணங்கள்

———————மனுதர்மன்

"மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கட்கு..............," அதற்குமேல் எழுதாது நின்றுவிட்ட கை மெதுவாக மேலெழுந்து பேனாவின் பின்முனையை நெற்றி வகிட்டில் உராய்ந்து நின்றது. சிந்தனையின் பாரத்தினால் தலை கவிழ்ந்து கொண்டது. மூளை திணறலுடன் வார்த்தைகளை உருப்போட்டுக் கொண்டது. ஆனால் மனமோ வீட்டைச் சுற்றியே வட்டமிட்டது.

"தங்கள் அரசின் நீதியற்ற நடவடிக்கையால் வேலையிழந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை......"

ஜெகநாதன் ஒரு தொழிற்சங்கவாதி. கம்யூனிஸ்ட். அவரது வாழ்வின் ஏழ்மையும் கம்யூனிஸ்ட். உடையின் எழிமையும் கம்யூனிஸ்ட். முகச் சவரமும் கம்யூனிஸ்ட்.

".....கருணைகூர்ந்து மீண்டும் வேலையிற் சேர்த்துக் கொண்டு அவர்கள் வேலைநீக்கப் பட்டிருந்த காலத்திற்குரிய இழப்பீட்டுத் தொகையையும் கொடுத்து,....."

எப்படியும் மகஜரை விரைவில் எழுதி முடித்துவிட்டு வீடு போய்ச்சேரவேண்டும். இதுவரைக்கும் என்ன நடந்திருக்குமோ தெரியாது.

"...அவர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைக்கு ஒரு நீதியான தீர்வை வழங்கும்படி ......."

ஜெகநாதன் தலையை அழுத்திக்கொண்டார். நேரம் போய்க் கொண்டிருக்கிறது. காலையில் மகனின் நெற்றியைத் தொட்டுப் பார்த்த கை இன்னும் சுட்டுக்கொண்டிருப்பதுபோல் ஒரு பிரமை. காச்சல் சற்று அதிகமோ? நான் அலட்சியமாக இருந்துவிட்டேனோ? சோர்ந்துபோன கண்களும் வறண்டுபோன உதடுகளுமாக மகனின்முகம் மனத்திரையில் நிழலாடி மறைந்தது. சே... என்ன துடிதுடிப்பானவன் அவன்! அவரது உடலில் ஊர்ந்து ஏறி, வாணீர் வாயால் கன்னங்களைக் கௌவ்வி எச்சிற்படுத்தி, என்ன பாடுபடுத்தும் அவன், இப்போது தூக்கினால் துவண்டு விழுமளவிற்கு சோர்ந்து போய்ப் படுத்திருந்தான்..உடனே வீடு போய்ச்சேரவேண்டும். இந்த மகஜரை விரைவில் எழுதி முடிக்கவேண்டும்.

"....தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். இக்கோரிக்கை நிராகரிக்கப்படும் பட்சத்தில்....."

ஜெகநாதனுக்கு இரண்டு மனைவிகள். ஒன்று அவரது தொழிற்சங்கம். மற்றயது கலாமதி. இப்படிச் சொல்வதில் தப்பில்லை. ஏனெனில் கலாமதி தன்வாயாலேயே இதைப் பல தடவை சொன்னதுண்டு. "நீங்கள் என்னைக் கலியாணம் கட்டியிருக்கிறீங்களா, இல்லை உங்கட தொழிற்சங்கத்தைக் கட்டியிருக்கிறீங்களா.....?"என வீட்டுவேலைகளை தனக்குச் சம்பந்தமேயில்லாததுபோல் விட்டுவிட்டு தொழிற்சங்கம் தொழிற்சங்கமென்று ஓடும் ஜெகநாதனைப் பார்த்து வாசற்படியில் வைத்து கடைசி வார்த்தையாக அவள் இதைக் கேட்பாள். பதில்கூறாமல் ஆனால் குறிக்கோளில் எந்த மாற்றமுமில்லாமல் அவர் நிதானமாக வெளியேறுவார்.அது கலாமதி கோபப்பட்டு ஆத்திரப்பட்டு எப்படியாயினும் ஜெகநாதனை குடும்பப்பொறுப்புள்ளவராக ஆக்கிவிடவேண்டுமென்று தெண்டித்த காலம். ஆனால் இப்போது அதெல்லாம் சலித்துப்போய் அவளும் மௌனமாகி விட்டாள். ஜெகநாதனைக் காதலித்தபோது அவள் அவர்பற்றி ஒரு பிரமிப்புடன்தான் இருந்தாள். அவரது கொள்கைகள் அவளுக்கும் பிடித்திருந்தன. அவரது இதயத்தில் மற்றவர்களிடம் சாதாரணமாகக் காணப்படாத தாய்மை இருப்பதைக் கண்டாள். அவரது பொறுமை, அவரதுஉறுதி எல்லாமே அவளைக் கவர்ந்திருந்தது. இவ்வளவு அர்ப்பண உணர்வுள்ள ஒருவரின் அன்புதான் மிகஉயர்ந்த அன்பாக இருக்குமென்றும் அவருடனான வாழ்க்கையே உண்மையான இன்பத்தையும் திருப்தியையும் தருமெனவும் எண்ணினாள். அதற்காகவே பிடிவாதமாக நின்று பெற்றோரது எதிர்ப்பையும் மீறி இவரைக் கரம்பிடித்தாள்.

ஆனால் குடும்பம் என்று வந்தபின்பு....

மெல்லமெல்ல வாழ்க்கையைப்பற்றிய பிரச்சினைகள் முளைவிடத்தொடங்கியன. ஜெகநாதனில் எந்தவித மாற்றமும் இல்லை. அவர் மேலும்மேலும் தனது இலட்சியப்பணிகளின் பக்கம் தான் தன்னை ஈடுபடுத்திச்செல்வதாகவே தோன்றியது. அவள் மனதில் மெல்லவே ஒரு அச்சம் வளரத்தொடங்கியது. இப்படியே போனால் குடும்பநிலை என்னாவது?

"சமுதாயம் ஒட்டுமொத்தமாக விடுதலையடையும் வரை தனிமனிதன் விடுதலையடையப் போவதில்லை."

"தனிமனித நலன்களை சமுதாயநலன்களுக்குக் கீழ்ப்படுத்து."

ஜெகநாதனின் வார்த்தைகள் ஆரம்பத்தில் இருந்ததைப்போல இப்போதெல்லாம் கவர்ச்சிகரமானதாக அவளுக்குத் தோன்றவில்லை. வாழ்க்கைக்கு உதவாத வறட்டு வேதாந்தமாகவே தோன்றியது. அவளுக்கு இப்போது குடும்பத்தில் சுமையேறிப்போன பல பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டாக வேண்டும். ஆரம்பத்தில் அவள் மெல்லமெல்ல அவரைச் சொல்லித் திருத்தலாம் என்று நினைத்தாள். பின்னர் அவளும் வாதாடத் தலைப்பட்டாள். "நீங்கள் மட்டும் தான் இலட்சியம் இலட்சியம் என்று சாகிறீங்க. உங்கடை தலைவர்களெல்லாம் வாயால மட்டும் தத்துவம் பேசிக்கொண்டு காரும் பங்களாவுமாய் சொகுசாய் வாழுகினம்" என்று தனக்குத்தெரிந்த மட்டில் சிலபேரை உதாரணம் காட்டியும் பார்த்தாள். ஆனால் ஜெகநாதன் மாறவேயில்லை. அடுத்தது சண்டை. வீட்டிற்கு சாமான் இல்லை, அதில்லை இதில்லை என்று தொடங்கினாள். தன்னை வெளியில் கூட்டிக்கொண்டு போவதில்லை, மற்றவர்கள் போல் கேளிக்கைகள், வேடிக்கைகள் என்று சந்தோசமாக பொழுது போக்க முடிவதில்லை, தன் வாழ்க்கையே சூனியமாகிவிட்டது என்று அழுதாள். சமைக்க மாட்டேன் தேனீர் ஊற்ற மாட்டேன் என்று சில நாட்களில் பிடிவாதமும் பிடித்தாள். ஜெகநாதன் இவற்றையெல்லாம் சட்டை செய்யாது எங்கோ வெளியில் சாப்பிட்டுக் கொண்டும் தொழிற்சங்கக் காரியாலயத்திலேயே பெரும் பொழுதைக்கழித்துக் கொண்டும் செல்லத்தலைப்பட்டாரேயன்றி இவளது வழிக்கு வந்த பாடில்லை.

இறுதியில், எதுவுமே சாத்தியப்படாத நிலையில், அவள் ஓய்ந்தாள். கணவன் மனைவிக்கிடையில் பேச்சுவார்த்தைகள் நின்றன. ஏதாவது அவசரத்திற்கு ஓரிரு சொற்களை அதுவும் முகத்தை வேறுபுறம் பார்த்துக்கொண்டு சொல்வதோடு சரி. சாப்பாடு பரிமாறும் போதும் தேனீர் வைக்கும் போதும் மேசையில் கோப்பைகளை முடங்வ என்று வேண்டா வெறுப்பாக வைக்கும் சத்தத்தில் மட்டும் தனது வெறுப்பைக் காட்டிக் கொள்வாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜெகநாதன் தனக்கென்று ஒரு உலகத்தில் வாழ்ந்து வந்தார். அந்த உலகம் இவளுக்குப் புரியாது. இவளுக்கென்ன எவருக்குமே புரியாது. விளங்கப்படுத்தவும் முடியாதது என்றுவிட்டு தன்பாட்டிற்கு இருந்துகொண்டார். அவரது உலகில் அவருக்கென்று கடமைகள் இருந்தன. அவற்றில் அவர் எப்போதுமே மூழ்கிப் போனார். அவரை அவரது உலகிலிருந்து சற்றேனும் ஈர்த்தெடுத்த ஒரேயொரு ஜீவனென்றால் அது அவரது மகன்தான்.

எந்த எண்ணங்கள் அவரை விரைவாக எழுதும்படி உந் திலவே! அந்த எண்ணங்களே அவர் எழுதுவதைக் குளப்பிய படி மொய்த்து நின்றன. ஜெகநாதன் எழுதிக்கொண்டிருந்தார். மறுஅறையில் ரஷ்ஷியாவில் கொர்ப்பச் சேவின் தோல்வி பற்றிய சூடானஅரட்டை உயர்ந்தும் தாழ்ந்தும் கதவிடுக்கினூடு கசிந்து ஜெகநாதனுடைய காதுகளை வந்து மோதியபடி இருந்தது. எதிரே ஒரு பல்லி மார்க்ஸின் படத்திற்குப் பின்னே ஓடிப்போய் ஒளிந்து கொண்டது. ஜெகநாதன் இப்படியான அரட்டைகளில் ஈடுபாடு காட்டுவதில்லை. தோசையை மறுபக்கம் புரட்டிப்போடும் கலையை நேர்மையான அரசியலென்று அவரது மனச்சாட்சி ஏற்பதில்லை. சிலகாலத்திற்கு முன்னர் வரை கொர்ப்பச்சேவின் சீர்திருத்தங்களை ஆகா ஒகோ. என்று புகழ்ந்தபடி இருந்தவர்களில் பலர் இப்போது மாறிப் பேசுகிறார்கள். அவர் கவனம் செலுத்தாவிட்டாலும் அவரையும் மீறி காதுகளில் வந்துமோதிச் செல்லும் வார்த்தை கள் அவரை எழுதவிடாமல் குளப்புவதாய் இருந்தன. ஜெக நாதன் நிமிர்ந்தார்.



# தொழிலாளவர்க்கமா? வீடா? எது முக்கியம்............

மார்க்ஸ்! பிரேம் போட்ட கண்ணாடியினுள் சிறையுண்டிருந்தது அவரது உருவப்படம். கண்களில் மட்டும் ஏனிந்தப்பார்வை? அது கனிவா? கருணையா? இரக்கமா? அல்லது ஆழமான அறிவின் கனதியா? உறுதியா? ஜெகநாதன் பார்த்துக்கொண்டிருந்தார். "புத்தரைப்போல, ஜேசுவைப் போல நீரும் விரைவில் கடவுளாகி விடுவீர். அதன்பின் ஒரு பூவை உமது படத்துக்குச் சூட்டிவிட்டு எல்லாப் பாவமும் செய்து முடிப்பார்கள்." ஜெகநாதன் எண்ணிக்கொண்டார். மார்க்ஸும் ஒரு மனிதன் தானே. பாசம் மிக்க ஒரு தந்தை தானே. காதலித்து மணம் முடித்த ஒருகணவன் தானே. வாழ்க்கையில் சோதனைகளை அவரும் எப்படித்தான் தாங்கிக்கொண்டார்? மார்க்ஸின் குழந்தை வறுமையால் இறந்தபோது அவரின் மனைவி சொன்னது நினைவில் வந்தது. "இந்தக்குழந்தை பிறக்கும்போது தொட்டிலும் இருக்கவில்லை. இறக்கும் போது சவப்பெட்டியும் இருக்க வில்லை." ஜெகநாதனுக்கு மகனின் ஞாபகம் கனதியாய் அழுத்தியது. எண்ணங்களை சடுதியாகக் களைந்து விட்டு எழுதுவதைத் தொடர்ந்தார்.

அவரது மகன் அவரைப்போலவே அச்சொட்டாக இருந்தான். கன்னங்களில் குழிவிழச் சிரிக்கும் அந்தச் சிரிப்பிலும் அவர்தான் இருந்தார். ஏதோ சிந்தனையாளன்போல புருவங்களை நெரித்து அவன் பார்க்கும் அந்த விநோதப்பார்வையிலும் அவரையே ஒப்பி த்தான். அவரைக் கண்டதும் குதூகலத்துடன் கைகளை அசைத்து அவன் காட்டும் துடிப்பில் இருந்த ஸ்நேகிதம். ஏதோ பலகாலம் பழகிய நெருக்கமான ஒரு உறவை அவனில் அவர் உணர்ந்தார். இவன் என்னை அறிந்துகொண்டான். இவன் என்னைப் புரிந்து கொள்வான். இவன் என்னை அங்கீகரிப்பான். இவன் என்னைத் தொடர்வான். என்னால் நிறைவேற்றமுடியாது போகின்ற என் கடமைகளை இவன் நிறைவேற்றுவான். அவன் வளரவளர அவனது செய்கைகள் ஒவ்வொன்றிலும் அவர் தன்னைக் கண்டு பிரமித்தார். தன்னைப் புரிந்து கொள்ளாத,தன்னை ஒரு அன்னியனாய்ப் பார்க்கின்ற மனைவியை விட மொழி புரிகிறதோ இல்லையோ, தான் சொல்லும் ஒவ்வொன்றையும் ஏற்றுக்கொள்ளுமாற் போல் சிரித்து தன்னுடன் ஒன்றிக்கொண்ட மகனுடன் பேசுவது அவருக்கு ஒரு ஆறுதல் போல் இருந்தது. நிலவெறிக்கும் இரவு வேளையில் அவனைத்தூக்கிக்கொண்டு முற்றத்தில் சென்று தன்னுடைய கதைகள் சொல்லுவதில் அவர் ஒரு நிம்மதியைக்கண்டார். நாளடைவில் அவன் அவரது மன உளைச்சல்களுக்கெல்லாம் ஒரே வடிகாலாக ஆகிப்போனான்.

இப்படி இருக்கையில் தான் அண்மையில் சில நாட்களாக அவன் உற்சாகம் குன்றி சோர்ந்துகொண்டு செல்வதா கப்பட்டது. அவரும் வேலைப்பழுவில் இதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் நேற்று எப்போதும் அதிகம் பேசாத மனைவிகூட பதறிப்போய் அவரிடம் மகனுக்குகாய்ச்சல் மோசமாகிவிட்டதாயும் ஏதாவது செய்யும்படியும் நடுச





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாமத்தில் எழுப்பி அழுதபோதுதான் விபரீதத்தை உணர்ந்தார். இருந்த மாத்திரைகளைக் கொடுத்து சமாளித்துவிட்டு விடிந்தபின் ஆஸ்பத்திரியில் காட்டலாம் என்று சமாதானம் சொன்னார். ஆனால் விடிந்தபோதுதான் தான் தொழிற்சங்கத்தின் முக்கியமான ஒரு கூட்டம் ஒன்றுக்கு கட்டாயம் சமூகம் தர வேண்டியிருந்ததும் நினைவு வந்தது. அது வேலை நீக்கப்பட்டிருந்த தொழிலாளர்களின் எதிர்காலம் பற்றிய முக்கியமான கூட்டம். என்ன செய்வது என்று யோசித்த அவருக்கு, காலையில் மகனின் நிலைமை சற்று திருத்தம் கண்டிருப்பது போல் தென்பட்டது. மனைவியிடம் தான் தொழிற்சங்கத்திற்குச் சென்று உடனடியாக வேலையை முடித்துக்கொண்டு திரும்பிவருவதாயும் மகனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்ல ஆயத்தப்படுத்தும்படியும் சொன்னார். ஒரு ஈனப்பிறவி ஒன்றைப் பார்ப்பது போல் கலாமதி அவரை



**கண்களை மூடித் தூக்கத்தில் இருந்தான். அப்போதும் கூட, அவரைப் போலவே ஆழ்ந்த யோசனையில் இருப்பது போல**

பார்த்த பார்வையில் குறுகிக்கொண்டு அவசரமாக தொழிற்சங்கத்தை நோக்கி விரைந்தார்.

ஆனால் அவர் எதிர்பார்த்ததுபோல் சொல்லிக்கொண்டு திரும்பிவரக்கூடிய சூழ்நிலை அங்கு இருக்கவில்லை. தொழிலாளர் எதிர்காலம் பற்றிய முக்கிய பிரச்சினையொன்றில் முடிவெடுக்க முன்னர் ஜெகநாதன் எழுந்து வீடு செல்ல எப்படி அனுமதி கேட்பது? ஆனால் கொமிற்றி முடிந்த போதோ ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பவேண்டிய பொறுப்பு ஜெகநாதனின் தலையில் தான் விழுந்தது. ஜெகநாதன் வீட்டு நிலைமையைச் சொல்ல முற்பட்ட போது முக்கியமான இந்த நேரத்திலா நீர் லீவு கேட்கிறீர் என்ற செயலாளரின்கேள்வி அவரை மௌனமாக்கிவிட்டது. சரி இதை கூடுமான விரைவில் எழுதிக்கொடுத்துவிட்டுப் போவோம் என்று ஜெகநாதன் கதிரையில் அமர்ந்தார்.

ஜெகநாதன் ஒருவாறு எழுதி முடிக்கையில் நேரம் ஒரு மணி. மகஜரை எடுத்துக்கொண்டு கதவைத் திறந்தார். கோர்ப்பச்சேவைக் கடந்து ஸ்டாலின் காலத்தில் ஓடிக் கொண்டிருந்த விவாதத்தின் இரைச்சல் ஜெகநாதனின் திடீர் பிரசன்னத்தினால் தடைப்பட்டு நின்றது. விவாதச் சுவையில் மேசை விளிம்பில் ஏறி உடகார்ந்து கொண்ட தோழர் இப்போது மிகவும் சீரியஸாகி ஜெகநாதனின் மகஜரை வாங்கிப் பார்த்தார். "என்ன தோழர் இது....!"

"என்ன....?"

"அரசாங்கத்திடம் கெஞ்சுமாப்போல எழுதியிருக்கிறீங்கள்."

ஜெகநாதன் பதில் பேசவில்லை.

"தங்கள் அரசின் நீதியற்ற நடவடிக்கையாலா...., அந்த நீதியற்ற, என்பதை வெட்டுங்க. எதேச்சாதிகார என்று போடுங்க. இதென்ன கருணைகூர்ந்து...., அதை யும் வெட்டுங்க. வெறுமனே வேலையில் சேர்த்துக்கொண்டு என்று வந்தால் 'போதும்."

மேலும் பல திருத்தங்கள் செய்தார். பின்னர் பொதுவான ஒரு விளக்கவுரையை நடத்தினார்."தோழர் இது தொழிலாள வர்க்கத்தின் போராட்டம். எந்த விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை. மண்டியிட வேண்டியது அரசாங்கம் தான். இல்லா விட்டால் அது தூக்கியெறியப்படும்."

இப்பொழுது உடனடித்தேவை வேலை யிழந்தவர்களின் வாழ்க்கைப் பிரச்சினைக் குத் தீர்வுகாணுவதா அல்லது சுலோகங் களைத் தூக்கிப் பிடிப்பதா? ஜெகநாதன் மனதில் எழுந்த கேள்விகளை வார்த்தை களாக்க விரும்பவில்லை. அவர் உடனடி யாக வீடு திரும்ப வேண்டும். தோழரின் விளக்கவுரையை மறுக்காமல் தனது விண் ணப்பத்தை மெதுவாகத் தெரிவித்தார்.

"சரி தோழர். உங்கடை திருத்தங்களையும் சேர்த்து டைப்பண்ணிப்போட்டு ரிஜிஸ்டர் போஸ்டில அனுப்பி வையுங்கோ. நான் இப்ப அவசரமாய் வீட்டை போகவேணும்."

"என்ன தோழர் இது, நீங்கள் இடை நடுவிலை விட்டுட்டுப் போகப்போறீங் களா...?"

"இல்லத் தோழர் வீட்டில..."

"என்ன தோழர் ஒரு வேலையைப் பொறுப்பெடுத்தால் அதை ஒழுங்காய் செய்து முடியுங்களன்.... உங்கள மாதிரியான ஆட்களால தான் எங்கட கட்சி இப்படி போயிருக்குது."

"தோழர் பிழையாய் விளங்காதையுங்கோ.வீட்டில பிள்ளைக்குச் சுகமில்லை. கொஞ்சம் கடுமை....."

"அப்ப இதை டைப்பண்ணிறது யார்? இதை உடனடியாக அனுப்ப வேணுமல்லோ?"

ஜெகநாதன் அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களை ஒரு சுற்று நோட்டம் விட்டார்.

"என்ன பாக்கிறீங்க. ஒருத்தருக்கும் டைப்பண்ணத்தெரியாது தோழர். டைப்பிஸ்டும் இண்டைக்கு வரேல்லை. நீங்கள் தான் டைப்பண்ணவேணும்."

"இல்லத் தோழர் உங்களுக்கு என்ர நிலம புரியுதில்ல. நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடனடியா வீட்டை போகவேணும். பிள்ளைக்கு இப்ப என்னாகியிருக்குமோ தெரியாது."

"அவ்வளவு சீரியசெண்டால் பிள்ளையை விட்டிட்டு நீங்கள் எப்பிடி இங்கை வந்தநீங்கள்.?"

"இது முக்கியமான கூட்டமெண்ட படியால வந்தனான். வேலையிழந்தவங்கடை பிரச்சினையெண்டபடியால......"

ஒரு ஏளனப்புன்னகை எல்லோர் முகத்திலும் படர்ந்தது. பின்னர் அந்தத் தோழர் ஒரு நீதிமன்றக் குற்றவாளியைப் பார்த்துக் கேட்கும் தொனியில் கேட்டார்.

"தோழர் நீங்கள் ஒரு கொம்யூனிஸ்டா?"

"ஏன் அப்பிடிக் கேட்கிறீங்க....?"

"நான் கேட்கிறன் நீங்கள் ஒரு உண்மையான கொம்யூனிஸ்டா?"

"ஓம்"

"உங்களுக்கு வீடு முக்கியமா? தொழிலாளவர்க்கம் முக்கியமா?"

ஜெகநாதன் அதிர்ந்தார். எல்லோரையும் சுற்றவரப் பார்த்தார். அவர்கள் ஒரு ஒநாயின் பார்வையுடன் ஜெகநாதன் பதிலுக்காய் காத்திருப்பதாகத் தெரிந்தது. ஜெகநாதன் எதுவுமே பேசவில்லை. மௌனமாக மகஜரைத் திரும்ப வாங்கிக்கொண்டு தனது அறையை நோக்கி நடந்தார். டைப்ரைட்டருக்குள் தாள்களைச் சொருகினார். கதிரையை இழுத்துப்போட்டு டைப்பண்ணத்தொடங்கினார்.

"மேன்மைதங்கிய ஜனாதிபதியவர்களுக்கு....."

எல்லாம் முடிய மூன்றுமணி. டைப்செய்யப்பட்ட தாள்களை மடித்து தபாலுறையில் போட்டு போஸ்ட் பண்ணும்படி கொடுத்துவிட்டு வீடு திரும்பினார்.

வீடு பூட்டியிருந்தது. அவரைப் பார்த்திருந்துவிட்டு பிள்ளையை ஒரு தனியார்மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றுவிட்டதாக எதிர்வீட்டுக்காரர் கூறினார்கள். அங்கு விரைந்தார். வரவேற்பறையில் அழாத குறையாக மனைவி. அருகேயிருந்தது ஜெகநாதன் எதிர்பாராத முகம். மனைவியின் தாயார். மனைவி எடுத்துவிட்ட முடிவு புரிந்தது. அவர்களைக் கடந்து டாக்டரைச் சந்திக்கப் போகும்போது தாயார் முணுமுணுத்த வாசகம் காதில் கேட்டது. "பிள்ளை செத்திட் டுதோவென்று பார்க்க வந்தாராக்கும்."

கூடவே மனைவியின் மெல்லிய கேவல் ஒலியும் கேட்டது. "போயும்போயும் பிடிச்சியே ஒருஆளை." தலையைக் கவிழ்ந்தபடியே டாக்டர்முன் போய் நின்றார் ஜெகநாதன். "இவ்வளவு கவலையீனமாய் இருந்திருக்கிறீங்களே....." டாக்டர் விசனப்பட்டார். "இன்னும் கொஞ்சம் பிந்தியிருந்தால் என்ன ஆகியிருக்கும் தெரியுமா?"

மகனைச் சென்று பார்த்தார். கண்களை மூடி ஆழ்ந்த தூக்கத்திலிருந்தான். அப்போதும் அவரைப்போலவே ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பவன் போல.... அவர் மெதுவாக வெளியேறி வாசலுக்கு வந்தார் சவரம் செய்யாத நாடியைத் தடவிக்கொண்டார். வாகனங்கள் பொம்மைபோல எதிரும் புதிருமாக தன்பாட்டிற்கு தெருவில் ஓடிக்கொண்டிருந்தன. பாதசாரிகள் தம்பாட்டிற்கு எங்கேயோ நடந்து கொண்டிருந்தனர். மேலே ஒரு ஃபான் தன்பாட்டிற்கு சுழன்றபடி இருந்தது.அவரின் பக்கமே திரும்பாத மனைவி தாயாரின் முந்தானையில் கண்களை ஒற்றியபடி தன்பாட்டிற்கு விசும்பியபடி எதையோ ஒப்பித்துக் கொண்டிருந்தாள்.

அவர் சென்று ஒரு கதிரையில் அமர்ந்தார். எதிரே மேசையில் போடப்பட்டிருந்த மாலைப்பத்திரிகையில் தலைப் புச் செய்தி அவரது தொழிற்சங்கத்தின் உத்தேசப் போராட்டம் பற்றி எதையோ சொன்னது. அதையெடுத்து வாசிக்கும் சிர த்தை அவருக்கு எழவில்லை. அருகே இருந்தவர் செயற்கை யாகச் சிந்திய சினேகிதப்புன்னகைக்கு சம்பிரதாயமாகக் கூடச் சிரிக்கமுடியவில்லை.

"இப்பவெல்லாம் டிஸ்பிரினுக்குப் பதில் அஸ்பிரினைப் பாவிக்கச் சொல்லுகினமாமே....?" அருகிலிருந்தவர் பேச்சுத்துணைக்கு ஜெகநாதனை இழுத்தார். "டிஸ்பிரின் பாவித்தால் கான்சர் வருகுதெண்டு சொல்லுறாங்களே....?" ஜெகநாதன் ஒருமுறை திரும்பி அவரைப்பார்த்து விட்டு பின்னர் அண்ணாந்து ஃபானைப் பார்த்தார். "முந்தி யெண்டால் எடுத்ததுக்கும் டிஸ்பிரின்தான்......" ஜெகநாதன் மறுபடியும் எழுந்து வாசலில் போய் நின்றார். எதிரே தெரு. வாகனங்களும் பாதசாரிகளும். எதிர்க்கடையில் தொங்கிய பத்திரிகையில் மீண்டும் அதே செய்தி.

பிள்ளையை மருத்துவசோதனைகள் முடிந்து எடுத்து வந்தார்கள். ஒரு மூன்றாம் மனிதனைப்போல் அவர் பார்த்திருக்க மனைவியின் தாயார் பேர்சைத் திறந்து மருத்துவமனையின் கட்டணங்களை கட்டி முடித்தார்.

பிள்ளையைத் தூக்கிக்கொண்டு படியால் இறங்கி இருவருமாகக் காரில் ஏறினார்கள். "ம், இனிஎன்ன, அவரையும் வந்து ஏறச்சொல்லன்." தாயின்குரல் வேண்டாவெறுப்பாக ஒலித்தது. ஜெகநாதனும் கதவைத்திறந்து குறுகி உள்ளே ஏறியமர்ந்தார். கார் வீட்டுவாசலில் நின்றது. தாயார் பிள்ளையுடன் காரிலே இருக்க மனைவி விறுவிறென்று வீட்டினுள் சென்றாள். எதுவும் பேசவில்லை. பின் அதேவேகத்துடன் திரும்பிவந்தாள். கையில் ஒரு சூட்கேஸ். ஜெகநாதன் இறங்கிநின்று நடப்பதைப் பார்த்தபடி நின்றார். அவரிடம் வார்த்தைகள் இருக்கவில்லை. மனைவியையும் ஏற்றிக்கொண்டு கார் பறந்தது. ஜெகநாதன் காரின் திக்கைப் பார்த்தபடி சிலநேரம் நின்றார். பின்னர் வீட்டினுள் சென்று கதிரையில் தொப்பென்று விழுந்தார். நெடுநேரம் அப்படியே இருந்தார். பின்னர் எழுந்து சென்று மகனின் படுக்கையைப் பார்த்தார். மகன் தலைவைத்துப் படுத்திருந்த பள்ளம் இன்னும் தலையணையில் அப்படியே இருந்தது. அதைக் கையால் தொட்டுப்பார்த்துக் கொண்டார். எல்லாவற்றுக்கும் ஒரு விளக்கம் இருக்கின்றது. எல்லாவற்றுக்கும் ஒரு நியாயம் இருக்கிறது. எல்லாவற்றுக்கும் எங்கோ ஒரு கணக்கு இருக்கத்தானே வேண்டும்? ஜெகநாதன் அந்தக் கேள்வியை மீண்டும் உருப்போட்டுக் கொண்டார்.

"உமக்கு வீடு முக்கியமா, தொழிலாளவர்க்கம் முக்கியமா?"

மறுநாள் விடிந்தது. கோபித்துக்கொண்டு போய்விட்ட மனைவியின் வெற்றிடம் வீட்டை அடைத்துக் கொண்டது. மகனின் பிரிவு நெஞ்சை அடைத்துக் கொண்டது. இந்தப் பிரிவு இப்படியே நிரந்தரமாகிவிடுமோ? கேள்வியுடன் வெறிச்சோடிப்போன வீட்டைப்பூட்டிக் கொண்டு ஜெகநாதன் தொழிற்சங்கக் காரியாலயத்திற்கு வந்து சேர்ந்தார். திரும்பிய பக்கமெல்லாம் படங்கள் தொங்கியது. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின். இப்படி வரிசையாக. கீழே சுலோகங்கள். சிவப்பு எழுத்துக்களில். "உலகத்தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட தேசமக்களே ஒன்று சேருங்கள்.!" ஜெகநாதன் உள்ளே சென்றார். அங்கே மேசையில் நேற்று அவர் டைப்பண்ணிய மகஜர் இன்னும் போஸ்ட் பண்ணுப்படாமல் தபாலுறையில் இட்டபடி அப்படியே இருந்தது! ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# ஆயுதப் போட்டியில் "அக்னி"ப் பரீட்சை

ஆசிய பிராந்தியத்தில் தன்னை ஒரு வல்லரசாக வளர்த்து வரும் இந்தியா, குறுகிய தூரம் பாயக்கூடிய அதனுடைய மற்றொரு ஏவுகணையை அண்மையில் பரீட்சித்துப் பார்த்துள்ளது. பிரிதிவி என்னும் குறுகிய தூரம் செல்லும் இந்த ஏவுகணைப் பரீட்சை, இந்தியாவின் நடுத்தர தூரம் செல்லக் கூடிய அக்னி ஏவுகணையின் மூன்றாவது கட்ட பரீட்சைக்கு வழிசமைப்பதாய் இருக்கும் என பாதுகாப்புத் துறை ஆய்வாளர்கள் கருத்துத்தெரிவித்துள்ளார்கள். அக்னியின் இரண்டாவது கட்ட பரீட்சை கடந்த மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எதிர்பார்க்கப்பட்டளவு வெற்றியைத் தரவில்லை. இதனால் இதன் மூன்றாவது கட்ட பரீட்சிப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பிரிதிவி பரீட்சிக்கப் பட்டதன் மூலம் சர்வதேச ரீதியிலான பிரதிபலிப்புகள் எதையும் இந்தியா எதிர்கொள்ள வேண்டிய நிலைமை இருக்கஸவில்லை. ஏனெனில் இதனுடைய பாயும் தூரம் 250 கி. மீற்றர் மட்டுமே. இது ஏவுகணை தொழில்நுட்பக் கட்டுப்பாட்டு அமைப்பினால் வரையறுக்கப்பட்ட 300 கி. மீற்றர் தொலைவுக்கு உட்பட்டதாகவே உள்ளது.

ஆனால் 1,500 கி.மீற்றர் பாயக்கூடிய அக்னி ஏவுகணையை இந்தியா பரீட்சிப்பது சர்வதேச கவனத்தைக் கவர்வதாகவே இருக்கும். முக்கியமாக இந்திய உபகண்டப் பிராந்தியம், ஆயுதப் போட்டிக்கு உட்படாத பிராந்தியமாக இருக்கவேண்டும் என வலியுறுத்தும் அமெரிக்காவின் பிரதிபலிப்பு எதிர்மறையாகவே இருக்கும்.

கடந்த வருடம் அமெரிக்காவுடன் இணைந்து கடற்படை ஒத்திகையொன்றை இந்தியா முதல்முறையாக மேற்கொண்டது. அதே காலப் பகுதியிலேயே அக்னியின் இரண்டாவது கட்டப் பரிசோதனையை இந்தியா மேற்கொண்டது. இது அப்போதைய நிலையில் அமெரிக்காவை ஊமையாக்கிவிட்டது. எனினும் அமெரிக்காவின் மகிழ்ச்சியின்மையை இட்டு இந்திய அதிகாரிகள் குறைத்து மதிப்பிட்டுவிடவில்லை. இந்நிலையில் ஆயுதக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றுக்குள் கொண்டுவருவதன் மூலம் அக்னி பரீட்சையை இந்தியா வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும். அணுவாயுதம் தொடர்பாக, சர்வதேசரீதியாக அதிகாரித்துவரும் கரிசனையை சமாளிப்பதற்காக இத் திட்டத்தை ஆயுதக்கட்டுப்பாட்டுத் திட்டமொன்றுக்குள் உள்ளடக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு இன்று ஏற்பட்டுள்ளது. ஆசியப் பிராந்தியத்தில் இந்தியா மட்டுமன்றி, மேலும் பல நாடுகளும் ஏவுகணை உற்பத்தியிலும் அதற்கான தொழில் நுட்பங்களை அபிவிருத்திசெய்வதிலும் ஈடுபட்டுள்ளன என்று இந்தியப் பாதுகாப்புத்துறை எழுத்தாளர் ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார். இவற்றில் இந்தியா கடைசியாகவே இறங்கியுள்ளது எனத் தெரிவித்த அவர், இந்தியாவினுடைய தேவைகள் சரியாக உணரப் படாததாலேயே, இவ்வாறான கண்டனங்களும் விமர்சனங்களும் உருவாகின்றன என விளக்கமளித்துள்ளார்.

ஆசியப் பிராந்தியத்தில் சீனா நீண்டகாலமாகவே இப்படியான ஏவுகணைகளை வைத்திருக்கின்றது. மேற்காசிய நாடுகள் பலவற்றுக்கு பெருமளவிலான ஏவுகணைகளை சோவியத் யூனியன் ஏற்கனவே பெருமளவில் விற்பனை செய்துள்ளது. "றெஜினோர்" என்ற ஏவுகணையை இஸ்ரவேல் தயாரித்திருக்கின்றது. 1988ல் பெருமளவு






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏவுகணைகளை சீனா சவுதிஅரேபியாவுக்கு விற்பனை செய்துள்ளது. பாகிஸ்தான் ஏவுகணை உற்பத்தியில் ஈடுபடுவதற்கு சீனா உதவி புரிந்ததுடன் "எம். 17" வகையான ஏவுகணைகளை அண்மையில் கூட பாகிஸ்தானுக்கு வழங்கியது. இவ்வாறு சுற்றியுள்ள நாடுகள் அனைத்தும் ஏவுகணையைக் கொண்டுள்ளபோது தன்னிடம் அவ்வாறான ஆயுதம் ஒன்று இல்லாதிருப்பது தனது பாதுகாப்புக்கு குந்தகமானது என்பதே இந்தியாவின் வாதமாக உள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், ஏவுகணை அபிவிருத்தித் திட்டத்தைக் கைவிடவேண்டும் என்ற சர்வதேசக் கோரிக்கைகள் எதனையும் முற்றாக நிராகரிப்பதற்கான உரிமை இந்தியாவுக்கு உண்டென இந்தியப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர்.

ஆனால், இதற்காக இந்தியாவின் கேந்திர அவசியத்தை சர்வதேச ஆயுதப் பரவல் தடை சமூகத்தின் முன்னால் நியாயப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் கருதுகின்றனர். ஆனால், இவ் விடயத்தில் அமெரிக்கவும் ஏனைய மேற்கு நாடுகளும் கொண்டுள்ள கரிசனையை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையிலேயே இந்தியா உள்ளது. இதனால் இரு தரப்பாருக்கும் இடையே பேரம் பேசுவதற்கு ஒரு அம்சமாக "அக்னி" அமையலாம். அக்னி ஏவுகணையின் மூன்றாவது பரிசோதனை நடைபெறுவதற்கு முன்னர் இவ் விடயத்தில் ஒரு உடன் பாடு ஏற்படலாம் என இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

**– விதுரன்.**

# தகவல்கள்

## வழக்கு

1991. ஆடி மாதம் 3ம் திகதி கூட்டுப்படைத் தலைமையகக் குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வரதனுக்குப் பாதுகாப்பளித்த குற்றச்சாட்டில், கைது செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த பி. சந்திரசேகரன (தலைவர்), பி.ஏ. காதா(பொதுச்செயலாளர்), பாடசாலை அதிபர் வி. ரி. தர்மலிங்கம் (உபதலைவர்) ஆகியோரது வழக்கு நீண்டநாட்களின் பின்னர் கொழும்புக்கு மாற்றப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. இவர்கள் 1991. ஆடி 3ம் திகதி கைது செய்யப்பட்டு பி.ரீ.ஏ இன் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர். இது அடிப்படை மனித உரிமை மீறல் என, கைது செய்யப்பட்டவர்கள சார்பில் தொடரப்பட்ட வழக்கு 1992 மே 8 ம் திகதி உயர் நீதிமன்றத்துக்கு முதல்முறையாகக் கொண்டுசெல்லப்பட்ட போது அங்கு குற்றமற்றவர்களாகக் கருதப்பட்டு தடுத்து வைப்பது சட்டவிரோதம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (பி.ரீ.ஏ இன் கீழ் கைது செய்யப்பட்டு தொடரப்பட்ட வழக்கில் இவ்வாறு தீர்ப்பளிக்கப்படுவது இது முதந்தடவையாகும்.) குற்றச் சாட்டுகள் ஏதும் இருப்பின் மே 18 க்கு முன் சமர்ப்பிக்கும் படி உத்தரவிடப் பட்டது. பி. ரி. ஏ சட்டத்தில் 17- 1 ம் இலக்க இவ் வழக்கை அரசு பின்னர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்( 15-ஏ1) மாற்றியது . அன்று முதல் பிற்போடப்பட்டு வந்த இவ்வழக்கு இப்போது மீண்டும் விசாரணைக்கு வந்துள்ளது. தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கருதப்படும் எவரையும் 18 மாதங்களுக்கு தடுப்புக்காவலில் வைத்திருக்கலாம். 18 மாதம் முடியும் தறுவாயில் ஒரு முறை பாதுகாப்பமைச்சின் அனுமதியுடன் மீண்டும் 18 மாதங்களுக்கு மீண்டும் தடுப்புக்காவலில் வைத்திருக்கலாம்.

## கொழும்பில் நாடக விழா

திருமறைக்கலாமன்றம் எடுக்கும் நாடகவிழா மாசி மாத இறுதியில் (15- 24 வரை) கொழும்பில் நடைபெறுகின்றது. இதில் ஞானசவுந்தரி இசை நாடகம், அசோகா மௌன இசைநாடகம், பலிக்களம்நாடகம், இசைமாலை மெல்லிசை நிகழ்ச்சி சித்திரக்கண்காட்சி சத்தியவேள்வி இசைப் புராணம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைற்றன. இவற்றுக்கான கலைஞர்களில் பெரும்பான்மையானோர் யாழ்ப்பாணத்தில் இருந்துமிகுந்த சிரமத்தின் மத்தியில் அழைத்து வரப்பட்டவர்கள். இவற்றில் ஒரு நேர்த்தியான நெறியாழ்கையும், இசை பாடல்கள், நடிப்பு என்று அனைத்துமே சிறப்பான முறையில் அமைந் திருந்தன.இது மிகுந்த அக்கறையுடன் கவனமெடுத்து செய்யப்பட்ட தன்மையைக் காணக்கூடியதாக இருந்தது. இன்றைய சூழ்நிலையில் கலை ஆற்றவேண்டிய பங்கு மிகவும் பாரியதாகவே உள்ளது.



ஆனால் அப்படியான முன்னெடுப்புகள் தமிழில் மிகமிகக் குறைவாகவே உள்ளது. அதை வரவேற்கும் மனோபாவமும் கலைஞர்களை ஊக்குவிக்கும நிலையும் அருகிப்போன - பதிலாக வீடியோ கலாச்சாரம்பீடித்திருக்கின்ற துர்பாக்கிய



மான இவ் வேளையில் திருமறைக் கலாமன்றம் எடுத்திருக்கும் இம் முயற்சி நாடகத்துறையில் புதிய வளர்ச்சியைக் கொடுக்கும் என எதிர் பார்க்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கலைந்து போன கனவு ராஜ்யம்.

.........சிவகுமார்..........

தெருவில் ஒருவன் தலையே இல்லாமல் போய்க் கொண்டிருந்தான். மனசுக்குள் சிரிப்போடியது. சிறுகதை எழுதுவது பற்றிய யோசனை வந்த போது, முதல்வரி இப்படிக் கவர்ந்திழுப்பதாய் அமைய வேண்டும் என்று யாரோ சொல்லியிருந்த ஆலோசனைதான் நினைவில் மின்னியது. சிரிப்புக்குக் காரணம், அப்புறம் "தலையில்லாமல் அல்ல, தலைக்குள்ளேதான், ஒன்றுமே இல்லாமல் போய்க்கொண்டிருந்தான்." என்று மாற்றி சொல்லிவிடலாம் என்பது மிகச் சரியாகவே இருந்து விடும் என்பதால் இந்தவரியை யாரும்ஆட்சேபிக்கப் போவதில்லை. ஆனால் நான் சொல்லிவிட வேண்டும் என துடிக்கின்ற விடயங்களுக்கு சிறுகதை உகந்த வடிவமல்ல. சமீபகாலமாக எனக்குள்ளே வெறியாக மாறிவிட்டிருக்கின்ற, என்னை அறிவித்துக்கொள்ளும் ஆவேசத்திற்கு, மிக நீண்டதாய் ஒருகவிதை அல்லது நாவல்எழுத முடியுமென்றால் எவ்வளவு நல்லது. எழுதுகிறவர்கள் எல்லோரும் இத்தனை அவஸ்தைகளுக்குப் பிறகு தான் எழுதுகின்றார்களோ தெரியவில்லை.எழுதுவது பற்றி அவர்கள் சொல்லும் கெட்டித்தனமான வாய்க்கியங்களில் இருந்து எந்த மனசைத்தான் தெளிவாகக் கண்டு கொள்ள முடிகின்றது.....?

பெண்களின் இருக்கைகளின் பக்கம் புதிதாய் பலர் பஸ்ஸில் ஏறினார்கள். சட்டென்று அழகான முகங்களுக்கு தாவியது மனம். ஆண்மக்கள் எல்லோரையும் இளமையில்கொல் என்று சொல்லி யார் படைத்துவிட்டது இவர் களை! இளமையின் அழகு பற்றி சற்று அதீதமான வியப்புணர்வுகள் என்னுள் உண்டாவதாய் எனக்குத் தோன்றியது. ஒருவேளை இளமைப்பருவத்தைக் கடந்து செல்லும் என் வயதுதான் காரணமாயிருக்கக் கூடும்.

இயல்புக்கு மாறானதாய் பல்லவன், இருக்கைகளில் அமர்ந்திருக்கும் ஆட்களை மட்டுமே சுமந்து ஓடிக்கொண்டிருந்தது. திடீரென்று ஞாபகம் வந்தாற்போல் நான் ஆண்கள் பக்கம் அமர்ந்திருக்கின்றேனா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன். தமிழ்நாட்டிற்கு வந்த புதிதில் என் அம்மா வயதுப் பெண்மணிக்குப் பக்கத்தில் ஸ்வாதீனமாய்ப் போய் அமர்ந்து கொண்டதும்,அந்தம்மா தன் கற்புக்காகப் போட்ட கூச்சலும் நான் பட்ட அவமானமும், தமிழகம் பற்றிய முதல் அறிமுகம் எனக்கு. அப்புறம் "இன்னாப்பா ஆட்டோ வடபயனி வருமா?.... இந்தா லெப்டிலை ஓடிச்சு ஸ்டெயிட்டா போய்க்கிட்டே இரு.... எவ்ளோப்பா ஆட்டோவில சூடு வைச்சிருக்கே... நம்மக்கிட்டயே பேஜார் பண்றியே நைனா...." என்ற அளவுக்குத் தேறிஇருக்கின்றேன். சந்தேகமில்லை.

முன்னிருக்கையில் இருந்த இரட்டை ஜடைக்காரி பின்னாலிருந்தவளுக்கு எதையோ கீச்சிட்ட குரலில் சொல்லிச் சிரித்தாள். என்னை மூழ்கடித்து மூச்சுத் திணறவைக்கக் கூடிய இரண்டு சின்னச் சமுத்திரங்கள் அவள் முகத்திலிருந்தன. திரும்பும் போது எல்லாக் குறும்புக்காரிகளையும் போல் 1000 வாட் மின்சாரத்தை என்மீது பாச்சி ஒரு கணநேர அதிர்ச்சியை தந்துவிட்டே தோழிகளோடு சிரித்தாள். என்னைப் பற்றித்தான் ஏதேனும் சொல்லியிருப்பாளோ...? இப்போது அவள் தோழிகள் என்னைப் பார்க்கத் திரும்பக்கூடும். நான் வேறுபக்கம் பார்வையை திருப்பிக் கொண்டேன். இந்தக் கலாரசனை மிக்க உள்ளத்தை, முகதேஜஸைப் பார்த்தே புரிந்துகொள்ளக் கூடியவர்கள் இருக்கலாம் யார் கண்டது....? இளம் பெண்கள் எல்லோரும் அடக்கிக் கொள்ளமாட்டாத ஆர்வத்தோடு இடைக்கிடை என்னைக் கள்ளமாகவேனும் பார்க்கின்றார்கள் என்று நினைத்துக் கொள்வதில் எனக்குப் போதை இருந்ததால் அலட்சியமாக தீவிர சிந்தனையில் இருப்பது போன்ற பாவனையில் இருந்தேன். அவர்களைப் பார்க்கமனம் குறுகுறுத்தாலும், அப்படிப் பார்ப்பது அவர்கள் என்மீது கொண்டிருக்கும் வியப்பு நிறைந்த ஈடுபாட்டிற்கு பங்கம் நேர இடம் கொடுத்துவிடும் என்றுபட்டது. வெறுமே அழகை ஆராதனை செய்யும் ரசிகஉணர்ச்சி தான் என் பார்வையில் இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளாமல் போகலாம். இன்னும் சற்றுப் பெரிய மனிதத் தோரணையோடு "எனக்கு நீங்கள் எல்லாம் ஒருபொருட்டில்லை" என்ற பாவனையில் இருக்க மிகவும் சிரம்பபட வேண்டி இருந்தது.

"ராஜன்"

மிகச் சமீபமாய் குரல்கேட்டுத் திடுக்கிட்டுத்திரும்பினேன். காரணம் அது பெண்குரல்.... மாலினி!

"மாலினி என்ன ஈஜிநு, எப்ப இங்கை வந்தனி?"

"அங்கை பின்னுக்கிருந்து பார்த்தே உங்களை நான் அடையாளம் கண்டிட்டன்.....எங்க போறீங்கள்... அவசரம் ஒண்டுமில்லைத் தானே....?"

"இல்லை நீ எப்பிடி இருக்கிறாய்?"

"அடுத்த ஸ்ரொப்பில இறங்குவம், நிறையக் கதைக்கவேணும்....."

"வாராய் என் தோழி வாராயோ உன் மாப்பிள்ளை காண வாராயோ.... என்று பாடி வரவேற்றான் லோகு."

வந்தவள் தயங்கி நின்றாள்.மிரட்சியோடு நோக்கினாள்.

"வலது காலை எடுத்து உள்ள வாறதுக்கு முந்தி மேலநிமிர்ந்து போட்டைப் படிச்சுச் சொல்லம்மா.நாங்கள் வந்திருக்கும் இடத்தைஎல்லோரும் தெரிந்து கொள்ளலாமே" என்று பணிவாகச் அபினயித்துச் சொன்னான் ஜெயக்குமார்.

"வந்த இடம் நல்ல இடம். வரவேண்டும் தோழி வரவேண்டும்." என்று மதிற் சுவரில் அமர்ந்துகொண்டு வாய்க்கு வந்தபடி பாடுவதாகக் காட்டிக் கொண்டான் தயா.

"ஏய் வாசி" உறுக்கினான் ரட்ணம்.

"ஜவ்னா யூனிவேசிற்றி" நடுங்கிய குரலில் சொல்லி தலைகவிழ்ந்து நின்றாள்அவள்.

"அடி சக்கை. இங்கிலீசிலை படிக்கிறாடா... தமிழ் தெரியாதாடி உனக்கு."

"கொழும்பு ரமிலா? அப்ப நல்ல கொழுப்பாய் தானிருக்கும்...."

"வாம்மாமோதகம்! யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சொல்லவாய் சுழுக்குதா?"

"டேய்! இங்கை வாம்மா." மிரட்சிப் பார்வையை எனக்குத் தந்தாள்.

"உன் பேர் என்ன?"

"மாலினி"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"என்ன படிக்கப்போகிறாய்?"

" Medical Faculty " என்றவள் நாக்கைக் கடித்துக் கொண்டு "மருத்துவபீடம்" என்றாள்.

"கொப்பர் என்ன செய்யிறார்?"

தமிழ் அரசியல்வாதி ஒருவரின் பெயரைச் சொன்னாள்.

"அடடடே தமிழ்க்கடலின் முத்து" என்றான் ரகு.

"முத்து எங்கள் சொத்து" என்றான்தயா.

"வீட்டில் எப்பிடிப் பொழுதைக் கழிக்கிறாய்?" என்றேன். முழித்தாள்.

"கோழி வளர்க்கிறியா?" என்றேன் நெஞ்சுக்கு நேரே பார்த்துக்கொண்டு. தயங்கியவாறு ஆமென்பதாய் தலையாட்டினாள்.

"நான் தனியே வந்தாக் காட்டுவியா?"

குழப்பத்தோடு என்னைப் பார்த்தவள் அழுவதற்கு ஆயத்தமானாள். கூட்டம் கெக்கட்டமிட்டுச் சிரித்தது.

நான் கன்டீனில் இருந்து வெளியே வந்த போது, மாலினி வந்துகொண்டிருந்தாள். தோழிகளைத் தவிர்த்துவிட்டுத் தனியாக. வரும்போதே "என்ன இங்கை நிக்கிறீங்கள்? பந்தல் போடு மிடத்தில உங்களைத் தேடுறாங்க...." என்ற படியே மூச்சு விட்டாள்.

"உண்ணாவிரதமிருக்கப் பேர் குடுத்திருக்கிறவங்க உங்களில எத்தின பேர்?"

"நாலு பேர். ஶ்ரீ இல அஞ்சு பேர். மொத்தம் 9 பேர் லிஸ்ட் குடுத்தாச்சு..."

"ஒரே முறையில இவ்வளவு பேரும் இருக்கவேண்டாம் எண்டு படுது. தொடர்ச்சியா பிறகும் ஆட்கள் இருக்கலாமல்லே...."

"இன்னும் நிறையப்பேர் தயாராகத்தான் இருக்கினம்..... இருக்கட்டுமே. சுலோகமெல்லாம் ரெடியா?"

"ம்.... கமலனை விடுதலை செய். தரப்படுத்தலை நீக்கு. ராணுவ அடக்குமுறைச் சட்டங்களை வாபஸ்வாங்கு எண்ட ரீதியில கொஞ்சம் எழுதியிருக்கு. மிச்சம் எல்லாரிட்டையும் கதைச்சு இரவுக்கும் எழுதலாம்."

"இப்ப எங்க போறீங்கள்?"

"பந்தலடிக்குத்தான் ஏன்?"

"இல்ல ராஜன், எனக்கு கனநாளாய் சந்தேகம் ஒண்டு....."

"என்ன?"

"தயக்கம், நாணம் என்ற கலவையை வெளிப்படுத்த கைக்குட்டையால்மோவாயைத் துடைத்தபடி தரையில் கிடந்த ஏதோ ஒரு பொருளை வெகு தீவிரமாக உற்றுப் பார்த்தாள்."

"மோதகம் எண்டு நீங்கள் யாரைச் சொல்லுறனீங்கள்?"

"சரியான வெயிலாய் இருக்கு. எல்லாத் தையும் அவிழ்த்துப்போட்டிட்டு ஓடலாம் போல...."



> மனசை இறுக வைத்துக்கொள். அலைக்கழிக்கின்ற நினைவுகளுக்கென்று உன்னைத் தாரை வார்த்துக் கொடுத்துவிடாதே. உன் பாதை தடுமாறிவிடக் கூடும்.

"சீச்சீ...டேர்ட்டி." என்றாள் முகத்தைச் சுருக்கி.

"அ..... இதுதான்" என்றேன்.

"புரிந்திருக்க வேண்டும். மேலும் அழகானாள்."

"இன்னுமொண்டு..... என்று தயங்கினாள்."

"என்ன?"

"கோழி எண்டது ஏதேனும் கெட்ட வார்த்தையா?"

"சேச்சே! கெட்டவார்த்தையெல்லாம் இல்லை......" என்ற என்மீது நேர்ப்பார்வையோடு நின்றாள்.

"எப்ப அடிக்கடி உங்களுக்குள் சொல்லிச் சிரிக்கிறீங்களே?"

பெண்ணின் அப்பாவித்தனமோ அல்லது அது மாதிரியான பாவனையோ எல்லாச்சமயங்களிலும் எரிச்சல் உண்டாக்குவதில்லை. என் கண்ணின் விசமத்தைத் தவிர்க்க பிரயாசை எடுத்துக் கொண்டு பதில் சொன்னேன்.

"இல்லைக் கிடைக்குறை இல்லையாமெனில் முல்லைக் கிடைக்குறை அதுவாகுமே." அவள் புரிந்து கொள்வதற்குள் விலகி நடந்தேன்.

"அடிச்சாங்களா, ராஜன்?"

"ம்" என்றேன். இதென்ன அசட்டுக்கேள்வி என்ற பரிதாபப் பார்வையுடன்.

"உங்களைப் பிடிச்சுக் கொண்டு போனதிலிருந்து எங்கள் யாருக்கும் சாப்பாடே வேண்டியிருக்கேல்ல..... எப்படி ராஜன் விடுதலை செய்தாங்கள்?" அவள் முகத்திலிருந்த கோபமும் வேதனையும் எனக்கு மிதப்புத் தருவதாய்த் தான் இருந்தது.

"எங்களைப் பயமுறுத்தி அடக்கிறதெண்டால், அதிலிருந்து எழுச்சி ஏற்பட்டு விடாமலும் தடுக்கிறது எப்பிடி எண்டதில எல்லாம் அவங்களுக்கு குழப்பம் இருக்கலாம் போலத் தெரியுது."

"உங்கள கைது செய்த பிறகு ஒரே பதட்டம். சரியான சித்திரவதை செய்யுறாங்கள் எண்டும் கதை பரவி நாங்கள் எல்லாம் ஒரே அழுகைதான்......."

"நான் முதல்முதலில் என்னை ஒரு போராளியாக உணர ஆரம்பித்தேன்."

"என்ன ராஜன் இந்தப்பக்கம் பார்க்காமலே போய்க்கொண்டிருக்கிறீங்கள்?"

"அ.... இல்ல மாலினி. ஏதோ யோசனை. உன்ர வீடு இதில இருக்கெண்ட ஞாப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கமே வரேல்லை..... இருட்டிப் போசசல்லே. அதுதான் நீ வாசலிலை நிண்டதும் தெரியேல்லை....."

"சென்றி(ருஞ்ரீ) முடிஞ்சு இப்பதான் வாறீங்கள் போல........உள்ள வாங்கோ."

"இல்ல மாலினி... இப்ப....."

"அஆ... அதெல்லாம் வரலாம் வாங்கோ." என்று கொண்டே வீட்டினுள் நுளைந்துவிட்டாள். தோழில் மாட்டிய ஏ.கே 47 உடன் வீட்டினுள் போகக் கூச்சமாக நுழைந்தேன் நான். அவள் பெருமிதத்தோடுதான் அழைத்த தாய்த்தான் தோன்றியது. மடித்துக் கட்டிய சாரத்தை அவிழ்த்து இறக்கி விட்டுக்கொண்டு பவ்வியத்தை அரவணைத்துக்கொண்ட முகத்துடன் மெல்ல அவளைப் பின்தொடர்ந்தேன்.

நான் எதிர்பார்த்தது போலவே முன்னறையிலேயே அவள்தந்தை சாய்மனைக்கதிரைக்குள் கிடந்தார். என்னைக் கண்டதும் நிமிர்ந்து, "வாருங்கோ தம்பி" என்றார் வெகு மரியாதையாக. எதற்கு அந்த மரியாதை என்றிருந்தாலும் கூசிக் கொண்டு ஒடுக்கமாய் அவர்முன்னால் அமர்ந்தேன்.

"அப்பாவோடை கதைச்சுக் கொண்டிருங்கோ. சாப்பிட்டுட்டுப் போகலாம்." என்று சொல்லிக் கொண்டே சமையலறைக்குள் போனாள் மாலினி. சம்பிரதாயத்துக் கெல்லாம் மறுப்புச் சொல்லிக் கொண்டிராதே என்ற மாதிரி அவள் நடந்துகொண்டதை அதிசயித்து முடிவதற்குள் உள்ளே சமையலுக்கான ஆயத்தங்கள் கேட்கவாரம்பித்தது. அந்தச் சத்தத்தின் பின்னணியில் அவள் தந்தையுடன், அவரை நான் வென்றெடுப்பதாக எண்ணியிருந்த ஓர் நீண்டஉரையாடலை நடத்திக்கொண்டிருந்தேன். மிருக நோக்கம் எதுவுமில்லாத எங்கள் ஆயுதப் போராட்டம் குறித்து சரிவரப்புரிந்து கொண்டுவிட்டாரா என்று நான் தீர்மானிப்பதற்குள் மாலினி வந்து நின்றாள்.

"சாப்பிடலாம் எழும்புங்கோ, அப்பா நீங்களும் வாருங்கோ!"

"இல்லைப் பிள்ளை. தம்பிக்கு குடு.நான் கொம்மா வரட்டும். பிறகு சாப்பிடுறன்...." என்றவர் என்னைப் பார்த்து, "தம்பி நீங்கள் போய் சாப்பிடுங்கோ" என்றார் பரிவு ததும்ப. கையைக் கழுவும் போதே கோழிக்கறி மணத்தது. தட்டின்முன்னால் அமர்கையில் ஏதாவது பேசவேண்டும் என உந்தப்பட்டேன்.

"மாலினி, அம்மா எங்க காணேல்லை?" அனேகமாக தனது எல்லா உரையாடல்களின் தொடக்கத்தையும் போல அபத்தமானதும் அவசியமற்றதுமான முதற் கேள்விக்கு என்ன சொன்னாள் என்பது மனதில் செல்லவில்லை.

"ஏன் ராஜன், ஒரேயடியாக இயக்க வேலைஎன்று மாறியிட்டியள்.... படிச்சுக் கொண்டே இதெல்லாத்தையும் செய்யலாம் தானே! இப்ப விட்டுட்டுப் பிறகு எப்ப படிக்கிறது?"

"ராணுவம் நினைச்ச நினைச்ச உடன் பொடியளைக் கைது செய்து.... சுட்டுக் கொல்லுது...அவைக்குப்பணிஞ்சு எதையும் கேட்டுக்கொள்ள வேணும் எண்ட அடக்குமுறைச் சட்டங்களுக்குள்ள யாருக்குப் பாதுகாப்பிருக்கு ? வடக்கு கிழக்கில் உள்ள யாருக்குமே வாழுற உரிமைக்கான உத்தரவாதம் இல்லை எண்ட நிலமையில நான் படிச்சு என்ன சாதிக்கிறது? எனக்கு உனக்கு எல்லாருக்குமே எந்தநேரமும் எதுவும் நடக்கலாம் எண்டிருக்கிற இனஅழிப்பு நிலமையை மாத்திறதுக்கு என்னால இயலுமானதையெல்லாம் இப்ப செய்யாமல், படிச்சிட்டு வேலைதேடி வெளிநாட்டிற்குப் போனால் எனக்குப் பின்னால வாற தலைமுறை என்னை மன்னிக்குமா மாலினி?"

ஆசுவாசப் படுத்திக்கொள்ள தண்ணீர் குடித்தேன். பிறகும் அவளைப் பேச விடாமல் நானே தொடர்ந்தேன்.

"எதிர்காலம், சந்ததி எல்லாத்தையும் விடு. இப்ப படிச்சுக் கொண்டும் உயிரோடை இருக்கலாம் எண்டதை உத்தரவாதப் படுத்துவது யார்? கண்ணை மூடிக்கொண்டே பாலைக் குடிசிசுக் கொண்டிருந்தால் சூட்டுக் கோலைப் பற்றி கவலையேஇல்லை என்கிறாயா?"

மாலினி மௌனமாக இருந்தாள். நான் பேச்சை நிறுத்திவிட்டு சாப்பிட்டு முடிக்கவேண்டும் என்ற அக்கறையின் காரணமாயும் இருக்கலாம்.

"மாலினிக்கு தேர்ட் இயர் எக்ஸாம் முடிஞ்சிருக்கோணும் அல்லே.... றிசள்ட் எப்படிஎண்டு சொல்லவேயில்லையே?"

"குண்டுதான்" என்றாள். நிஷ்களங்க முடன் சிரித்து. பிறகு அவளாகவே சொன்னாள்."எல்லாம் நல்லாய்த்தான் எழுதினனான். எதுக்குப் ஃபெயிலாக்கிப் போட்டினம் எண்டு தெரியேல்ல......."

".........."

"ஏன் சிரிக்கிறீங்கள்?"

"டொக்டர்கள் சொல்லியிருக்கிறதை நினைச்சேன்........."

"எதைப்பற்றி?"

"நான் பிரமாதமாய் எழுதியும் என்னைப் ஃபெயிலாக்கிப் போட்டினம் எண்டு சொல்றது...... அருள் வந்து சாமியாடுற மாதிரியான ஒரு மனநிலையை அடிப்படையாகக் கொண்டது என அவை சொல்லினம். தனக்குத்தான் அதிகம் பக்தி, தன்னோடை கடவுள் பேசுறார் எண்டு தன்னைத் தானே நம்பவைத்துக்கொள்கின்ற சாமியாடல். இந்த நோய்க்கு ஒட்டோகிப்னோசிஸ் எண்டு பெயர் சொல்லுகினம்......."

பெண்கள் தம்மை மேலும் அழகுபடுத்திக்காட்டும் தந்திரமான சிணுங்கலுடன் கூடிய முகச்சுழிப்பொன்றை வெளிப்படுத்தினாள்.

"கறியெல்லாம் எப்பிடி இருக்கு."

"எல்லாமே அட்டகாசமாய் இருக்கு..... இத்தனை வேகமாய்..... அதேசமயம் எப்படி இவ்வளவு ரேஷ்ராய்ச் சமைக்கிறாய்?"

"அஆ..... சும்மா புழுக வேண்டாம். கேட்டதுக்குப் பிறகுதானே சொல்லுறீங்கள்......" அவளது செல்லமும் சிணுங்கலும் மிக நெருக்கமாக உணர்த்தியது. எனக்குள் சைரன் கேட்டது. எச்சரிக்கையாகும் படி சகல தூண்டல் நிலையங்களிலிருந்தும் செய்தி பிறந்தது. பெண்ணின் சகலவிதமான படைக்கலங்களோடும் வருகிறாள். உன் சுவரை உடைத்துவிட அனுமதிக்காதே. பெண் போகப்பொருளல்ல; பொம்மையல்ல; மனசை மயக்குகிற மாயப் பிசாசு அல்ல, சக மனுசி; உன்னோடு போராட்டத்தில் கைகோர்கோர்க்க வேண்டிய சக தோழி என்ற அறிவின் விளக்கங்கள் அனைத்தும் பொசுங்கிப் போகக்கூடிய அதிசய ஈர்ப்புகளோடு வருகிறாள். தளர்ந்து போகாதே. அதற்கு இது காலமல்ல. மனசை இறுக்கி வைத்துக் கொள். அலைக்கழிக்கிற நினைவுகளுக்கென்று உன்னைத் தாரைவார்த்துக் கொடுத்து விடாதே. உன்பாதை தடுமாறி விடக் கூடும். உன் பயண நோக்கம் நிறைவேறும் வரை வேறு சிந்தனைகள் உன்னிடம் தடைபோட வரக்கூடாது........

"ராஜன்"

"ம்....."

"எனக்கு இதெல்லாம் சரியெண்டு படேல்லை....."

"எதெல்லாம்....."

"இயக்கங்கள் எல்லாம் தனித்தனிய பிரிஞ்சிருக்கிறபடியால் தான் பிரச்சினை தீரக் கஷ்டம். ஒரே இயக்கமாய் ஒற்றுமாய் இருந்தால் இராணுவத்தைத் துரத்திப் போடலாம். எல்லா இயக்கமுமே நோக்கம் ஒன்றுதானே. பிறகேன் தேவையில்லாமல் நூற்றியெட்டுப் பேர்களில் இயக்கங்கள்?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இப்ப இருக்கிற இயக்கங்கள் எல்லாம் எப்பிடி ஒரே இயக்கமாகலாம் என்று நீ சொல்கிறாய்."

"எல்லா இயக்கங்களும் தங்களைத் தாங்களே கலைத்துக் கொண்டு ஒரு புதுப்பேரில் எல்லாரையும் உள்ளடக்கினதா பெரியஒரு அமைப்பை உருவாக்கலாம்......"என்றவள் சிறிது யோசித்துவிட்டு, "இல்லாட்டி இப்ப இருக்கிற பெரிய இயக்கத்தில சேர்ந்து ஒன்றாயிடலாம்....." என்றாள்.

"பெரிய இயக்கத்தை எப்பிடி தீர்மானிக்கிறது? பயிற்சி எடுத்தவர்களின் எண்ணிக்கையையும், வைச்சிருக்கிற ஆயுதங்களின் எண்ணிக்கையையும் பார்த்தா?"

"ம்.... அதில என்ன"

"அப்பிடியெண்டால் அரச இராணுவத்துடன் தான் எல்லோரும் சேர வேண்டும்."

"உங்களோடை கதைச்சு எனக்கு வெல்லேலாது......," செல்லச் சிணுங்கலோடு சரணாகதி யாகிவிடுகின்ற அவளது இனிமை மிகு ஆயுதம்.



"இல்லை மாலினி, நோக்கம் ஒண்டாயிருந்தாலும் செயற்படுகிற முறைகளில் ஆரம்பத்திலிருந்தே குறிக்கோளைச் சிதைச்சுவிடக்கூடிய நடவடிக்கைகளைக் கண்டு கொள்ளேலும். முடிஞ்சா அவற்றைத் திருத்தித் தான் சேர்த்துக் கொள்ளவோ சேர்ந்து கொள்ளவோ முடியும். எங்கட மக்களது நலமான வாழ்க்கை என்கிறது தான் நோக்கம். பிறகு ஒரு கட்டத்தில நாங்கள் விரும்புற முறையில தான் மக்களுக்கு நல்லபடியான வாழ்க்கை அமைய முடியும் என்கிற வெறியாக மாறிவிடக் கூடாது......."அவளுக்குப் புரிகிற வகையில தான் நான் சொல்லிக்கொண்டிருக்கின் றேனா என்ற சந்தேகம் உண்டாயிற்று. இடையில் நிறுத்தி அவளைப் பார்த்தேன். மாலினி என்னையே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் சொல்லும் விடயங்கள் பற்றியது தானா இந்த ஆர்வம் என்பது குறித்து சந்தேகம் மீண்டும் கிளம்பிற்று. எனது தரப்பில் நான் பேசிக் கொண்டே சாப்பிடுவது தான் தற்காப்பானது என்ற உணர்வுடன் அவள் பார்வையைத் தவிர்த்தபடி தொடர்ந்தேன்.

"தமிழன் இல்லாத நாடு இல்லை. தமிழனுக்கென்றொரு நாடும் இல்லை என்பது மாதிரியான காரணங்களுக்காக இந்தப் போராட்டத்தை நடத்தமுடியாது. இனவாத அரசுதான் எங்களின்எதிரியே தவிர சிங்கள மக்களல்ல. நாங்களும் உண்மையிலே பயங்கரவாதிகளாய்மா றிக் கொண்டு அரசைப் பணியவைக்க நினைக்கிறதும் சிங்களப் பொதுமக்களைக் கொன்று குவிக்கிற வழிமுறைகளிலெல்லாம் நாம் உடன்பட்டுப் போக முடியாது. இது எங்களை நாங்களே கொன்று குவிக்கிற மனநிலைக்கு போய் முடியும். பிடிக்காதவர்களையெல்லாம் கொலை செய்து விடவேணும் என்றாகி விடும். தமிழ்மக்களால் தவிர்க்க முடியாமல் தொடங்கப்பட்ட இப் போராட்டம் பிழையான பாதையில போய் சீரழிந்து விட்டுவிடக்கூடாது மாலினி. அது தான் முக்கியமானது........."

> நாங்கள் ஆசைஆசையாய் கனவு கண்ட தேசம்அழிஞ்சு கொண்டிருக்கிறதை கையாலாகாத்தனத்தோடை பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கே எண்ட கவலையைத் தான். வேறெண்டுமில்லை.

"ஒருத்தருக் கொருத்தர் முகத்தைத் திருப்பிக் கொண்டே வளர்ந்து எப்பிடி இதைச் சாதிக்கப்போகிறீங்கள்?"

"அப்படி ஒரு விரோதமும் வளரேல்லை மாலினி. முதல்ல இப்ப மூன்று இயக்கங்கள் ஒன்றுபட்டு ஒரே அமைப்பாய் இயங்கக் கூடிய வழிமுறைகள் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கினம். சரிவந்தால் கொஞ்சம் கொஞ்சமாய் ஒன்று சேர்ந்து போராடி வெல்லும் காலம் வரும்." பிறகு மௌனமாகச் சாப்பிட்டு முடித்தேன். கடைசியாக மாலினி தான் பேசினாள்.

"நீங்களும் கொஞ்சம் கவனமாயிருக்க வேணும் ராஜன்." என்றாள் கீழிறங்கிய குரலில். கையைக் கழுவிவிட்டு எழுந்தேன்.

"எவ்வளவு காலமாய்......?" அவளைச் சந்திக்கநேர்ந்த வியப்பு, வடிந்து விடாமல் வள்ளுவர் கோட்ட நிழல் ஒன்றில் அமர்ந்திருந்த போது வெளிப்பட்டது.

"முதலிலை உங்களைப் பற்றிச் சொல்லுங்க ராஜன். எங்கை தங்கியிருக்கிறீங்கள்.... என்ன பண்ணிறீங்கள்......"

"இங்கைதான் கோடம்பாக்கத்தில நண்பன் ஒருவன் வீட்டில தங்கியிருக்கிறன்...... என்ன பண்ணிறது எண்டு தெரியாததுதான் இப்ப உள்ள பிரச்சினை." என்னை அறியாமலேயே என்பேச்சில் விரக்தி வெளிப்படுவது தெரிந்து. அவள் முகபாவத்தைக் கவனித்து என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன்.

"இதில இனி யோசிக்க என்ன இருக்கு..... நாட்டு நிலைமையை உங்களாலயெல்லாம் இப்ப திருத்தஇயலாது. இன்னும் நிறைய அழியப்போகுது. விடாப்பிடியாய் அதில தலையிட நினைச்சு இன்னும் ஏன் உங்களை அழிச்சுக் கொள்ள நினைக்கிறியள். □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சேச்சே, விடாப்பிடியெல்லாம் ஒன்றும் கிடையாது மாலினி. என்ர பலம் எனக்குத் தெரியும் மாலினி. நாங்கள் ஆசை ஆசையாய்க் கனவுகண்ட தேசம் அழிஞ்சு கொண்டிருக்கிறதை கையாலாகாத் தனத்தோடை பார்த்துக்கொண்டிருக்க வேண்டி இருக்கே என்ற கவலைதான் வேறொண்டும் இல்லை இப்ப......"

யாரையும் சந்தேகத்துடன் விட்டுவிட விரும்பாத என் பழக்க தோசத்தில் மேலும் அவளுக்கு விளக்கமளிக்க முற்பட்டேன்.

"மக்களுடைய எதிர்காலத்தை நல்லபடி அமைக்க கூடியயுத்தம் ஒன்று தேவைதான். அப்பிடித்தான் நினைச்சு ஆரம்பிச்சம். ஆனால் யுத்தத்தின் பலன் மேலும்மேலும் அழிவுகள்தான் எண்டாக்குகிற பராக்கிரமசாலிகளின் பிடியில் தான் எங்கட மக்கள், அவர்களுடைய போராட்டம் எல்லாமே போயிட்டுது. என்னால இதை ஒப்புக் கொள்ளவும் முடியேல்ல: எதிர்த்து வாழவும் பலமில்லை..... இங்கை வேற இப்ப சொல்கிறார்கள்: நீங்கள் உங்கட நாட்டிற்குப் போய் விடுறது தான் நல்லதெண்டு......"

"இன்னும் ஏன் அரசியலிலை ஈடுபடுறதையே நினைக்கிறீங்கள்."

"அரசியல் எது மாலினி? ஒரு சாதாரண ஈழத்துக் குடிமகனா, நமக்கு எது வேண்டும் என்று தீர்மானிக்கிற உரிமை எனக்கில்லையா? எல்லா இடங்களிலும் மறுக்கப்படுகிறதே! ஒரு கற்கால வீரத் தமிழனாக அர்த்தமற்ற யுத்தத்தைப் பார்த்துக் கைதட்ட மாத்திரம் தானே நம்து நாட்டில் எனக்கு அனுமதிக்கப்பட்டிருக்கு......"

"முதல்ல உங்க வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொண்டு நாட்டைப் பற்றிக் கவலைப்படுகிறதை வைச்சுக் கொள்ளலாம் ராஜன்."

"ஏதோ நம்முடைய தேசத்தின் ஒரு பக்கத்தை என்ர தோழில தாங்கிக் கொண்டிருக்கிற மாதிரியும், நான் விட்டிட்டா தேசம் விழுந்து நொருங்கிப் போகும் எண்டெல்லாம் பிரமையில நான் இல்லை மாலினி...... மனச்சாட்சித் தொந்தரவுதான். தேசம் எக்கேடு கெட்டால் என்ன, நம்மால ஒண்டும் ஆகாது எண்டு சட்டெண்டு தனிமைப்படுத்திக் கொள்ள முடியேல்ல. கவலைப்பட்டுக் கொண்டிருக்கவேண்டியிருக்கு. இதுவும் இல்லாட்டித்தான் நீ நினைக்கிறமாதிரி சாமியாராகி இருப்பேன்."

சிரித்தது நான் மட்டும் தான் என்பதைக் கவனித்துக் கொண்டே கேட்டேன்

"உன்னைப் பற்றி ஒண்டும் சொல்லவேயில்லையே மாலினி"

"ஓம் ராஜன்! மூண்டு வயதில குழந்தை இருக்கு. பெயர் பிரமிளா. அவ அப்பா பி.எச். டீ முடிச்சிட்டு லண்டனிலை இருக்கிறார். உங்களுக்கு தெரியும் ராஜன், ரவியை...... ரவீந்திரன். எங்களுக்கு இரண்டு வருஷம் சீனியர்..... நானும் பாப்பா.வும் கூட லண்டனுக்குப் போயிடப்போறம்....... ம். அவ இனிப் படிக்கவும் வேணும்......"

"கோப்பாய் ரவிதானே மாலினி?"

"ஓமோம். தயா, ரட்ணம், லோகு, பாமா,

**தமிழ் மக்களது போராட்ட வரலாற்றில் நமபிக்கையோடு இறங்கி பின்னர் பல் வேறு காரணங்களால் வெவ்வேறு இடங்களில் சிதறிப்போயிருப்பவர்களின் மன உணர்வுகளை பொதுவாக அசட்டை செய்து விடுகின்ற இந்த சமூகச் சூழலில் இது. அவ் உணர்வுகளின் வெளிப்பாடாக இச் சிறுகதை லெளியாகி இருக்கின்றது. அந்த வகையில் சிறுகதை தமிழ் இலக்கிய களதத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. இச் சிறுகதை இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து இந்தியாவில் வசிக்கும் சிவகுமார் என்பவரால் எழுதப்பட்டு கணையாழி 1992 தை மாத இதழில் பிரசுரிக்கப்பட்டது. அதை நன்றியுடன் மறுபிரசுரம் செய்கின்றோம்.**

**ஆ-ர்**

நந்தினி எல்லோருமே இவர் இருக்கிற இடத்துக்குப் பக்கத்திலதானாம். அடிக்கடி சந்திக்கிறவையெண்டும் இவர் எழுதியிருக்கிறார்....."

"ரவி நல்ல அமைதியான ஆளெல்லே....... உன்னைப் பூப்போல நேசிப்பார். நீ லக்கி."

"நான் மட்டும்தானா லக்கி, அவரில்லையா?" வெள்ளையாகச் சிரித்தாள். அவள் அசட்டுத்தன்மாகக் கருதக்கூடிய சிரிப்பொன்றைச் சிரித்து வைத்தேன்.

"ஜெயக்குமார், விஜி, குமார், செல்வி, எல்லோருக்கும் கனடாவில் அகதிகளுக்கான அடையாள அட்டைகள் கிடைச்சிட்டுது...... கடிதம் போடுவினம்."

கொஞ்ச நேரம் அமைதியாக இருந்து விட்டுக் கேட்டாள்

"இங்கேயும் இப்ப பிரச்சினை தானே. ஏன் ராஜன் நீங்கள் கொஞ்சக்காலத்துக்கு வெளிநாட்டுக்குப் போய் இருந்திட்டு வரக்கூடாது?"

மனம் எங்கோ அலைபாய ஆரம்பித்திருந்ததால் எனக்கு அவள் கேள்வியை வாங்கிக் கொள்ள சிறிது நேரம் பிடித்தது. உண்மையில் அவள் கவலைப் படுமளவுக்கு எனது பத்திரமான எதிர் காலம் குறித்து நான் முடிவு செய்துதானாக வேண்டும் என்பது சற்று எரிச்சலாகக் கூட இருந்தது. எரிச்சல், என் இயலாமை, அல்லது தோல்வி எதனிலுமிருந்துதான் வருகிறதா் என்று தேட முயன்றேன். அவளுக்கு என் மனநிலையை விளக்கிவிட முடியுமா என்ற சந்தேகத்துடனேயே பதில் சொன்னேன்.

"தேசமும் மக்களும் உண்மையாகவே போராட்ட நெருக்கடிக்குள் சிக்கியிருந்த காலத்தில் வெளிநாடுகளுக்கு ஓடிப் போனவர்களையெல்லாம் துரோகிகளாகவே நம்பினேன் மாலினி. இப்பவும் எனக்கு மனத்தடைகள் உண்டு."

"இங்கே தனியாக இருந்து என்ன செய்யப் போறீங்கள்?"

"எதுவும் செய்யமுடியாது" சற்று நேர மௌனத்துக்குப் பிறகு சொன்னேன்:

"....ஆனால் தனிய இல்லை. அகதிகளாய் இங்க ஒண்டரை லட்சம்பேர் இருக்கிறம்."

"உங்களை எனக்கு விளங்கிக் கொள்ளேலாமல் இருக்கு ராஜன்."

"எனக்கும் தான்."

வள்ளுவர் கோட்டத்திலிருந்து நாமிருவரும் வெளியே வந்த போது, எனக்கு எதையோ இழந்திருப்பது போன்ற உணர்வு இருந்தது. இப்போதைக்கு அது என்னவென்று என்னால் நிட்சயமாகச் சொல்லிவிட முடியாதென்று ■ தோன்றியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ரோகணவிஜேவீரவின்

# சவாலும் சம்பிரதாயமும்.

கடந்த கார்த்திகை 13ம்திகதி யுடன் ரோகண விஜேவீர படு கொலைசெய்யப்பட்டு 3ஆண்டுகள் நிறைவுபெறுகின்றது. இலங்கையின் அரசியலுக்கும் சமூகத்திற்கும் அவரைப்போல் பாரிய சவால்விடுத்த வேறொருவர் கடந்ததசாப்தங்களில் இருந்ததில்லை என்று சொன்னால் அது மிகையாகாது. ஐ.தே. கட்சியினரும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியினருமே மாறி மாறி ஆட்சி செய்கின்ற சம்பிரதாய அரசியல்முறைக்கு இட்து சாரிகளின் வீழ்ச்சிக்குப் பின் தீர்மான கரமானதொரு சவாலினை விடுத்தவர் ரோகணவிஜேவீர தான். அவர் தவிர வேறொரு மாற்றுத் தலைமையாக உருவெடுக்கக் கூடியவராக இருந்த இன்னொருவர் என்றால் அது விஜய குமாரதுங்க என்று கூறலாம். ஆனால் அவர் இந்நாட்டின் துர்அதிஸ்ட கால கட்டத்தில் விஜேவீர அரசியலின் ஆயுதப்பிரிவான தேசப்பிரேமி மக்கள் இயக்கத்தால் (டீ.ஜே.வி.) படுகொலை செய்யப்பட்டார். அதன் பின் 1 1/2 வருடகாலம் சென்ற பின் அரசாங்கத்தின் ஆயுதமயப்பட்ட அரசியலினால் உருவாக்கப்பட்ட ஆயுதக்கும்பலினால் படுகொலை செய்யப்பட்டார். "இறந்து போனவர்களின் தவறுகளைப் பற்றிப் பேசுவதை இறைவனுக்கு ஒப்படைத்து விட்டு நாம் செய்யவேண்டியது அவர்களின் சரியானதைப்பற்றிப் பேசுவதே."- என்பது ஆபிரிக்கப் பழமொழி. எமது நாட்டினைப் போல் இறந்த பின் ஒருவரைப் பற்றிப் போற்றிப் பேசும் பண்பு வேறெங்குமே இல்லை என்று கூறலாம். சாதாரண ஒருமனிதனைப் பற்றிப் போற்றிப் பேசினால் அது தவறாகாது. ஆனால் இவரைப்போன்று நாட்டையே உலுக்கக் கூடியவகையில் அரசியலில் ஈடுபட்ட ஒருவரைப் பற்றி வெறுமனே போற்றிப் பேசுவது, அவருக்கே நாம் செய்யும் அவமரியாதையாகும்.அவர் போன்ற ஒரு பாத்திரத்தை கடுமையானதும் பூரணமானதுமான ஒரு விமர்சனத்துக்கு உட்படுத்தாமல் விடுவது எதிர் கால அரசியலுக்கு சரியானதொரு பாதையை அமைக்காமல் விடுவதற்கு வழிகோலிவிடும். விஜேவீர பற்றியோ, அவரது இயக்கமான ஜே.வி.பி. பற்றியோ சரி அல்லது பிழை என்று கூற முயல்வதல்ல இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1964இல் சோவியத் ரஷ்ஷியாவில் இருந்து வந்த காலம் தொட்டு விஜேவீரவின் அரசியலில் பிரதானதொரு அரசியல் குறிக்கோள் இருந்தது. அதாவது புரட்சிகர இயக்கம் ஒன்றைக் கட்டி எழுப்புவதன்



ரோகண விஜேவீர: முடிந்துபோன சவால்

மூலம் அரசியல் அதி காரத்தைக் கைப்பற்றுவதென்பதாகும். 1989 கார்த்திகை 13 ம்திகதி முடிந்து போன முடிந்து போன 30 வருடகால அரசியல் வாழ்வில் அரசியலதிகாரம் என்பது அவரது குறிக்கோளாக இலட்சியமாக மையப்பட்டிருந்தது. 23 வயது இளைஞராக விஜேவீர இருந்த காலத்தில்வாழ்ந்த அரசியல் வாழ்க்கை முறையானது அன்று நிலவிய சம்பிரதாயபூர்வமான அரசியல் கட்சிகளின் சீரழிந்த பாதையில் வீழ்ந்து விட்ட இடதுசாரிகளின் அரசியலுக்கு கடும் விமர்சனமாகவும் அமைந்தது. புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்ட குழுக்களுக்குள் அம்பினைப் போல ஊடுருவி அவற்றில் இருந்து செயற்திறன் மிக்க இளைஞர்களை தன்பால் ஆர்கசித்துக்கொள்ள அவரால் முடிந்தது இதனாலேயே. அவருக்கு இரவு பகல் இரண்டும் ஒன்று தான். நடுச்சாம வேளைகளிலும் ஒரு புத்தகக் கட்டுடன் வந்து இரகசியமான குரலில் பேசிவிட்டு பொழுது விடிவதற்கு முன்னரே மறைந்து போவது அவருக்கே உரிய வேலைப்பாணியாகும். இரகசியப்பாணி வேலைமுறைக்கு அவர் கொடுத்த முக்கியத்துவம், அவருடைய முழுஇயக்கத்திலுமே வியாபித்திருந்தது. ஆரம்பகாலத்தில் பிரபல்யமடைவதை விஜேவீர தவிர்த்து வந்தார். அவருடைய நெருங்கிய உதவியாளர்கள் இறுதிவரைக்கும், சிலர் இன்றும் கூட பிரபல்யப்படுவதைத் தவிர்க்கின்றனர். ஏனைய அரசியல் செயற்பாட்டாளர்கள் தம்மைப் பிரமல்யப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகளைப் பார்க்கும் போது, அன்று தம் தலைவரின் அந்த முறைமையை மிகச் சரியானதென்றே இன்னமும் கருதுகின்றனர். விஜேவீரவினால் நிறுவப்பட்ட அர்ப்பணிக்கும் சம்பிரதாயம் என்பது, எப்போதும் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கிலான இரகசிய இயக்கமொன்றைக் கட்டுவதற்காக சகலதையும் ஒருமுகப்படுத்துவதாகும். அப்படிப் பார்க்கும் போது அதைப்போன்ற அர்ப்பணிப்புடனும் தியாக சிந்தையுடனும் ஒரு அரசியல் சக்தி உருவாகக்கூடிய சாத்தியக்கூறுகள் கண்களுக்கு தென்படுமளவிற்கு இன்று இல்லையெனக் கூறலாம்.

ஆயினும் முயற்சியும் அர்ப்பணிப்பும் தான் எல்லாம் என்று சொல்லிவிட முடியாது. இவை இன்றியும் ஒரு சரியானசெயலைச் செய்ய முடியாது. அதே போல் இவையிரண்டும் இருப்பதற்காக, செய்யும் எதனையும் சரியென்று சொல்லிவிடவும் முடியாது. இவற்றால் தெரிவது என்னவெனில் அவருடைய இலட்சியத்தை நோக்கிய நேர்மையான பற்றுதல் மட்டுமே.

1968 – 1970க்குஇடைப்பட்ட காலத்தைப் போல் 1985 –1990 வரையான கால இடைவெளியிலும்கூட விஜேவீரவின் இயக்கத்திற்கு சமாந்தரமாக பல புரட்சிகர இயக்கங்கள் உருவாவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அவற்றில் சில மிகக்குறுகிய காலமும் சில அவற்றை விடக் கூடியகாலமும் செயற்பட்டு பின்னர் கரைந்து அழிந்து பொயின. அக்குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்களின் தலைவர்கள் எவருமே இன்று புரட்சிகர அரசியற்செயற்பாட்டில் இல்லைஎன்றே கூறலாம். அவற்றில் பலபேர் சொந்தத் தொழில் தேடிக்கொண்டவர்களாயும், தன்னார்வக்குழுக்கள் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களை நடத்திக் கொண்டும், சீர்திருத்த வேலைகளைச் செய்தவண்ணமும் உள்ளனர். அவர்களுள் இறந்து போனவர் விஜேவீர மட்டுமே. ஏனையோர்களைப் போலல்லாது இறுதி வரைக்கும் அரசியலதிகாரத்தைப் பிடிக்கும் நோக்கில் அவர் செயற்பட்டதே அதற்குக் காரணமாகும்.

சம்பிரதாயபூர்வமான அரசியல் முறைக்கு எதிராக அவர்தொடுத்த நேரடியான சவாலென்பதும் கூட அதுவேயாகும். இந்நாட்டில் முறைக்கு முறை அதிகாரத்திற்கு வந்த அரசியல் கட்சிகள் இரண்டுக்கும் எதிராக அரசியலதிகாரத்தைப் பிடிக்கும் நோக்கிலும் சவால் விடுக்க முடியும் என்பதைக் காட்டியவரும் அவரே. அத்துடன் தமது அரசியலின் முதுகெலும்பாகவும் குறிக்கோளை நோக்கி எய்யக்கூடிய கூரிய அம்புகளாகவும் அவர் தேர்ந்தெடுத்தது இந்நாட்டின் இளைஞர்களையேயாகும். அநீதியால் பாதிக்கப்பட்ட அமைதியற்று அலைந்த இளம் சந்ததியினரை புரட்சிகரமான சமூக மாற்றத்திற்காக ஈடுபடுத்த முடியும் என்பதை அவர் மீண்டும் நிரூபித்தார்.

சுருக்கமாகச்சொன்னால் விஜேவீரவின் அரசியற்சவாலை மூன்றுகட்டங்களுக் குள் அடக்கிச் சொல்லிவிட முடியும். அவையாவனஅரசியலத்காரத்தைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு அரசியலியக்கத்தை சம்பிரதாயபூர்வமான அரசியலுக்குப் புறம்பாக உருவாக்குதல். அதன் தலைமைப்பாட்டுச் சக்தியாக இளம் சந்ததியினரை ஈடுபடுத்தல். குறிக்கோளுடன் ஆத்மார்த்தமாக இணைந்த அர்ப்பணிப்பையும் தியாக உணர் வையும் அதற்கான உயிர் நாடியாக ஊக்குவித்து வளர்த்தல்.

இவ் அரசியற் சவாலுக்காக இவர் முன்வைத்த வேலைமுறையானது எவ்வாறானது? ஆரம்பகால விஜேவீரஇஸம் என்பதற்கூடாக முன்வைக்கப்பட்டது போல் இது மக்களால் மக்களுக்காக செய்யப்படும் அரசியற் போராட்டம் அல்ல. மாறாக இரகசியமாக்கப்பட்ட இயக்கமொன்றால் மக்களுக்காகச் செய்யப்படும் அரசியற் போராட்டம் என்பதே ஆகும். இவ் அரசியலானது இரகசியமானதும் இறுக்கமாக ஒழுங்கமைக்கப்பட்டதுமான, தேவைக்கேற்ப ஆயுதமயப்படுத்தப்படக் கூடியதுமான ஒரு வழிமுறையின்மீதே நம்பிக்கைவைத்தது. அத்துடன் சரியானதும் புனிதமானதும் தமது வழிமுறையொன்றே எனவும் உறுதியாகவும் நம்பியது.

சுதந்திரமான கருத்துகளுக்கோ விஜேவீரவின் கருத்துகளுக்கு புறம்பான எந்தவித கருத்துக்களுக்கோ "விஜேவீர இஸ"த்துள் இடமிருக்கவில்லை. அதுமட்டுமின்றி ஏனையவை பிற்போக்கானவையென்றும் துரோகத்தனமானவையென்றும்முத்திரைகுத்துவது அவரது வழிமுறையாக இருந்தது. இலங்கையிலிருந்த இடதுசாரி இயக்கங்களின் ஆரம்பகாலத்தின்பின்னர், அக் கட்சிகளுக்கு, ஏனைய எவ்வகையான பரந்துபட்ட மக்களமைப்புகள் பற்றியும் சரியான கருத்துப்போக்குகள் இருக்கவில்லை. விஜேவீரஇஸத்தின் தீவிரவாதக் கருத்துப் போக்கினாலும் வளர்க்க ப்பட்ட, சுயாதீனமான மக்களமைப்புகள் தேவையற்றவையெனும் கருத்தின் தோற்றப்பாடுகள் இன்னும் இன்றுள்ள இடது சாரி இயக்கங்களுக்குள் காணக் கூடியதாக இருக்கின்றது. மக்ளிடம் இருந்து இயல்பாக உருவாகிவரும், அதேவேளை தம்முடன் நேரடியாகத் தொடர்பற்ற அல்லது தம்மால் கட்டுப்படுத்தமுடியாத எதுவிதமான அமைப்புகளும் பிற்போக்கானவை எனவும் அவற்றோடு மாற்றாந்தாய் போல் செயற்படும் போக்கும் இடது சாரிஇயக்கங்களுக்குள் குறைவின்றி இருந்தது.

அத்துடன் அடுத்த முக்கியமான கருத்தாக இருந்தது, புனிதமான தமது இலட்சியத்தை அடைவதற்கு எவ்விதமான வழிமுறைகளையும் கையாளுதல் சரியானதென்பதாகும். இலட்சியத் தினால் வழிமுறை நியாயப்படுத்தப்படும் எனும் சித்தாந்தத்தினை இது அடிப் படையாகக் கொண்டது. பிற்காலத்தில் விஜேவீரஇஸமானது நியாயப்படுத்தக் கூடிய வன்முறைச் செயற்பாட்டி லிருந்து தற்காப்பு வன்முறைவடிவத்தை எடுத்து இறுதியில் அதிகாரத்துவ வன்முறை எனும் செயற்பாட்டு வடிவத்தையே வளர்த்துக் கொண்டது. தேசபக்த யுத்தம் என்னும் கருத்தமைவுடன் விஜேவீரவினால் முன்வைக்கப்பட்ட யுத்த வடிவமானது சிலகாலத்துக்கு முன்னர் அவராலேயே தவறு என்று கூறப்பட்ட பிரபாகரனின் வன்முறைவடிவமேயாகும். அதனை நிரூபிக்கும் வண்ணம் அவருடைய நெருங்கிய சகாவானவரும் ஆரம்பகால ஜே. வி. பி. உறுப்பினருமான நந்தன மாரசிங்க என்பவரை விஜேவீரவின் தேசப்பிரேமி ஆயுதக் குழுவினர் சுட்டுக் கொன்றனர்.

தமது அரசியலெதிரிகளைக் கொலை செய்வது மட்டுமன்றி சாதாரண மக்களுக்கும் எச்சரிக்கை விடுக்கும் பாணியிலான மரணதண்டனையை வழங்குவதும் அந்தமுறையாகும்.

சமூகத்தின் வளர்ச்சிக்கு தேவையான அமைப்புகளின் வளர்ச்சிகளையும் பீதிக்குள்ளாக்கி சிதைத்துவிட்டு விஜேவீர இஸம் நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றும் கனவுடனேயே வளர்ந்து சென்றது. எழுந்து வந்த அரசியலலையுடன் தான் தனது இலட்சியத்தை அடைவதே அதன் முதலம்சமாக இருந்தது. இந்திய ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து, திடீரென்று இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டிற்கு தாவியதுடன் புளட் இயக்கத்துடன் தொடர்புவைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சிங்கள இடது சாரிகளைப் படுகொலைசெய்தனர். பின்னர் தாம் புளட் உடன் உறவுகளை வளர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர். தனக்கு சாதகமான எதுவும் சரியானது என்னும் கருத்தே அங்கு நிலவியது. 1989 கார்த்திகையில் விஜேவீர படுகொலை செய்யப்பட்டபோது விஜேவீரஇஸத்தின் அரசியல் சம்பந்தமாக பயன்படுத்தலும், பலாத்தகாரத்துக்கு உட்படுத்தலும் என்னும் மூலோபாயமே வளர்க்கப்பட்டிருந்தது.

உண்மையான சமூகமாற்றத்துக்கு மிக அவசியமான மக்களமைப்புகளை முழுமையாக அழித்துச் சிதைத்துவிட்டது. அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட அரச பயங்கரவாதத்திற்கு எவ்வகையிலும் முகம் கொடுத்து சமாளிக்க முடியாதவாறு முழுச் சமூகமுமே தடுமாறவேண்டிய நிலை இதனால் ஏற்பட்டது.

விஜேவீரவின் வாழ்க்கையைப்பற்றியும் அரசியலைப்பற்றியும் இன்று பேசுவது வளர்ந்து வரும் அரசியல் சூழ்நிலையினுள் மிக முக்கிய இடத்தைப் பெறுவது ஏனெனில் சம்பிரதாயபூர்வமான அரசியல் கட்சிகள் பற்றி மக்கள் மனதில் விரக்திநிலை மிக மோசமாக வேரோடி இருப்பதேயாகும்.

ஐ.தே.கட்சியைத் தோற்கடிக்கும் திறமையை சிறீலங்கா சுதந்திரக் கட்சி மிக வேகமாக இழந்து வருகின்றது. சம்பிரதாயபூர்வமான வட்டத்தினுள்ளாக அத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ற்கு சவாலாகப் புறப்பட்ட காமினி லலித் கோஷ்டியினரும் இன்று நிட்சயமற்ற எதிர்காலத்துடனேயே இருக்கின்றனர். இளம் சந்ததியினரின் அரசியல் குரலொலி இன்று மிகவும் சுயாதீனமான பாதையினையே தேடுகின்றது. ஆனால் அத்தேடுதலின் மூலம் கடந்த 20 ஆண்டுகால விஜேவீரவினால் நடத்தப்பட்ட இளைஞர் அரசியலை விமர்சனரீதியாக கேள்விக்குள்ளாக்குவதும் மிக அவசியமானதாகும்.

**சுனந்த தேசப்பிரிய. (யுக்திய -கார்த்திகை.15)**

**தமிழில்-எஸ். சுவாமிநாதன்.**

இக் கட்டுரை ஆசிரியர் ஜே.வி. பி யின் ஒரு பக்கத்தையே ஆராய்ந்துள்ளார். அவ் வியக்கத்தில் இருந்த நல்ல அம்சங்களிலேயே கூடுதலாகக் கவனம் செலுத்தப் பட்டிருக்கின்றது. மேலும் ஜே.வி.பி இன்தவறுகள் நடைமுறை சார்ந்தவையாகவே கட்டுரை ஆசிரியரினால் கூடுதலாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இப் போக்கு இன்று அனேக வளர்முகநாடுகளில் போராட்ட இயக்கங்களில் காணப்படும் போக்காகும். இதை, விஜேவீராவின் தனிப்பட்ட நடத்தைகளைக் காரணம் காட்டி விளக்க முற்படுவது மற்றும் ஒரு தவறாகும்.

இளைஞர் இயக்கங்களின் பலத்தையும் பல வீனத்தையும் எமது நாடு எத்தனையோ தடவை கண்டாயிற்று. அதன் பின்னரும், இளைஞர் சக்தி பற்றி அதீதமான கணிப்பீட்டையே இக் கட்டுரையில் காணக்கூடியதாக இருக்கின்றது. ஜே. வி. பி இன் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான நிலைப்பாடு பற்றி இதில் தவறவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இருப்பினும் இக் கட்டுரையை வெளியிடுவதன் நோக்கம் தமிழ் வாசகர்களுக்கு தென்பகுதி பிரச்சினைகளை அறியப்படுத்துவதேயாகும்

குறிப்பு: ஜே.வி.பி இன் இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு என 1985-86 காலப் பகுதியில் மேற்படி இயக்கத்தால் வெளியிடப்பட்ட "ஈழவிடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் பங்கு" என்னும் நூலையே கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந் நூலில் பிரிவினையை இந்தியா எதிர்ப்பதனால், இந்தியா, இலங்கைப் போராட்டத்தில்முற்போக்கான பாத்திரம் வகிப்பதகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கனடாவில் அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்த

# புதிய சட்டம்

கடந்த ஏழு மாதங்களாக பலமான வாதப் பிரதிவாதங்களின் மத்தியில் சர்ச்சைக்குட் பட்டிருந்த கனடியக் குடிவரவின் திருத்தச் சட்டமான சி.86 1993 தை 31ம் திகதியுடன் அமுலுக்கு வருகின்றது. கனடிய நாடாளுமன்றமும், செனட் சபையும் இச் சட்டமூலத்தை ஏற்றுக் கொண்ட பின் கடந்த டிசம்பர் 17ம் திகதி கவர்னரின் அங்கீகாரம் வழங்கப்பட்டதையடுத்து, இது சட்ட அந்தஸ்தினைப் பெற்றது. கவர்னரின் அங்கீகாரத்தைப் பெற்றதையடுத்து அமைச்சர் பகிரங்கப் படுத்தியுள்ள மற்றொரு கருத்து ஏற்கனவே அங்கு சென்றிருப்பவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (புதிய அகதிகளின் கைவிரல் அடையாளங்கள் அவர்கள் பிரஜா உரிமை பெற்றதும் அழிக்கப்படும் என்ற சிறு திருத்தத்தைத் தவிர அமைச்சர் எந்த வித மாற்றங்களுக்கும் அனுமதிக்கவில்லை.) ஏற்கனவே இங்கு அகதி நிலை கோரி, இன்னமும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கும் மனுக்கள், புதிய சி. 86 சட்டத்தின் கீழேயே விசாரிக்கப்படும் என்று அமைச்சர் வால்ட் கூட் கூறியிருக்கிறார். சி. 86 சட்டமானது பல்வேறு வகையிலும் அடிப்படை மனித உரிமை மீறும் ஒன்று என பலதடவை பல்வேறு நிறுவனங்கள் சுட்டிக்காட்டி உள்ளன. ஆகக் குறைந்த சட்டவிதிகள் கூட மறுக்கப்பட்டு, அகதிநிலை கோரும் இடத்தில் வைத்தே உடனடி விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கும் அதிகாரம் குடிவரவுத்துறை சிரேஸ்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு அகதிநிலைக் கோரிக்கையாளரை அவரது கோரிக்கையை நிராகரித்து திருப்பியனுப்பும் அதிகாரம் இந்த அதிகாரிகளிக்கு இனிமேல் உண்டு. பாதுகாப்பான நாடு என்று கூறப்படும் அகதிகளை ஏற்றுக்கொள்ளும் மற்றொரு நாட்டினூடாக கனடா வந்து அகதிநிலை கோரும் ஒருவரை, அந் நாட்டில் சென்று அகதி நிலை கோருமாறு திருப்பி அனுப்ப முடியும்.




வெளிநாடுகளில் உள்ள கனடியத் தூதரகங்களில் விண்ணப்பங்களைக் கையளித்து நேர்முகவிசாரணையை முடித்துக்கொண்டவர்கள் மாத்திரம் பழைய சட்டத்தின் கீழ் கனடாவிற்குள் வர அனுமதிக்கப் படுவர் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் 1993ம் ஆண்டு 250,000 வெளிநாட்டவர் (குடிவரவாளர்கள், அகதிகள்) கனடாவிற்குள் வரமுடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். மறுபுறத்தில் தனித்தியங்கும் குடிவரவாளர்களை பத்து சதவீதத்தாலும் வியாபாரக் கூடி வரவாளர்களை 15 சதவீதத்தாலும் அமைச்சர் அதிகரித்துள்ளார். மேற்கூறிய இருவருக்கும் ஏற்கனவே 75,000 இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது இப்போது சுமார் 150,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் விடயத்தில் திறந்திருந்த கதவு, மூடப்பட்டு இரட்டைப் பூட்டுகள் போடப்பட்டுள்ளதாக கனடாவில் இருந்து வெளிவரும் தமிழர் தகவல் கூறியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## கைப்பிரதி

அக்கணத்தின் பதிலை
ஏற்க வலுவற்று
கேள்விக்குள்ளாயிற்று என் காலம்....

தீக்கருக்கில் உருகும் மெழுகுபோல
நெடுநேரம் காத்திருந்த வழிப்போக்கன்
நான்.....

நினைவற்றுத்தெறித்த
புதிய முகமொன்றைக் காணும் பயணியாய்
அவசரமாய்த் தலைகவிழ்ந்து நடந்தது
மௌனம்......

இறுகிப்போயிற்று பாறை மீண்டும்
அஞ்சிச் சரணடைந்து
கூண்டுக்குள் கிடக்கும் விலங்கு போல....

எதிரே கிடந்தது
இறந்தகாலத்தின் பெருமூச்சாய்
பாதை தவறவிட்ட வண்டிக்காரன் தடம்.....

எத்தனை முறை துரத்துவது முன்னோக்கி
மனதை
இப்போதைக்கு அறிந்து கொள்ள
கிடைத்த கனவுகளும் சில கவிதைகளும்....

இப்படி இனி
எப்போதும் எழுதமுடியாமற்போய்
சில சொற்களும் பெயரொன்றும்
நினைவில்.....

–சகாதேவன்–

## பஞ்சத்துள் புதையுண்ட நெஞ்சங்களே...!

தாடிக் கிழவன் ஒரு
தத்துவம் தந்திருக்கான். வா-
கோடித் திண்ணையில
கூடிப் படித்திடுவம்.
நாடி தளர்ந்து நைந்து
மனம் வாடி மிகவும் வெந்து
ஏனொரு பேடி போல்-அந்தக்
கோடியிற் போய்க் குந்திவிட்டாய்.

வா-
தாடிக் கிழவன் ஒரு
தத்துவம் தந்திருக்கான்.
கோடித் திண்ணையில
கூடிப் படித்திடுவம்.

ஓடித் திரிந்து நாளும்
உடல் முறிய நாம் உழைத்தும்
ஆடியடங்கிப் போய்
அடுப்பங் கரையினிலே
கூழுக்கும் நாதியற்றுக்
குடங்கிப் படுக்கையிலே

கோடி சேர்த்துப் பெரு
மாடிகட்டி மடங்கட்ட
போடியார் பொக்கிஷத்தில்
பொன்னும் பொருளும் வந்து
தேடிக்குவிந்த விந்தை
தெளிவாய் விளக்கியிங்கு
கோடிட்டுக் காட்டிக்
கொடுத்திட்டுப் போயுள்ளான்.

வா-
தாடிக்கிழவன் ஒரு
தத்துவம் தந்திருக்கான்,
கோடித்திண்ணையில
கூடிப்படித்திடுவம்.

கல்லாய்க் கிடந்த இக்
காணியைக் கிழறி
நெல்லை விதைத்து நிதம்
நீர் பாச்சி-அதைப்
பிள்ளைபோல் வளர்த்துப்
பயிராக்கி-
இன்னும் பக்குவமாய் அறுத்துப்
புடம் போட்டுப்
பொட்டலாய் ஒரு புறத்தில்
குவித்து வைக்க
செட்டி-
மெல்ல நடந்து வந்து
வேட்டியை மடித்துக்கட்டி
வெத்திலையைத்துப்பி
அள்ளி அத்தனையையும்
வண்டிலில் ஏற்றிக்கொண்டு- பாகன்
மாட்டை விரட்ட
இவர் ஓட்டமாய் போயிடுறார்.
சதங்கை ஓசை அடங்கித்
தூசிப்படலம் மறையும் வரை-
வெகு தூரம் வரை
மூக்கில் விரலைவைத்து
நாம் ஏக்கமாய்ப் பார்த்திருக்க.

வட்டாரங் கூட்டி மிக
வடிவாய்ப் பொங்கலிட்டுப்
பட்டாசு வெடி வெடிக்கப்
படையல் செய்து
பொட்டும் பட்டுமிட்டொரு
வட்டம் வலம் வந்து
கும்பிட்டு-
"நட்டம் நமக்கில்லை,
நல்லது கடவுளே
நமஸ்காரம் என்பார்,
நட்ட நடு வெயிலில்
நாம் நின்று உழுததினால்.

பட்ட கடன் துன்பம் பழுவுடன்
கெட்டது நமது குடி
சொட்டும் மிச்சமில்லை
சொந்தமென்றெமக்கிங்கு.
இறப்புக்கும் பிறப்புக்கும் பேதம் இல்லை
எமக்கின்று இழப்பதற்கென்றோ எதுவும்
இல்லை.
உழைப்பைத் தவிர ஒன்றுமே இல்லை.
ஓ! இவ்வுலகம் எமக்கில்லை.

–மதுரகவி–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்த ஊரின் கதை இதுதான்

நட்சத்திர ஒளியையும் வீணாக்கிவிட்ட
அங்கலாய்ப்பு அவனுக்கு.
பற்ற வைத்த கைவிளக்கில் துளியேனும்
ஈரமில்லை.
அரைநொடியில் அணைந்துவிட்டதே!
கும்மிருட்டு.
மின் மினிப்பூச்சியையும் காணோம்.
அவன் அந்த இரவைச்
சபித்துக்கொண்டான்,
ஆசைதீர!

பல்லை நறுமிக்கொண்டு சாய்ந்தான்
அப்படியே.
காலை வந்தது பேனாவைத் தூக்கினான்.
மளமளவென்று எழுது என்றான்.
என்ன அடமந்தம், ஈரமில்லை இதற்குள்ளும்.
கதையைக்கேள்! கடிந்துகொண்டான்.
நடுரோட்டில் இரத்த வெள்ளம்,
அதன் நடுவே ஒரு மனிதன்.
அருகில் ஒரு காகித மட்டை.
"இவனொரு துரோகி "
விழிப்பாய்த் தெரிந்தது.

பேனா நிமிர்ந்தது.
தண்டனைகொடுத்தவன்
யாரெனக்கேட்டது இறுமாப்பாக,
இதுதான் இந்த ஊரின் சோகக்கதை
என்றான் அவன்.

ஈரம் வந்தது பேனாவுக்குள்
எழுதத்தொடங்கியது அந்தச் சோகத்தை
இருள் வருவதற்கு முன்.

–சிநேகலதா–

---

# குருதிக்கோலங்கள்

நேற்றையைப் போலவேதான்
இன்றும்.

அந்தக் கரிய இரவுகளும்
இருள் நிகழ்வுகளும்
இன்னமும் எங்களின் மேல்
ஊர்ந்து கொண்டேயிருக்கிறது.

விடிந்தால்
இங்கே மிஞ்சிப்போய்க்கிடப்பது
கிழிந்த ஒப்பந்தங்களும்
அரைகுறையாய் அவசரத்தில்
எரிக்கப்பட்ட மனிதர்களுமே.

மௌனத்தை மனதில்
மூட்டையாய்க் கட்டிக் கொண்டு
மௌனித்துப்போன-எங்கள்
மண்ணின் பசும்புற்தரைகளில்,
பனித்துளிகள் எச்சமிட்ட
அதிகாலைப் பொழுதுகளில்,
உறங்கிப்போன மனிதம்
மீண்டு....
மீண்டும் எழும்.

நேற்றைய இரவில் தப்பிய மனிதர்கள்
வீதிக்கு வெளியே தலையைநீட்ட
வானிலிருந்து குண்டு முட்டைகள்
பூமியில் குழிதோண்டி
அக்கினிப்பூக்களை
பிரசவிக்கும்.

மறுபடியும் மறுபடியும்
இருள் கவிழும்,
இரவுகள் தொடரும்.

துப்பாக்கியைச் சுமந்த
மனிதர்கள்
வெளியே வருவார்கள்.
ஷெல்,
ஒளியைச் சுமந்து
மனிதத்தைக் கிழிக்கும்.

நேற்றையைப் போலவேதான்
இன்றைய விடியலின்
முகத்திலும்
சிவப்பு சிவப்பாய்க்
குருதிக்கோலங்கள்.

–ஐ.ரவிவர்மன்–

# அர்த்தங்கள்

யுத்தம் என்று சொன்னார்
யுகத்தினையே கொன்றார்.
புனிதயுத்தம் என்றும் சிலர்
புவியை அசுத்தம் செய்வர்.

பாலை தன்னில் வசந்தம்
பாங்காய் வந்தபோதும் மனிதர்
வெள்ளை மனங்கள் தன்னில் சில
புள்ளி கறுப்பாய் தோன்றும்.

பணத்தால் எதுவும் இயலும்
பிணத்தைக்கூட நாளும்
காசு கொடுத்தே நம்மில்
கலங்கச்செய்ய இயலும்.

பள்ளிக்கூடப் படிப்பிலுமே
பயிற்சியளிப்பர் போருக்காய்
வெள்ளி வேண்டிப்பிறரை
வேண்டாவெறுப்பாய் நடத்துவர்.

இயந்திரமாய் சூரியனும் இங்கு
இயங்குகின்ற வேளையிலும்
தாத்தாமாரும் பேரர்களும் உலகில்
தமிழைக்காக்கப் போரிடுவர்.

ஏழுவானம், பூமி, நரகம் என்றும்
ஏட்டிலெல்லாம் படித்துள்ளோம்
எட்டாவது நரகத்தை நம்மில்
எவருக்குத்தெரியும் புவியில்?

சத்தியத்தைக் காக்கத் தினமும்
சத்தியாக்கிரகங்கள் வேண்டும்
உத்தமர்கள் உலகில் நாளை
உதயமாகும் வழிகள் சொல்வோம்.

–எம்.எச்.எம். அசீம்–

Registered No: P 529. Published by Aruvi Publishers, P.O.Box 1354, Colombo, Sri Lanka.
Printed at C.R.C. Press, Ratnapitiya.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Taste the Tropics

## Pure, Natural Fruit Products from Sri Lanka




MD

**LANKA CANNERIES LTD.**

Narahenpita, Colombo 6, SriLanka.
Telex: 21537METALIX CE, Fax: 94-1-580721
Telephone: 588425, 585960, 587618, 586622.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்